# உதயன்

30 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 070 வள்ளுவர் ஆண்டு 2044 தை 22 திங்கட்கிழமை (04/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily




மீண்டும் அசத்தியது ஆஸி.

23

இந்திய அமெரிக்கருக்கு உயரிய விருது

08



மாலியில் இன ஒடுக்குமுறை

09



சோதனைச் சாவடியின் மீது மனிதக் குண்டுத் தாக்குதல்

10



# அரச காணிகளின் அதிகாரம் வடக்கு ஆளுநரின் கையில்



**வடக்கிலுள்ள அரச காணிகளைப் படையினருக்கு வழங்குவதில் தீவிரமாக இருக்கும் ஆளுநர், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வடக்கிலுள்ள அரச காணிகள் கையகப்படுத்தப்படலாம்.**

யாழ்ப்பாணம், பெப்ரவரி 4

வடமாகாணத்தில் உள்ள அரச காணிகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளார் வடமாகாண ஆளுநர் மேஜர்ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி. நாவற்குழியில் புதிதாக சிங்களக் குடியேற்றமொன்று அமைக்கப்பட்டுவரும் நிலையிலும், அரச காணிகளை படையினரின் பாவனைக்காக கையகப்படுத்தும் நடவடிக்கைகள் முனைப்புப் பெற்று வரும் நிலையிலும் அவசர அவசரமாக அரச காணிகளின் அதிகாரத்தை ஆளுநரின் கைகளில் ஒப்படைத்தமை தமிழ் மக்களிடையே பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில் வடக்கு மாகாணத்திலுள்ள அரச காணிகளின் பயன்பாடு தொடர்பாக நடவடிக்கைகளை முற்றுமுழுதுமாகத் தீர்மானிக்கும் அதிகாரம் ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் விசேட பணிப்புரைக்கமைவாகவே இலங்கையின் வேறெந்த மாகாண ஆளுநருக்கும் இல்லாத

பார்க்க பக்கம் 04

## தமிழர் மீது அரசு அடக்குமுறை; சர்வதேச நடவடிக்கை அவசியம்

### கூட்டமைப்பு கோரிக்கை

ஜொகன்னஸ்பேர்க், பெப்.4

தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவரும் அடக்குமுறை நிகழ்ச்சி நிரலை கைவிடுவதற்கான அழுத்தங்களை சர்வதேசம் வழங்க வேண்டும். குறிப்பாக இலங்கையரசு இது தொடர்பில் ஆக்கபூர்வமாகச் செயற்பட ஐ.நா. மனித உரிமைகள் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டமைப்பின் தென்னாபிரிக்கப் பயணத்தை நல்லிணக்க அறிகுறியாக அரசு காண்பிக்க நினைப்பது தவறானதாகும். -இவ்வாறு தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புக் குழு ஒன்று தென்னாபிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது.

பார்க்க பக்கம் 04

## அமெரிக்கப் பிரேரணை; ஆதரிக்க இந்தியா முடிவு

### கொழும்பு மீது கோபமே காரணம்

புதுடில்லி, பெப்.4

இராஜதந்திரச்சமர் என வர்ணிக்கப்படும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்க வல்லரசு நாடு கொண்டுவரவுள்ள பிரேரணையை இந்தியா இம்முறை ஆதரிக்குமென அறிய முடிகின்றது.

ஜெனிவா இராஜதந்திரச் சமர் ஆரம்பமாவதற்கு முன்னரே அங்கு சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை விடயத்தில் டில்லியின் ஆதரவைப் பெறுவதற்கு வாஷிங்டனும், கொழும்பும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டுவரும் நிலையிலேயே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, கடந்தமுறை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த காட்டமான பிரேரணையை வலுவிலக்கச் செய்த இந்தியா, இம்முறையும் இலங்கைக்கு எதிரான பிரேரணையின் நகலை அமெரிக்காவிடம் கோரியுள்ளது என அறியமுடிகின்றது.

அண்மையில் நடைபெற்ற இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுவின் எட்டாவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் டில்லி சென்றிருந்தவேளை, ஜெனிவா பிரேரணையை தமது அரசு ஆதரிக்கவுள்ள விடயத்தை இந்திய அதிகாரிகள் கோடிகாட்டியுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

கடந்தகால சம்பவங்கள் தொடர்பில் இலங்கை பொறுப்புக்கூறும் கடப்பாட்டை முழுமையாக வெளிப்படுத்தும்வரை

பார்க்க பக்கம் 04

## அரசின் ஆயுளை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பா?

### முடிந்தால் நடத்துங்கள்; சவால் விடுகிறார் ரணில்

கொழும்பு, பெப்.4

நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாது அதன் ஆயுட்காலத்தை நீடிப்பதற்காக அரசு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முடிந்தால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்திக்காட்டுமாறு அரசுக்கு சவால் விடுத்துள்ளார்.

காலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'வீட்டுக்கு வீடு' நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை

பார்க்க பக்கம் 04

## சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், பெப்.4

நான்கு பிள்ளைகளின் தந்தை தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றைய தினம் நெல்லியடி பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள வீட்டில் சடலமாக மீட்கப்பட்

பார்க்க பக்கம் 04

## அரசின் ஏகாதிபத்திய சார்பை எதிர்த்து தலைநகரில் பேரணி

### நாளை மறுதினம் நடத்த ஏற்பாடு

கொழும்பு, பெப்.4

ஏகாதிபத்திய நாடுகளின் நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்றவாறு செயற்படும் அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தி, அவற்றுக்கு எதிராக மாபெரும் மக்கள் பேரெழுச்சியொன்றை நாட்டில் உருவாக்கும் நோக்

பார்க்க பக்கம் 04

## சிங்களத்திலேயே தேசிய கீதம்

கொழும்பு, பெப்.4

திருகோணமலையில் இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ள தேசிய சுதந்திர தினத்தில் சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படும்.

இவ்வாறு பொதுநிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

வழமை போன்று இந்த ஆண்டும் தேசிய கீதம் சிங்

பார்க்க பக்கம் 04

## சமூக ஐக்கியத்தின் மூலமே சுதந்திரம் மேலும் பலப்படும்

### சுதந்திரதின வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

கொழும்பு, பெப்.4

தேசத்தின் இறைமையை உறுதிசெய்வதற்காக மிகப்பெரும் தியாகங்களைச் செய்த இலங்கையர்களான நாம் 65 ஆவது தேசிய சுதந்திர தினத்தை மிகுந்த பெருமையுடன் கொண்டாடுகிறோம்.

- இவ்வாறு சுதந்திரதின

பார்க்க பக்கம் 04



## யாழ். வருகிறார் ஜனாதிபதி

யாழ்ப்பாணம், பெப்.04

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். அன்றையதினம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஜப்பான் நிதியுதவியில் புதிதாகக் கட்டப்பட்ட நான்கு மாடிக் கட்டடத்தினை திறந்து வைக்கவுள்ளதுடன் சாவகச்சேரியில் புதிதாக

பார்க்க பக்கம் 04

## முறையற்ற சைக்கிள் சவாரிக்கு தண்டம்

துவிச்சக்கர வண்டியில் பிறேக், முன், பின்பக்க விளக்குகள், டைனமோ இல்லாது ஓடுபவர்களுக்கு தலா 500 ரூபா வீதம் குற்றம் அறவிடப்படவுள்ளது. அத்துடன் வீதியில் துவிச்சக்கரவண்டியில் சமாந்தரமாக பயணிப்பவர்களுக்கும் தண்டப்பணம் அறவிடப்படும் - இவ்வாறு நெல்லியடிப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கடமையில் ஈடுபடும் வீதிப்போக்குவரத்து பொலிஸாரிடம் சைக்கிளில் இவ்வாறு டைனமோ, விளக்குகள் இல்லாமல் செல்பவர்களும் சமாந்தரமாக செல்பவர்களும் மாட்டியுள்ளனர். (ங-253)

## ஊடகவியலாளர் ஜீவகதாஸ் காலமானார்



மூத்த ஊடகவியலாளரும் தொண்டு நிறுவனப் பணியாளருமான சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த எம்.கே.ஜீவகதாஸ் (வயது -67) நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலமானார்.

இவர் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஈழநாடு பத்திரிகையின் தென்மராட்சிப் பிரதேச செய்தியாளராகவும், தினகரன், வீரகேசரி, ''வீக் எண்ட எக்ஸ்பிரஸ்'' ஆங்கில பத்திரிகைக்கு தென்மராட்சி பிரதேச செய்தியாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இறுதியில் அவர் வீரகேசரிப் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராக கடமையாற்றினார். இவரின் பூதவுடல் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு அடக்கம் செய்யப்படவுள்ளது.

# முஸ்லிம்கள் மீது அடக்குமுறை தொடர்ந்தால் அல் - குவைதா தலையிடக் கூடிய அபாயம்

## ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.4

முஸ்லிம்களுக்கு எதிரான எதிர்ப்புகளும், அடக்குமுறைகளும் நாட்டில் இனியும் தொடருமாயின் அல்-குவைதா உள்ளிட்ட சர்வதேச முஸ்லிம் அமைப்புகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் அபாயகரமான நிலை தோற்றம் பெறும் என ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் நேற்று எச்சரிக்கை விடுத்தது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் அந்தத் துன்பத்திலிருந்தும், வேதனையிலிருந்தும் மீளவில்லை. சிங்கள மக்களும் அவ்வாறே. இந்நிலையில், அரசு சர்வதேசத்தின் ஒழுங்குப்பத்திரத்துக்கமைய செயற்படுவதைத் தவிர்த்து நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளர் தம்பர அமில தேரர் அரசுக்கு யோசனை வழங்கினார்.

கொழும்பிலுள்ள தேசிய நூல்நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முஸ்லிம் மக்களுக்கு எதிரான எதிர்ப்புகளும், அடக்குமுறைகளும் நாட்டில் அதிகரித்து வருகின்றன. புலிகளூடாக உருவாக்க முடியாத வடக்கு, கிழக்கு இணைந்த தமிழீழத்தை உருவாக்க சர்வதேச நாடுகள் சூழ்ச்சி செய்கின்றன. சர்வதேசத்தின் இந்தச் சூழ்ச்சிகார ஒழுங்குப்பத்திரத்திற்கமையத்தான் அரசு செயற்படுகிறது.

சூடானை- வடசூடான், தென் சூடான் எனப் பிரிப்பது போல சர்வஜன வாக்கெடுப்பினூடாக இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன.

வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு தமிழீழம் உருவாக்கப்படவேண்டுமெனில் அதனைத் தீர்மானிக்கும் சக்தி முஸ்லிம் மக்களிடமே உண்டு. ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் 33 சதவீதம் தமிழர், 33 சதவீதம் முஸ்லிம்கள், 33 சதவீதம் சிங்களவர் என சம அளவிலான இனப்பரம்பல் காணப்படுகிறது. முஸ்லிம்களின் ஆதரவு எவருக்குக் கிடைக்குமோ அவர்கள்தான் பெரும்பான்மையாவார்கள். எனவே, தமிழீழத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம்கள் இருக்கின்றனர்.

முன்னர் தமிழ், சிங்கள மக்களிடையே பிரிவினையையும், விரிசலையும் ஏற்படுத்திய சர்வதேச நாடுகள், இப்போது முஸ்லிம், சிங்கள மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த சூழ்ச்சி மேற்கொள்கின்றன. போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் அந்தத் துன்பத்திலும், வேதனையிலும் இருந்து மீளவில்லை. சிங்கள மக்களும் அவ்வாறே. இந்த நிலையில், நாட்டில் மீண்டும் பிரிவினையை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் நடவடிக்கை எடுக்கின்றன.

இதற்கமைய ஐக்கிய நாடுகள் சபை, பொதுநலவாய நாடுகள் அமைப்பு, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றினூடாக அந்தச் சர்வதேச சக்திகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

> சூடானை வடசூடான், தென் சூடான் எனப் பிரிப்பதுபோல சர்வஜன வாக்கெடுப்பினூடாக இலங்கையில் தமிழீழத்தை உருவாக்க சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன.
> வடக்கு, கிழக்கு இணைக்கப்பட்டு தமிழீழம் உருவாக்கப்படவேண்டுமெனில் அதனைத் தீர்மானிக்கும் சக்தி முஸ்லிம் மக்களிடமே உண்டு. ஏனெனில், கிழக்கு மாகாணத்தில் 33 சதவீதம் தமிழர், 33 சதவீதம் முஸ்லிம்கள், 33 சதவீதம் சிங்களவர் என சம அளவிலான இனப்பரம்பல் காணப்படுகிறது.

போரினூடாக உருவாக்க முடியாத தமிழீழத்தை சிங்கள, முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்திப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் அந்த நாடுகள் இருக்கின்றன.

அதற்கான பாதையை ஏற்படுத்திக்கொடுக்கத்தான் இந்தப் பொதுநலவாய சேனா அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பினூடாக என்றுமில்லாதவாறு முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகள் நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

### பௌத்த மக்களிடம் இனவாதத்தை தூண்டுகிறார் நாட்டில் ஜனாதிபதி

பௌத்த மக்களிடம் இனவாதத்தைத் தூண்டிவிட்டு, அதன்மூலமாக அரசியல் நடத்தவேண்டும் என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நோக்கம். அதுபோல முஸ்லிம் மக்களிடையே இனவாதத்தைத் தூண்டிவிட்டு அதனூடாக அரசியல் நடத்தவேண்டும் என்பதே முஸ்லிம் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ஹிஸ்புல்லாஹ் ஆகியோரின் நோக்கம்.

தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதற்காக சர்வதேச நாடுகளின் ஒழுங்குப்பத்திரத்திற்கமைய அரசு செயற்படுகின்றது.

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் எதிர்ப்புகளும் இனியும் நாட்டில் தொடருமாயின் அல்-குவைதா உள்ளிட்ட சர்வதேச முஸ்லிம் அமைப்புகள் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடும் அபாயகரமான நிலை தோற்றம்பெறும்.

எனவே, நாட்டில் மீண்டும் ஒரு நீண்டகால பேராபத்தை ஏற்படுத்துவதற்கு வழிசமைக்கும். சர்வதேச ஒழுங்குப் பத்திரத்திற்கமைய செயற்படுவதை அரசு நிறுத்தவேண்டும். அத்துடன், முஸ்லிம் மக்களுக்கு எதிராக நாட்டில் இடம்பெற்று வரும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் இல்லாதொழிக்க அது நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார் தம்பர அமில தேரர். (ங-சி)

## ரயில் மோதி இளைஞன் சாவு

கொழும்பு, பெப்.4

காலியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் மோதுண்டு இளைஞர் ஒருவர் பலியானார். மேலும், இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டிக்கும் பம்பலப்பிட்டிக்கும் இடையிலான ரயில் தண்டவாளத்திலேயே இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வெல்லம்பிட்டியை சேர்ந்த இளைஞனே இவ்வாறு பலியாகியுள்ளார் எனவும் படுகாயமடைந்த மற்றும் இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ங)

## செம்பியன்பற்றுக்கு இன்று முதல் மின்சாரம்

யாழ்ப்பாணம், பெப்.4

வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் செம்பியன் பற்று வடக்கு-தெற்கு பகுதி மக்களுக்கான மின்சார விநியோகம் முதல் தடவையாக இன்று நண்பகல் 12 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் இலங்கை பனை அபிவிருத்திச் சபையின் தலைவருமான சீவரத்தினம் வைபவரீதியாக மின் விநியோகத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் லிங்கநாதன், இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச பொறியியலாளர் எஸ். ஞானகணேசன், பருத்தித்துறைப் பிரதேச பொறியியலாளர் க. இராஜேஸ்வரன் தாளயடிப்பகுதி பங்குத்தந்தை அருட்திரு எம். யேசுரெட்ணம் அடிகளார் ஆகியோரும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர். (ங-8)

# நாட்டில் பேச்சளவில் மாத்திரமே சுதந்திரம்

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.4

நாட்டு மக்களுக்கு தற்போது அனைத்துத் துறைகளினதும் சுதந்திரம் என்பது வாக்குறுதிகளிலும் பேச்சளவிலுமே காணப்படுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக் குடியரசின் 65ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இற்றைக்கு 65 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த கட்சி ஐக்கிய தேசியக் கட்சியேயாகும். தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அந்த சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு நாட்டு மக்களுக்கு மாத்திரமல்ல, ஆட்சியாளர்களுக்கும் உண்டு.

எனினும், நாள்தோறும் மக்களின் சுதந்திரம் மட்டிடப்படுகின்ற ஒரு யுகத்தை நோக்கியே இன்று நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். அன்று நாட்டிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் வேளையில் ஐக்கிய தேசியக் கட்சி ஐவகைச் சுதந்திரத்தையும் பூரணமாகப் பெற்றுக்கொடுப்பதற்கான செயற்றிட்டத்தையே முதன்மைப்படுத்தியது.

ஜனநாயகக் கட்டமைப்பின் கீழ் மக்கள் வாழ்வதற்கான சுதந்திரம், வறுமையிலிருந்து சுதந்திரம், தொழிலின்மையிலிருந்து சுதந்திரம், அறியாமையிலிருந்து சுதந்திரம் மற்றும் நோயிலிருந்து சுதந்திரம். இவையே ஐவகைச் சுதந்திரங்களுமாகும்.

### சுதந்திரத்துக்கும் களங்கம்

ஆனால், இன்று நாட்டு மக்களுக்கு இந்த அனைத்து துறைகளினதும் சுதந்திரம் வாக்குறுதிகளிலும் பேச்சளவிலுமே காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல, சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகள் மற்றும் ஒப்பந்தங்கள் மீறப்படுவதனால் சர்வதேச மட்டத்தில் எமது நாடு பெற்றிருந்த நற்பெயருக்கு மாத்திரமல்ல, சுதந்திரத்திற்கும் களங்கம் ஏற்பட்டுள்ளது.



அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த கட்சி என்ற அடிப்படையிலும் தற்போதுள்ள துரதிஷ்டவசமான சூழலிலிருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் மீட்டெடுக்கும் நோக்கை அடிப்படையாகக் கொண்டும் நாடு இழந்துகொண்டு செல்லும் சுதந்திரத்தை மீண்டும் வென்றெடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்குத் திடசங்கற்பம் பூணுவோம்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ங-சி)

# தனியார் பல்கலைகளுக்கு அங்கீகாரம் மாத இறுதியில் வருகிறது சட்டமூலம்

கொழும்பு, பெப்.4

நாட்டின் இலவசக் கல்வியைத் தனியார் மயப்படுத்த தனியார் பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கும் சட்ட மூலத்தை இம்மாத இறுதியில் நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதை நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க உறுப்பினர் தம்பர அமில தேரர் தெரிவித்தார்.

அத்துடன், தனியார் பல்கலைக்கழகங்களை நாட்டில் அங்கீகரிப்பதற்காகவா கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்த வீதம் அதிகரித்துள்ளது என அரசு கூறுகிறது என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

தனியார் பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கும் சட்டமூலத்தை இம்மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதை நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளது.

> 23 ஆயிரம் மாணவர்கள்தான் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப் படுகின்றனர். ஏனைய ஒரு இலட்சத்து 22 ஆயிரம் மாணவர்களும் என்ன செய்வார்கள்? உயர்கல்வியை எங்கே கற்பார்கள்?

இதேவேளை, கடந்த வருடம் இடம்பெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் 61 வீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என அரசு கூறுகிறது.

அதாவது ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேர் சித்தியடைந்துள்ளனர். ஆனால், இவர்களுள் 23 ஆயிரம் மாணவர்கள்தான் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்றனர். ஏனைய ஒரு இலட்சத்து 22 ஆயிரம் மாணவர்களும் என்ன செய்வார்கள்? உயர்கல்வியை எங்கே கற்பார்கள்?

நாட்டின் கல்வித்துறையை தனியார் மயப்படுத்தும் அரசின் நடவடிக்கையை இங்கு தான் அது ஆரம்பிக்கிறது.

ஏனெனில், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படாத மாணவர்கள் எப்படியாவது தமது உயர்கல்வியைத் தொடரவேண்டும். அதற்காக தனியார் பல்கலைக் கழகங்களை நாடிச் செல்ல வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவர்.

இந்நிலையிலேயே தான் தனியார் பல்கலைக்கழகங்களை அங்கீகரிக்கும் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற அரசு தீர்மானித்துள்ளது.

இதற்காகத்தானா கடந்த வருடம் இடம்பெற்ற உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் வீதம் அதிகரித்துள்ளது என்று அரசு கூறுகிறது? - என்றார் தம்பர அமில தேரர். (ங-சி)

# 21 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் இம்முறை அறுவடையில் கிடைக்கும்

## எதிர்பார்ப்புள்ளதாகக் கூறுகிறார் விவசாயத் துறை அதிகாரி

யாழ்ப்பாணம், பெப்.4

*யாழ்.மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 10 ஆயிரத்து 918 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. குறிப்பிட்ட நிலப்பரப்பில் இருந்து ஒரு ஹெக்ரெயருக்கு 2 மெற்றிக்தொன் நெல் கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மொத்தமாக 21 ஆயிரத்து 836 மெற்றிக்தொன் நெல் கிடைக்கப்பெறும்.*

இவ்வாறு விவசாய பாடவிதான அபிவிருத்தி அதிகாரி வி.சௌந்தரராஜன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் 11 ஆயிரத்து 778 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ள இலக்கு வைக்கப்பட்டிருந்தது.

ஆயினும் கடந்த வருடம் கடும் வெப்பம் வறட்சி நிலவிய காரணத்தால் பெரும்பாலான வயல் நிலங்களில் செய்கை மேற்கொள்ளப்படவில்லை.

10 ஆயிரத்து 918 ஹெக்ரெயர் நிலப்பரப்பிலேயே செய்கை மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் 6 ஆயிரத்து 400 விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர். தற்போது நெல் அறுவடை நடைபெற்று வருகின்றன. இந்த அறுவடைகள் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளன.

இதில் ஏரி 353, ஏரி 402, பிஜி 406, பிஜி 358, பிஜி 360 ஆகியனவும் பச்சைப் பெருமாள், மொட்டைக் கறுப்பன் ஆகிய நெல்வகைகளும் அறுவடை செய்யப்படுகின்றன.

10 ஆயிரத்து 918 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிரில் 21 ஆயிரத்து 830 மெற்றிக் தொன் நெல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது - எனத் தெரிவித்தார். (ம-13)

## நிறுவுநர் நாளும் நூல் வெளியீடும்

தென்மராட்சி, பெப்.4

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் நாள் நிகழ்வும் கல்லூரியின் 'தாமோதரன்' நூல் வெளியீடும் நாளை காலை 8.30 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளைப் பிரதிநிதி ச.சத்தியமூர்த்தியும் கலந்து கொள்வர்.

கல்லூரி ஆசிரியர் செ.செல்வரமணனால் உருவாக்கப்பட்ட நிறுவுநர் அமரர் வி.தாமோதரம்பிள்ளையின் உருவச்சிலை திரைநீக்கம் செய்யப்பட்டு நிறுவுநர் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் எஸ்.எஸ்.உதயகுமார் நிகழ்த்துவார்.

கல்லூரியின் சஞ்சிகையான 'தாமோதரன்' நூல் வெளியீடு இடம்பெறும். முதற் பிரதியை முதன்மை விருந்தினர் சு.கிருஷ்ணகுமார் வெளியிட கல்லூரியின் பழைய மாணவன் ச.சிவலிங்கம் பெற்றுக் கொள்வார்.

நூல் வெளியீட்டுரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஓய்வு நிலை விரிவுரையாளர் க.தர்மராசா நிகழ்த்துவார். (ம-9)

## வீதிக்குழியால் முறிந்தது கால்

தென்மராட்சி, பெப்.4

வீதியில் காணப்பட்ட குழிக்குள் மோட்டார் சைக்கிள் சில் இறங்கியதால் கால் நிலத்துடன் மோதியதில் அதில் பயணித்தவருக்கு கால் முறிந்தது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வரணிப் பகுதியில் இடம்பெற்றது.

வீதியில் சென்ற உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் வீதியில் காணப்பட்ட குழியில் மோட்டார் சைக்கிள் சில் இறங்கியதால் காலில் அடிபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வரணி குடமியனைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருபாகரன் (வயது-29) என்பவர் கால் முறிந்ததுடன் தலையிலும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை, வரணிப் பகுதியில் வீதியோரத்தில் காயங்களுடன் மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நபரும் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம-9)



*யாழ்.மாநகர சபையின் நீர் விநியோகப் பிரிவு நகரில் காப்பெற் வீதி அமைக்கப்பட்ட பகுதிகளில் முன்னைய வீதி ஓரத்தில் இருந்த குடிதண்ணீர் விநியோகக் குழாய்களுக்குப் பதிலாக தற்போதைய வீதி ஓரங்களில் புதிய நீர் விநியோகக் குழாய்களைப் பொருத்தும் பணியை ஆரம்பித்துள்ளது. வண்ணை சிவன் கோயில் பகுதியில் இருந்து சத்திர சந்தி வரையான பகுதிக்கு புதிய குழாய்கள் பொருத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. (ம-7)*

## கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் செயற்பட அனுமதிக்க முடியாது

### மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ். குடாநாட்டில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் செயற்படுவதற்கு ஒருபோதும் அனுமதிக்கப்படாது என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வியாபார நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடல் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. சங்கத்தின் தலைவர் கே.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது குடாநாட்டில் 20 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயற்பட்டு வருகின்றன. நான்கு சங்கங்களே நட்டத்தில் செயற்படுகின்றன. இந்தச் சங்கங்களின் வியாபார நடவடிக்கைகளை ஊக்குவித்து இலாபத்தில் கொண்டு செல்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டில் சகல கிளை நிலையங்களின் செயற்பாடுகளும் அதிகரிக்கப்பட்டு சங்கங்கள் அதிக வருமானத்தில் செயற்பட வேண்டும்- என்று கூறினார். (ம-17)

## 51 முதியோருடன் வழக்கம்பரை இல்லம்

குருநகர்,பெப்.4

சுழிபுரம் 'வழக்கம்பரை சிவபூமி முதியோர் இல்லத்தில் 51 முதியோர் தங்கியுள்ளனர்.

இவர்களில் நல்லூரைச் சேர்ந்த 102 வயதுடைய பெண் முதியவர் ஒருவரும் உள்ளார். (ம-51)

## வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மற்றொரு அரசினர் ஆஸ்பத்திரி

வடமராட்சி,பெப்.4

மீள்குடியமர்வு நடைபெற்ற வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் முள்ளியான் நித்தியவெட்டையில் மற்றொரு அரசினர் வைத்தியசாலை இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்தகால போருக்கு முன்னர் முள்ளியான் நித்தியவெட்டையில் முள்ளியான் அரசினர் மத்திய மருந்தகம் ஒன்று இயங்கியிருந்தது. போர்மூண்டதைத் தொடர்ந்து அதற்குள் சிக்குண்ட இந்த மருந்தகக் கட்டடம் முற்றாக அழிந்தது.

வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்வு நடைபெற்றதைத் தொடர்ந்து அதே இடத்தில் வைத்தியசாலையை மீண்டும் அமைக்க 'என்றிப்' நிறுவனம் நிதி உதவி வழங்க முன்வந்தது.

அதனைத் தொடர்ந்து 7 மில்லியன் ரூபா செலவில் மத்திய மருந்தகத்துக்கென ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் ஒன்று கட்டப்பட்டது.

**தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை முள்ளியான் ஆரம்ப மருத்துவ நிலையத்தில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.**

இந்தப் புதிய கட்டடத்தில் கடந்த வாரம் முதல் இந்த வைத்தியசாலை இயங்கத் தொடங்கியுள்ளது. தினமும் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை முள்ளியான் ஆரம்ப மருத்துவ நிலையத்தில் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையத்தின் வைத்திய அதிகாரியாக மருத்துவர் உமாசுதன் பணியாற்றி வருகின்றார்.

வடமராட்சி கிழக்கில் மீள் குடிமயர்வு நடைபெற்ற பகுதிகளில் மருதங்கேணி அரசினர் பிரதேச வைத்தியசாலை, முள்ளியான் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் ஆகிய இரு வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை ஆண், பெண் தாதிகள் மற்றும் பிரசவ விடுதி என்பனவற்றுடன் 24 மணிநேரம் தற்போது இயங்கி வருவதுடன் அவசர தேவைக்காக அம்புலன்ஸ் ஒன்றும் உள்ளது.

இதேநேரம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் அம்பன் அரசினர் கிராமிய வைத்தியசாலையும் நடுக் குடத்தனையில் அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையும் செயற்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக வடமராட்சி கிழக்கில் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதிகள் கிடைத்துள்ளன என்ற கூறப்பட்டது. (ம-8)

## நிகழ்வுகள் இன்று

கலந்துரையாடல்

தொழிற்சங்க வரலாற்றில் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும் தோழர் பாலா தம்புவின் வகிபாகமும் என்னும் பொருளில் டீ.எம்.எஸ்.தனியார் கல்வி நிறுவனத்தில் கலந்துரையாடல் ஒன்று ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் சொ.சிவபாலன் கருத்துரை வழங்குவார். ஆர்வலர்கள் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

## இயற்கைப் பசளை பாவனைக்கு செய்கையாளருக்கு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

சங்கானைப் பிரதேச மரக்கறிச் செய்கையாளர்கள் இயற்கை பசளைகளைப் பயன்படுத்தி தரமான மரக்கறிகளை நுகர்வோருக்கு வழங்குவதற்காக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மரக்கறிச் செய்கையாளர்கள் செயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி மரக்கறிகளை உற்பத்தி செய்கின்றனர்.

இதனால் நுகர்வோர் நோய்த்தாக்கம் உடைய மரக்கறிகளை உட்கொள்ள நேர்வதுடன் தொற்றா நோய்களும் ஏற்படுகின்றன.

சங்கானைப் பிரதேசத்தில் அதிக எண்ணிக்கையான கால்நடை வளர்ப்போர் இருப்பதுடன் மரக்கறிச் செய்கையாளர்களும் உள்ளனர்.

இதன் காரணமாக இந்த கால்நடை வளர்ப்போரின் கால்நடைகளிடம் இருந்து கிடைக்கப்பெறும் எருவை மரக்கறிச் செய்கையாளர்கள் நேரடியாகக் கொள்வனவு செய்து இயற்கைப் பசளைகளைப் பயன்படுத்தி மரக்கறிகளை உற்பத்தி செய்வதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மரக்கறிப் பயிர்ச்செய்கைக்கான மூலப்பொருள்கள், உள்ளீடுகள், உரங்கள் போன்றவற்றை விவசாயிகளுக்கு வழங்கி அதனூடாகத் தரமான மரக்கறி வகைகளை நுகர்வோருக்கு வழங்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சங்கானைப் பிரதேசத்தைச் சேர்ந்த 21 இற்கும் மேற்பட்ட கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் இந்த நிறுவனத்தின் வழிகாட்டலில் செயலாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-14)

## அமெரிக்கப்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தாம் சர்வதேசத்தின் பக்கம் நிற்கவேண்டிய நிலை உள்ளது என்றும் பீரிஸிடம் இந்திய உயர் மட்ட அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், தமது பக்க நியாயங்களைத் தொடர்ச்சியாக இந்தியாவிடம் எடுத்துரைக்கும் இலங்கை அரசு, அந்நாட்டின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இலங்கை அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கடந்த வியாழக் கிழமை இவ்விடயத்தை உறுதிப்படுத்தியிருந்தார்.

அதேவேளை, நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளை சர்வதேசத்தின் உதவியுடன் முழுமையாக அமுல்படுத்துமாறு வலியுறுத்தி கடந்தமுறை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை எதிர்த்த நாடுகள் சிலவும் இம்முறை இலங்கைக்கு எதிராகத் திரும்பும் அபாயமுள்ளது என்றும், சீனா, கியூபா, ரஷ்யா, சவூதி அரேபியா உள்ளிட்ட இலங்கை சார்பான நாடுகள் சுழற்சி முறையிலான அங்கத்துவத்தின் அடிப்படையில் வெளியேறியுள்ளதால் மாநாடு இலங்கைக்குப் பெரும் சவாலாக அமையும் என்றும் அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும், எதிர்வரும் 25 ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பமாகும் ஜெனிவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்கு இலங்கை அரசும் தயாராகி வருகின்றது. இதற்காக தமது இராஜதந்திரிகளையும் அது உஷார்படுத்தியுள்ளது.

மார்ச் மாதம் 15 ஆம் திகதி இலங்கை விவகாரம் ஜெனிவாவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை தெரிந்ததே.

கடந்தமுறை இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை 24 நாடுகள் ஆதரித்ததுடன், வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் எட்டு நாடுகள் மறைமுகமாக ஆதரவைத் தெரிவித்தன. 15 நாடுகள் பிரேரணையை எதிர்த்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்கப் பிரேரணைக்கு இந்தியா ஆதரவளிக்கும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மூவரடங்கிய அமெரிக்க பிரதிநிதிகள் குழு, உறுதியாக நம்பிக்கை வெளியிட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். இந்நிலையிலேயே, இலங்கை விடயத்தில் இந்தியாவின் நிலைப்பாடு இராஜதந்திர மட்டத்தில் கசிந்துள்ளது.

தமிழகத்தில் எழும் எதிர்ப்பலைகள், இந்தியாவின் இதர மாநிலங்களில் இடம்பெறவிருக்கும் தேர்தல்கள் ஆகிய விடயங்களைக் கருத்திற்கொண்டே இலங்கையை எதிர்க்க இந்தியா முடிவெடுத்துள்ளது.

## சமூக..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''
வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சுதந்திரத்தை உண்மையாக அர்த்தப்படும் வகையில் நாடு அபிவிருத்திப் பாதையில் காலடியெடுத்து வைத்துள்ளது. மிகவும் கடினமான சவால் நிறைந்த இந்தப் பணியை நிறைவேற்றுவதானது தேசத்திற்கு நிதியையும், சுபீட்சத்தையும் கொண்டுவரும். நீங்களும் உங்களது பிள்ளைகளும் எதிர்காலம் பற்றி அச்சத்துடனும், சந்தேகத்துடனும் நோக்கத் தேவையில்லாத ஒரு காலம் தற்போது உதயமாகியுள்ளது.

நாட்டுக்கு எதிராக அணிவகுத்த உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சக்திகளைத் தோற்கடிப்பதற்கு நாம் உறுதியான அர்ப்பணத்துடன் செயற்பட்டோம். தலைமைத்துவம் கடினமான, சவால் நிறைந்த சூழ்நிலைகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தபோதும், நாம் நாட்டை காட்டிக்கொடுக்காத இலட்சியத்தைக் கொண்டவர்கள். எமது மக்களிடமிருந்து எமக்குக் கிடைக்கும் பாரிய ஒத்துழைப்பிலிருந்து நாம் மிகப்பெரும் பலத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

சமூகங்களுக்கிடையிலான ஐக்கியமும், சமய நல்லிணக்கமும் நாட்டின் அபிவிருத்திக்கு மிக முக்கிய அம்சங்களாகும். எமக்கு மத்தியிலான பிரிவினைகள் எமது சுதந்திரத்தை எமக்கு மறுக்கும் பல்வேறு சக்திகளைப் பலப்படுத்திவிடும். எல்லா சமூகங்களும் ஐக்கியமாக எழும்போது நாட்டுக்கு எதிரான சக்திகள் பலவீனமடைந்து சுதந்திரம் மேலும் பலப்படும். தேசிய ஐக்கியத்திற்கான மிகுந்த உற்சாகத்துடனும், தெளிவான அர்ப்பணத்துடனும் நாம் 65 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறோம்.

நாட்டின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாப்பதற்கு உயர்ந்த தியாகங்களைச் செய்த எல்லா நாட்டுப்பற்றுடையவர்களுக்கும் நாம் எமது மரியாதையைச் செலுத்துகிறோம்- என்றுள்ளது. (ங-சி)

## யாழ்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கட்டப்பட்ட நீதிமன்ற வளாகத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4)

## சடலம்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
டுள்ளார். அதே பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பேரின்பராஜா (வயது-50) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவர். சடலம் மருத்துவ பரிசோதனைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் நேற்று மாலை உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வரா வீதியில் உள்ள வீட்டில் கந்தசாமி-திலீபன் (வயது-23) என்ற இளைஞன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதுடன் பிரதே பரிசோதனைக்காக பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (253)

## அரசின் ஏகாதி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கில் தலைநகரில் நாளைமறுதினம் புதன் கிழமை இரு மக்கள் பேரணிகள் நடத்தப்படும் என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் தெரிவித்தது.

மக்களை அணிதிரட்டுவதனூடாக மட்டுமே சர்வதேச சூழ்ச்சிகளை நாம் முறியடிக்க முடியும். எனவே, நாடு முழுவதிலுமுள்ள மக்களை ஒன்றுதிரட்டும் இந்தப் பேரணியில் ஆளும், எதிர்க்கட்சி அரசியல் பிரமுகர்கள் உட்பட அனைத்து மக்களும் பங்குகொள்ள வேண்டும் என்றும் அந்த இயக்கம் அழைப்பு விடுத்தது.

கொழும்பிலுள்ள தேசிய நூலகத்தில் நேற்று இடம்பெற்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அதன் ஏற்பாட்டாளர் தம்பர அமில தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிகரித்துவருகின்றன. இதற்கு அரசுதான் வழிவகுத்துக் கொடுக்கின்றது.

இந்நிலை தொடர்வதற்கு இடமளிக்கப்படுமானால், நாடு பாரிய ஆபத்தை எதிர்நோக்கவேண்டியேற்படும்.

எனவே, சர்வதேச நாடுகளின் சூழ்ச்சிகள் என்ன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன், அந்த சூழ்ச்சிகளுக்கு ஏற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அரசு தொடர்பிலும் மக்களைத் தெளிவுபடுத்தி, அதற்கு எதிராகப் போராட மக்களை அணிதிரட்டவேண்டும். ஏனெனில், மக்கள் சக்தியினூடாகவே இந்த ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை முறியடிக்க முடியும்.

இதற்கமைய நாளை மறுதினம் 6ஆம் திகதி புதன்கிழமை மாபெரும் இரு பேரணிகள் கொழும்பில் நடத்தப்படவுள்ளன. மாலை 2 மணிக்கு 'லேக் ஹவுஸ்' முன்பாக ஆரம்பிக்கும் ஒரு பேரணி, ஹைட்பார்க் மைதானத்தை நோக்கிச் செல்வதுடன், மறுபுறத்தில் பொரளையில் ஆரம்பிக்கும் பேரணியும் ஹைட்பார்க் மைதானத்தை நோக்கிச் சென்று அந்த மைதானத்தில் பொதுக்கூட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

நாட்டில் இடம்பெற்றுவருகின்ற மனித உரிமை மீறல்கள், ஜனநாயக விரோத - நல்லாட்சிக்கு எதிரான அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும்.

நாட்டின் பெறுமதியான நிலங்களை சிறிதளவும் வெட்கமும், தேசாபிமானமும் இன்றி சர்வதேச நாடுகளுக்கு அரசு விற்கிறது. இதுவரையில் 10 ஆயிரம் ஹெக்டெயாருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் யாவும் நீண்டகால குத்தகை அடிப்படையில் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன.

இந்நிலை தொடருமாயின், அது நாட்டின் தேசிய பாதுகாப்புக்குப் பாதகமாக அமையும். இது விடயம் தொடர்பிலும் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும்.

எனவே, ஆளும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் உட்பட நாட்டு மக்கள் அனைவரும் இன, மத பேதமின்றி இந்தப் பேரணியில் கலந்துகொண்டு, ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான மாபெரும் மக்கள் சக்தியை உருவாக்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும்- என்றார். (ங-சி)

## அரசின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் ஆயுள் காலத்தை 2014 இல் நாம் முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். அதற்காகவே நாம் இங்கு கூடியிருக்கிறோம். நாடு இப்போது எதிர்நோக்கும் அபாயத்தில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பொறுப்பு எம் அனைவருக்கும் உண்டு.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து - ஒரு சக்தியாகத் திகழ்ந்து மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை 2014 இல் முடிவுக்குக் கொண்டு வருவதற்காக செயற்பட வேண்டும்.

இந்த அரசை கடைசிவரையும் அசைக்க முடியாது என்று அரசு முன்னர் பெருமையுடன் கூறியது. ஆனால், இன்று இந்த அரசால் 2014 ஆம் ஆண்டுவரை பயணிக்க முடியாதுள்ளது.

ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாது அதன் ஆயுள் காலத்தை நீடிக்க சர்வஜன வாக்கெடுப்பை நடத்தப்போவதாக அரசு கூறுகின்றது.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதாக இருந்தால் அதை இந்த வருடமே நடத்த வேண்டும். அந்தத் தேர்தலில் மஹிந்த அரசு தோற்றுவிட்டால் ஜனாதிபதித் தேர்தலையும் நாடாளுமன்றத் தேர்தலையும் நீதியாக - ஜனநாயக ரீதியாக நடத்த எம்மால் முடியும்.

மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டாலும் அவற்றுக்கும் நாம் முகம்கொடுப்போம். நாம் ஒற்றுமையாக நின்று மஹிந்தவின் அரசைத் தோற்கடிப்போம் - என்றார்.

(ங-சி)

## தமிழர் மீது...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தமது பயணத்தின் நோக்கம் பற்றியும், தற்கால அரசியல் நிலை குறித்தும் தமது நிலைப்பாடு பற்றியும் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

எமது தென்னாபிரிக்கப் பயணத்தை இலங்கை அரசு தனது பிரசாரத்துக்காக பயன்படுத்தக்கூடும். ஏனெனில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனிதஉரிமைகள் சபை அமர்வில் தனக்கு ஏற்படவுள்ள நெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக இலங்கையில் மீள் நல்லிணக்கத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக காட்டவேண்டிய தேவை அரசுக்கு உண்டு. அந்த முன்னேற்றத்துக்கு கூட்டமைப்பின் தென்னாபிரிக்கப் பயணத்தை ஒரு உதாரணமாகக்காட்ட அரசு முனையலாம்.

உண்மையில் இலங்கைக்கு வருகைதந்திருந்த தென்னாபிரிக்கக் குழுவின் அழைப்பின் பேரிலேயே நாம் இங்கு வந்துள்ளோம். தென்னாபிரிக்காவில் தேசியக் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் நாம் நடத்தும் கலந்துரையாடல், இலங்கை அரசுடன் நாம் நடத்திய பேச்சுகளின் தொடர்ச்சியாக அமையாது. மாறாக முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளல், மீள் நல்லிணக்கம் தொடர்பான அனுபவங்கள் என்பவற்றைப் பகிர்தலே எமது தென்னாபிரிக்கப் பயணத்தின் நோக்கமாகும்.

இலங்கை அரசுடன் கூட்டமைப்பு மேற்கொண்ட பேச்சுக்கள் தோல்வியிலேயே முடிவடைந்திருந்தன. கூட்டமைப்பின் இணக்கப்பாடுகளுக்கான தெரிவுகளை ஏற்றுக்கொள்ள மறுத்தமையே இதற்குக் காரணமாகும். பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் நிகழ்ச்சி நிரலை அரசு தொடர்ந்தும் மேற்கொண்டுவருகின்றது.

அத்துடன் வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் இனப்பரம்பலை மாற்றியமைக்கவும் அது முயல்கிறது. இத்தகைய பின்புலத்திலேயே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜெனிவாவில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அதனை நிறைவேற்ற இலங்கை அரசு தவறிவிட்டது. இதனைவிடுத்து அரசு ஆக்கபூர்வமான செயற்பாட்டில் கவனம் செலுத்தவும், தமிழர்கள் மீதான அடக்குமுறை நிகழ்ச்சி நிரலை நிறுத்தவும் சர்வதேசமும், ஐ:நா.மனித உரிமைகள் சபையும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றுள்ளது.

(ங-ப)

## சிங்களத்திலேயோ..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கள மொழியில் மட்டும் பாடப்படும்.

எந்தவித மாற்றங்களும் இடம்பெறாது என்று அவர் கூறினார்.

தேசிய கீதத்தை இரண்டு மொழிகளிலும் பாட வேண்டும் என்று அமைச்சர் வாசுதேவநாணயக்கார ஆலோசனை வழங்கியமையை கவனத்தில் கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளிக்கவில்லை என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

(ச)

## அரச காணிக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்த அதிகாரம் வடமாகாண ஆளுநருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுநாள் வரையும் அரச காணி தொடர்பான நடவடிக்கைகளுக்கு குறித்த காணிகள் அமைந்துள்ள பகுதிக்குரிய பிரதேச செயலரே பொறுப்பாக இருந்து வந்தார். ஆயினும் தற்போது ஜனாதிபதியின் விசேட ஆலோசனையின் படி வடக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலர்களிடமிருந்த இந்தப் பொறுப்பு திடீரென ஆளுநரின் கைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவுறுத்தல் வடக்கிலுள்ள 5 மாவட்டங்களினதும் அரச அதிபர்களுக்கும் மற்றும் பிரதேச செயலர்களுக்கும், உரிய அதிகாரிகளுக்கும் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதுவரை குறித்த அதிகார மாற்றம் தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் நேற்று மாலை வரை அவை கிடைக்கவில்லை என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய நடைமுறையின் படி இனிமேல் அலுவலகச் செயற்பாடுகள், முதலீட்டு நடவடிக்கைகளுக்காக அரச காணிகளை வாடகை அல்லது குத்தகைக்கு எடுப்பவர்கள் குறித்த பிரதேச கிராம அலுவலர், பிரதேச செயலர், அரச அதிபர் ஊடாக வடமாகாண ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரச காணிகளை ஏற்கனவே வாடகை அல்லது குத்தகைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டமை தொடர்பான விவரங்களும் திரட்டப்படவுள்ளன. அவை தொடர்பில் பரிசீலனை செய்யப்பட்டு உரிய முறையில் பயன்படுத்தப்படாதுள்ள அரச காணிகளை மீளப் பொறுப்பேற்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்திலுள்ள முப்படையினரும், பொலிஸாரும் கூட அரச காணிகளைப் பயன்படுத்துவது தொடர்பிலும் இந்த நடைமுறையையே பின்பற்ற வேண்டும்.

வடமாகாணத்திலுள்ள அரச காணிகளின் பயன்பாடுகள் தொடர்பில் முறையான ஒரு நடைமுறையைக் கையாளும் பொருட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமையவே இது நடைமுறைக்கு வருகின்றது -என்று ஆளுநர் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதுபற்றி வடமாகாணத்திலுள்ள 5 அரச அதிபர்களுக்கும் தெளிவுபடுத்தும் கூட்டம் ஒன்று நாளைமறுதினம் புதன்கிழமை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் புதிய நடைமுறை மூலமாக, அரச காணிகளின் பயன்பாடுகள் தொடர்பில் கண்காணிக்கப்பட உள்ளதோடு, காணி சம்பந்தமாக எழுந்துள்ள பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதியைப் பெறத் தவறும் பட்சத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

வடக்கிலுள்ள அரச காணிகளைப் படையினருக்கு வழங்குவதில் தீவிரமாக இருக்கும் ஆளுநர், இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி வடக்கிலுள்ள அரச காணிகளை கையகப்படுத்தப்படலாம் என்றும், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதற்கு அரச காணிகளைக் கையகப்படுத்தவே இந்தத் திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென்றும் தமிழ் மக்கள் தரப்பில் பலத்த சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ங-4-5)

# கிளைக்குழுத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கான கிளைக்குழு தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் கூறினார்.

சங்கத்தின் தலைமை அலுவலக மண்டபத்தில் 44 கிளை நிலையங்களுக்குமான வாக்காளர் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

ஏற்கனவே இந்த வாக்காளர் பட்டியல் ஒவ்வொரு கிளை நிலையங்கள் மற்றும் பிரதேச ரீதியாக மக்கள் பார்வைக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.

(ம-17)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை தருமராசா



யார்வத்தை வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தருமராசா 03.02.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-வல்லிநாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவமணிதேவியின் அன்புச்சகோதரனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் அஜந்தகுமார்(தமிழாசிரியர்), மீனலோசினி(கனடா), ராஜநந்தினி (3ஆம் வருடம் சமூகவியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், சியோபன்(கனடா), வதனரேகா (உதவி விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கனகசபையின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சிவபாதம் தவராசா ஆகியோரின் அன்புத்தாய் மாமனும் றினோசாவின்(கனடா) அன்புப் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆலங்கட்டை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.அஜந்தகுமார்.
(மகன்)

(27728)

### நடராசா அருணாச்சலம்



யாழ்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நாமகள் வீதி, கொக்குவில் கிழக்கைப் வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப் பிடமாகவும் கொண்ட நடராசா அருணாசலம் நேற்று முன்தினம் (02.02. 2013) சனிக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா-இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற மகாலக்சுமியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினகுமார் மற்றும் அருணகுமார் (அருணா u.k),ராஜ்குமார்(ராஜ்-கனடா), நந்தகுமார்(u.k), நிமலகுமார்(u.k) ஆகியோரின் அன்புத் தந்தையும், தபோதினி (u.k),மேகலா(கனடா), குமுதினி(u.k), தர்சினி(u.k) ஆகியோரின் மாமனும் , ஜனனி, கஜானன், வினுசா, வினுசன், மகிசா, கனிசா, ஸ்ரீத்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

ராஜ்(கனடா)
197, LA ROCCA AVE
WOODBRIDGE ONT L4 H2M3
CANADA
T.P. 0019056537501

தகவல்:
மதி
0777046628

### எம்.கே. ஜீவகதாஸ்

(செயலாளர் அறவழிப் போராட்டக்குழு, ஊடகவியலாளர்,
Weekend Express , வீரகேசரி, தினகரன், வலம்புரி)



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஜீவகதாஸ் நேற்று முன்தினம் (02/02/2013) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.கந்தையா-செல்லாச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலம் சென்றவர்களான பசுபதி பொன்னாச்சிப்பிள்ளை தம்பதியாரின் மருமகனும் ஈஸ்வரியின் (ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர்-மக்கள் வங்கி சாவகச்சேரி) அன்புக் கணவரும் சஞ்சீவனின்(லண்டன்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜெகதாஸ் மற்றும் செல்வி, ஜெகசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜேஸ்வரி, மங்களேஸ்வரி, பகீரதன், நிர்மலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், தேவராயன், தெய்வேந்திரன், சங்கரசிவம் ஆகியோரின் பாசமிகு சகலனும், சத்திய பாமாவின் உடன் பிறவாச் சகோதரனும், சுபாசினி, திவாகரன், நியோஜிதன் ஆகியோரின் சிறிய தந்தையும், பிரியங்கா, சிந்துஜா, விஷ்ணுஜன், தேனுஜன், யதுவினன் ஆகியோரின் பெரிய தகப்பனும் கஜனாத்தின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறதிக் கிரிகைகள் (05/02/2013) நாளை செவ்வாய் கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி

தகவல்
குடும்பத்தினர்
0773144750
0217210192

(28223)

# இந்திய முன்னாள் பிரதம நீதியரசருக்கு விசா மறுப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதம நீதியரசரான வர்மா இலங்கைக்குள் நுழைவதற்கான நுழை விசாவை வழங்க இலங்கை அரசு மறுத்துவிட்டது.

இலங்கையின் பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டார நாயக்கா நாடாளுமன்றில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஒன்றின் மூலம் இலங்கை அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டு இருந்தார்.

இது தொடர்பாக ஆராய இந்திய முன்னாள் பிரதம நீதியரசர் வர்மா தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு சார்பில் வர்மா இலங்கைக்கு செல்லவிருந்த நிலையிலேயே அவருக்கு விசா வழங்க மறுக்கப்பட்டுள்ளது. (ங)

# கேப்பாபிலவு வீட்டுத் திட்டத்தை விரைவுபடுத்த நடவடிக்கை

முல்லைத்தீவு - சீனியா மோட்டை கேப்பாபிலவில் வசிக்கும் மக்களுக்கு முதற் கட்டமாக வழங்கப்படவுள்ள 50 வீட்டுத்திட்ட பணி விரைவில் முடிவுறுத்தி வழங்கப்படும்.

175 வீட்டுத் திட்ட பணிகளில் முதற்கட்டமாக 50 வீட்டுத்திட்ட பணிகள் முடிவுறுத்தப்பட்டு வழங்குவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, அங்குள்ள மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் சனசமூக நிலையம், ஆரம்ப சுகாதார நிலையம், சிறுவர் பாடசாலை, ஆரம்ப முன்பள்ளி என்பவற்றுடன் வீதிகளையும் புனர மைத்துக் கொடுக்க ஆளுநர் முன்வந்துள்ளார்.

கேப்பாபிலவு மக்களின் வீட்டுத் திட்ட பணிகளுக்காக 200 மில்லியன் ரூபா வரை முதற்கட்டமாக செலவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

# விபத்தில் மூவர் காயம்

ஒழுங்கையிலிருந்து வீதியில் ஏறிய சைக்கிளை வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் வந்த இளைஞர் படுகாயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை வரணி சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்கு அருகில் இடம்பெற்றது.

சைக்கிளில் பயணித்தவர் தலையில் பலத்த காயங்களுக்கு இலக்காகி மயக்கமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.மோட்டார் சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டதில் காயமடைந்த ஒட்டிசுட்டான் சிவன் கோவிலடியைச் சேர்ந்த சண்முகநாதன் நிஷாந்தன் (வயது 16) என்பவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்தில் முள்ளியவளை பாடசாலை ஆசிரியர் ஒருவரே பாடசாலை மாணவனை ஏற்றிக் கொண்டு மோட்டார் சைக்கிளில் வந்ததாகவும் காயங்களுக்கு இலக்கான போதிலும் ஆசிரியர் சம்பவ இடத்தில் நின்றதாகவும் அவருடன் பயணித்த மாணவன் தெரிவித்தார். (9)

## மரண அறிவித்தல்

### செல்லையா சுப்பிரமணியம்(குட்டி)

(நியூ யாழ்.டீசல் எஞ்சினியர்ஸ் யாழ்ப்பாணம்)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் நேற்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் செல்லையா-நேசம்மாவின் அன்புக் கணவரும், புனிதவதியின்(இராசாத்தி) அன்புக் கணவரும், Dr அபிரா, சுகந்தன்(பொறியியலாளர்), சாரங்கன், சோபிகா ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

167/10, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.021 222 3826

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கதிராசிப்பிள்ளை முருகேசு



கழிபுரத்தை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராசிப்பிள்ளை முருகேசு நேற்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவகாமினி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி. பரமலிங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும் செல்வராசா, விஜயமாலா (லண்டன்), திருமகள் (பிரான்ஸ்), காலஞ்சென்ற கலைமகள் (உமா) ஆகியோரின் பாசமிகு தாயும் யோகேஸ்வரி, பாலசிங்கம் (லண்டன்), கோணேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் சின்னம்மா (அமெரிக்கா), காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை மற்றும் தேவராசா, பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற வடிவேலு மற்றும் தவச்செல்வி, பதிகுமாரி ஆகியோரின் மைத்துனியும் தனபரன் (கனடா), தார்மிகா, மதுசாயிரா - சிவசுந்தரம், (S.S.சிறி), சுஜே (லண்டன்), கவிதா (லண்டன்), சுகிர்தா (பிரான்ஸ்), சுமித்தா (பிரான்ஸ்), சுவேதா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு தென்மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 | 04 |
| * | * |
| 06 | 01 |
| * | * |
| 1936 | 2013 |



அமரர்

### சின்னட்டி திருநாவுக்கரசு

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.02.2013)
திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில்
அவரது இல்லத்தில் நடைபெறுகின்றன.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

3/1. ஸ்ரான்லி கல்லூரி வீதி.
கச்சேரி கிழக்கு.
அரியாலை.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா தம்பிராசா (பொன்னுத்துரை)



எமது அண்ணா தொழிலகத்தின் அதிபரின் மைத்துனராகிய கந்தையா தம்பிராசா அவர்களின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

துரைவீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

அண்ணா தொழிலகம்.
பணியாளர்கள்.

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி, பழைய பொலிஸ் நிலைய வீதியில் அமைந்துள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் V.N.நவரட்ணம் வீட்டிற்கு அருகில் நல்ல சுற்றாடலில் அமைந்துள்ள 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.(தரகர் தேவையில்லை)

தொடர்பு: 0772285105, 0776150651. (18013)(6.7.4)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி கவின்ஜா நவஜீவா அவர்களின் அன்பு மாமனார்

**கந்தையா மயில்வாகனம்**

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயரடைவதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிகழகம்

**யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.** (29144)(6.7.4)


ESOFT

Shaping Lives, Creating Futures.

**ESOFT College of Engineering & Technology**

(Katubedda, Moratuwa)

உயர்தரத்தின் பின்னர் Engineering - UK உலகத்தரம் வாய்ந்த பட்ட படிப்பைப் பெற்றுக்கொள்ள இணையுங்கள்

**UK - Degree**

Leading to UK B.Sc Degree from Kingston University London

# Engineering

மொறட்டுவ பல்கலைக்கழக பேராசிரியர்களால்

இலவச கருத்தரங்கு

யாழ்கிளையில்

2013.02.11ம் திகதி இடம்பெறும்

மார்ச் மாத பதிவுகளுக்கு விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன

பதிவுகளுக்கு

Limited Seats Only

உங்கள் பெயர், முகவரியை

077 990 56 11

SMS செய்துகொள்ளுங்கள்

ESOFT — Shaping Lives, Creating Futures.

**ESOFT Metro Campus**

No 137, K. K. S Road, Jaffna

Tel : 021 222 4142



உதயன் விளம்பரத் தொடர்புக்கு—

advt@uthayan.com

0215671111



## கணினி மலிவு விற்பனை

அலுவலகங்கள், Net cafe மற்றும் வீடுகளுக்கு உகந்த நல்ல நிலையில் உள்ள டுபாயிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணினிகள் ரூபா 8500 இலிருந்து விற்பனைக்கு உண்டு. (29227)

**IISEES NALLUR CAMPUS**

762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

0212224728, 0777444225



## Computer Repair and Services

உங்கள் இடங்களுக்கு வந்து Computer Repairs, Formating, Software Installation, Networking செய்து தரப்படும்.

075-2414146



## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். — கே.கே.எஸ். றோட், இணுவில்.

**( A/L DAY CLASS )**

**கலை, வர்த்தகப் பிரிவு**

(திங்கள் முதல் வெள்ளிவரை)

நாளை ஆரம்பம் 05.02.2013

(செவ்வாய்) 7.00 A.M

| DAY | யாழ். நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| ECO | வரதராஜன் | மகேந்திரன் |
| ACC | முகுந்தன் | முகுந்தன் |
| B/St | முரளி | முரளி |
| English | நிஷாந்தன் | நிஷாந்தன் |

கலைப்பிரிவு இரு இடத்திலும் இதே நாளில்.

★ நீங்கள் நன்கு அறிந்த வழமையான ஆசிரியர் குழுவினால்.

★ உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.


# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் பேரின்பராஜா



கண்டியைப் பிறப்பிடமாகவும் எரிபொருள் நிரப்பு நிலைய வீதி, நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பேரின்பராஜா நேற்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் லக்ஷ்மியின் அன்புக் கணவரும் ராகுலன், ஜீவராஜ், சுஜித், சுபாங்கி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயகுமார், கிருஷ்ணகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2013) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று சோனப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எரிபொருள் நிரப்பு நிலைய வீதி,
நெல்லியடி.

தகவல்.
குடும்பத்தினர்

## வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான பயிற்சிகள்- 2013

சிங்களம், தமிழ் சுருக்கெழுத்து ஆகிய பயிற்சிகள் 06.02.2013 புதன்கிழமை பிற்பகல் முறையே 3 மணி,4 மணிக்கு சுப நேரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் தமிழ் தட்டெழுத்து பயிற்சிகள் 11.02.2013 திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சிகள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 1,000/= பதிவுக் கட்டணமாகவும் ரூபா 100/= ஆண்டு சந்தாவாகவும் செலுத்த வேண்டும். இடம் பெயர்ந்தோர்,சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்ப அங்கத்தவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.

ஆர்வமுள்ளோர் 05.02.2013, 06.02.2013 காலை 9 மணி- பிற்பகல் 2 மணிக்கு இடையில் நேரடியாக சுய விவரம் அடங்கிய விண்ணப்பத்துடன் சென்று கழகத்தில் பதிவு செய்யவும்.

சிங்களம், தமிழ் தட்டெழுத்து வகுப்புகள் வார இறுதி நாள்களிலும் தமிழ் தட்டெழுத்து வகுப்புகள் வார நாள்களிலும் நடைபெறும்.

தலைவர்,
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி,கரவெட்டி. (C/6202)(6.11)

# மரண அறிவித்தல்

## கந்தையா தம்பிராசா(பொன்னுத்துரை)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் துரை வீதி அண்ணா இல்லத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா (பொன்னுத்துரை- முன்னாள் வர்த்தகர்) நேற்று (03. 02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற சாரதாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திலகத்தின் (இந்தியா) மைத்துனரும், குகன் (கனடா), யசோதா (சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும், பொ.நடராசா (உரிமையாளர், அண்ணா தொழிலகம், இணுவில்), காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் புனிதவதி, அன்னபூரணம், அன்னலட்சுமி, மகாலஷ்மி, ஜெயலஷ்மி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இராசம்மா (ஆசிரியை), புவனேஸ்வரி(ஆசிரியை), சரஸ்வதி மற்றும் யோகேஸ்வரி (லண்டன்), தவமணிதேவி(லண்டன்) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(04.02.2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அண்ணா தொழிலகம்" துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

தகவல்:
பொ.நடராஜா
(உரிமையாளர்,
அண்ணா தொழிலகம்)


## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பண்ணைப் பாடசாலைக்கு அருகில் பலாலி வீதியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (29145)(3.6)



## The Royal College Of Jaffna

சுலபமாக ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க,கதைக்கப்பயில

By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி,

426, K.K.S வீதி ,யாழ்ப்பாணம் (சனி,ஞாயிறு)

பிளாக் வீதி, சங்கானை (மாலை வகுப்புகள்).

T.P--0776751649 (29143)(3.6)


# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## கந்தையா சத்தியசீலன்

(முகாமையாளர்- எரிபொருள் நிரப்பு நிலையம், மானிப்பாய்.)

**தோற்றம்**
**05.11.1953**

**மறைவு**
**04.02.2002**

எங்கள் அன்பே;.......உயிரே அப்பா!
ஆண்டுகள் பல உருண்டோடினாலும்
ஆழமாய் உங்கள் மீது கொண்ட பாசம் என்றும் மாறாது!
சகல உள்ளங்களையும் இடம் பிடித்து
சத்தியமாய் வாழ்ந்த சத்திய சீலன் நீங்கள்!
எமக்கெல்லாம் பாதை காட்டிய நீங்கள்
ஏனோ எங்கோ பாதியில் சென்று விட்டீர்கள்
ஏங்கி நிற்கிறோம் உங்கள் பாசத்தைக் காண !
சிரித்த தங்களின் முகமும் சிறப்பான பேச்சும்
துடினமான நடையும் எப்போதும் எம் கண் முன்னே?
உங்கள் கல்லறையில் -எம் உள்ளம் பூக்களாய் பூத்திருக்கும்
இம்மையில் உமை இழந்தோம் மறுமையில்
உம்மைக் காண்போம் எனக் காத்திருக்கிறோம்.

டச்சு வீதி, சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர். (29147)(6.11)

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## சொல்வதைச் செயலில் காட்டத் தயக்கமேன்?

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில், அந்த அமைப்பின் தலைமை நாடான பிரிட்டன் கலந்து கொள்ளுமா? பிரிட்டிஷ் மகாராணியார் கலந்து கொள்வாரா? என்ற கேள்விகள் மிக உயர்ந்து நிற்கின்றன.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக் கூறும் கடப்பாட்டிலிருந்து இலங்கை தவறிவிட்டதென்றும் மனித உரிமை மீறல் தொடர்பில் இலங்கை முன்னேற்றம் காட்டவில்லை என்றும் அனைத்துலக மட்டத்தில் பரவலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

பொதுநலவாய மாநாட்டை பிரிட்டன் பகிஷ்கரிக்க வேண்டும் என்று சமீபத்தில் பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோரிக்கைவிடுத்திருந்தார். இலங்கையில் அதனை நடத்தக்கூடாது என்றும் கேட்டிருந்தார்.

இத்தகைய பின்னணியில் பிரிட்டிஷ் மகாராணியாரின் இலங்கை வருகை குறித்து இதுவரை தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று தற்போது இலங்கை வந்துள்ள பிரிட்டனின் தெற்காசிய நாடுகளுக்கான வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பேர்ட் கூறியுள்ளார். மொத்தத்தில் மகாராணியாரின் வருகை சந்தேகத்துக்கு இடமானதாகவே பார்க்கப்படுகின்றது.

''பிரிட்டிஷ் மகாராணியார் இலங்கை செல்லக்கூடாது. பொதுநலவாய மாநாட்டை பிரிட்டன் பகிஷ்கரிக்க வேண்டும்'' என புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் ஏற்கனவே பிரிட்டிஷ் அரசுக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்து விட்டன.

பொதுநலவாய அமைப்பு, அணிசேரா நாடுகள் இயக்கம், பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்கு ஆசிய அமைப்பான சார்க் ஆகியவற்றில் இலங்கை ஒரு முன்னணி உறுப்பு நாடு. அணிசேரா நாடுகள் மாநாடு, சார்க் மாநாடு ஆகியவை இலங்கையில் ஏற்கனவே வெற்றிகரமாக நடத்தப்பட்டன. ஆனால், பொதுநலவாய நாடுகள் மாநாடு நடைபெற இருப்பது இது தான் முதல் தடவை.

கடந்த காலங்களில் அனைத்துலக மாநாடுகளை நடத்துவதில் இலங்கைக்குப் பிரச்சினை எதுவும் இருந்ததில்லை. ஆனால் 2009 இல் போர் முடிவடைந்த பின்பு நிலைமை மாறிவிட்டது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணுமாறு மட்டும் அல்ல ஜனநாயக கட்டமைப்புகளைப் பலப்படுத்தி மனித உரிமைகளைப் பேணுமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மற்றும் பொதுநலவாய நாடுகள் அமைப்பு போன்ற அனைத்துலக மட்டத்திலான பல அமைப்புகள் இலங்கைக்கு நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்து விட்டன.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெற உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கூட்டத்தில் இலங்கை தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கையிலேயே பொதுநலவாய உச்சிமாநாட்டின் தலைவிதி தங்கி உள்ளதாக நம்பப்படுகிறது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, ஷிராணி பண்டாரநாயக்கவை வெளியேற்றும் நடவடிக்கையை நிறுத்தி வைக்குமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் இலங்கை இதனை கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

அதேவேளை, ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கை எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தி இருக்கிறது என்பதை நேரில் கண்டறிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஜனவரியில் இலங்கை வருவதாக இருந்தது. ஆனால் அவர் இலங்கை வரும் அறிகுறி இதுவரை இல்லை.

ஜெனிவா மாநாடு, இம்முறை இலங்கைக்கு இரு நெருக்கடிகளை ஏற்படுத்தப் போகின்றது. கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தவறியமை முதலாவது. நீதித் துறைக்கும், சட்டவாக்கத்துக்கும் இடையிலான நெருக்கடி இரண்டாவது. அந்த வகையில் பிரிட்டன் மட்டுமன்றிக் கனடாவும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மாநாட்டின் தீர்மானத்துக்காகக் காத்திருக்கின்றன.

பிரிட்டிஷ் மகாராணியாரை எந்த வழியிலேனும் அழைத்து வந்து பொதுநலவாய மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதில் இலங்கை ஆர்வம் காட்டி வருகிறது. ஜெனிவா கூட்ட தீர்மானத்திலும், நவம்பர் மாத பூகோள கால மீளாய்வுக் கூட்டத் தொடருக்கு முன்வரும் மனித உரிமைகள் தொடர்பாக இலங்கை அரசு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளிலுமே பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பிரிட்டிஷ் மகாராணியார் பங்குபற்றுவது தங்கியுள்ளது.

அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில், அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வகை செய்யும் என்பதனை இந்நாட்டின் அரச பிரதானிகள் கருத்தில் கொள்வதாக இல்லை. பொருளாதாரத் தடை என்பது சாதாரணமானது அல்ல. அதன் பின்புறத்தில் அனைத்துலகத் தலையீடுகள் பல்கிப் பெருகும் என்பதனைப் புரிந்துகொள்ளும் பக்குவத்தையும் காணமுடியவில்லை. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவோம் என்று இதயசுத்தியுடன் கூறுவதற்கோ, அது சார்ந்த செயல் ரீதியான நடவடிக்கைகளை திருப்தி தரும் வகையில் வேகமாகச் செய்து முடிப்பதற்கு தயார் என்று சொல்வதற்கோ அரசும் அதன் எடுபிடிகளும் தொடர்ந்தும் பின்னிற்கின்றன.

தாம் சொல்வதை அனைத்துலகம் கூர்மையுடன் கேட்டுச் செயற்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் அரசு, ஏனைய நாடுகள் தெரிவிக்கும் பக்கம் சாரா சமநிலை யோசனைகளை ஏறெடுத்துப் பார்க்கவும் பின்னடிக்கிறது. தன்வினை தன்னைச்சுடும் என்ற யதார்த்தத்தை அது எப்போது புரிந்துகொள்ளப்போகிறதோ....?

### 24 வருடங்களாக முகாம்களில் வாடுகிறோம்

# எங்களை சொந்தக் காணிகளில் குடியமர்வதற்கு வழி செய்யுங்கள்

### தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்திடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.4

24 வருடங்களாக முகாம்களில் வாழ்ந்து வரும் எங்களைச் சொந்தக்காணிகளில் குடியமர அனுமதியுங்கள். சொத்துக்கள், சொந்தக் காணிகளை இழந்த எங்களுக்கு குடியிருக்க காணி ஒன்றே எஞ்சியுள்ளது. இதை மனிதாபிமான முறையில் மீட்டுத்தர வேண்டும். இடம்பெயர்ந்த நிலையில் முகாம்களில் வாழும் மக்கள் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சம்மேளனத்தின் அலுவலகத்தில் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தால் நடத்தப்பட்ட சந்திப்பில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முகாம்களில் வாழும் சிறுவர்கள் கல்வி,சுகாதாரம் ஆகியவற்றில் பின்தங்கிய நிலையில் உள்ளனர். கலாசார சீரழிவு ஒன்றுதான் இங்கு இல்லை. இனி அதுவும் ஏற்படுமாயின் மானங்கெட்டவர்களாகி விடுவோம்.

அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. அரசால் வழங்கப்பட்டு வரும் நிவாரணம் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளது. எமது சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பேச்சு சுதந்திரம் கூட இல்லை.

சொந்தமாக தொழில் செய்த நாங்கள் 24 வருடங்களாக கூலி வேலை செய்து குடும்பத்தைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

பிள்ளைகளின் கல்வி, சுகாதாரத்துக்கு அடுத்தவர்களின் கையை எதிர்பார்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இதனால் கடன் மிக்கவர்களாக வாழ்கிறோம்.

இன்று பல குடும்பங்கள் கடன் தொல்லையால் தற்கொலை செய்யும் நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளன. வடக்கின் வாழ்வெழுச்சித் திட்டம் என்று மக்களுக்கு பெரிய உதவிகளை வழங்கினாலும் அபிவிருத்தி செய்தாலும் அத்திட்டத்தில் முகாம் வாழ் மக்கள் உள்வாங்கப்படுவதில்லை. புறக்கணிக்கப்பட்டவர்களாகவே உள்ளோம்.

முகாம் வாழ் மக்களுடைய நிலைமைகளை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் எடுத்துச்சென்று எமக்கு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்று கூறினார். (ம-13)

# மீள்நடுகை செய்யாது அழிக்கப்படும் மரங்களால் பெரும் ஆபத்து நிலை

### பசுமைப் புரட்சியாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், பெப்.4

அனுமதி பெற்றும் அனுமதி பெறப்படாமலும் குடாநாட்டில் மா, பலா, தென்னை, பனை போன்ற பயன்தரும் மரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

அழிக்கப்படும் மரங்களுக்குப் பதிலீடாக எத்தனை மரங்கள் மீள் நடுகை செய்யப்படுகின்றன.

இந்த விடயத்தில் உள்ளூராட்சி சபைகளும், பிரதேச செயலகங்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பசுமைப்புரட்சியாளர் வை.செகராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

மீள் நடுகையின்றி மரம் அழிக்கப்பட்டு வருவதால் ஏற்படும் ஆபத்து குறித்து தெரிவித்த போதே இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஆண்டில் மட்டும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான புள்ளிவிவரங்களை பார்வையிட்டேன்.

இதற்கு பதிலீடாக நடப்படவுள்ள, நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை குறித்து எந்தவிதமான புள்ளிவிவரங்களும் இல்லை.

ஆனால், இந்தப் பிரதேசம் காக்கப்படவேண்டுமானால் வருடத்துக்கு வீட்டுக்கு 5 மரங்கள் என்ற வீதத்தில் நடப்பட வேண்டும்.

இந்த விடயத்தைப் பிரதேச சபைகளும், பிரதேச செயலகங்களும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இதற்காக இடர் முகாமைத்துவ அமைச்சு, சுற்றுச்சூழல் அமைச்சு என்பன நிதிகளை ஒதுக்கி வைத்துள்ளன.

இதற்கான கருத்திட்டங்களை, முன்வரைபுகளை முன்வைத்து மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ம-50)

## ஓய்வுபெற்ற இராணுவப் பணியாளரின் விவரங்கள் குடாநாட்டில் சேகரிப்பு

அரச படைப்பிரிவில் இணைந்து பணியாற்றி ஓய்வு பெற்று யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்கள், தமது விவரங்களை யாழ். சிவில் நிர்வாக சேவை அலுவலகத்தில் சமர்ப்பிக்கும் படி இராணுவத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

தரைப்படை, விமானப்படை, கடற்படை என்பவற்றில் பணியாற்றி ஓய்வுபெற்று யாழ்.மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

தமது விவரங்களை தபால் மூலமாகவோ அல்லது யாழ்.ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சிவில் நிர்வாக சேவைப்பிரிவில் நேரடியாகவாவது சமர்ப்பிக்க முடியும். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது சேவை நலன்கள் பற்றிய விவரங்களையும் குறைபாடுகள் பற்றிய விவரங்களையும் அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு 0774045519 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் இராணுவத்தினர் அறியத்தந்துள்ளனர். (4)

## சுதந்திர தினத்தில் யாழ்.சிறையிலிருந்து 9 பேருக்கு விடுதலை

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் சிறு குற்றங்கள் புரிந்து கைதாகியவர்கள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

ஜனாதிபதியின் பணிப்புக்கிணங்க யாழ். சிறைச்சாலையில் உள்ள சிறு குற்றங்கள் செய்த கைதிகள் 9 பேரே விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று யாழ். சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எஸ். இந்திரகுமார் தெரிவித்தார்.

சிறுகுற்றங்கள் செய்தவர்களில் 8 ஆண்களும் ஒரு பெண்ணுமாக 9 பேர் இன்று காலை 9 மணிக்கு விடுதலை யாவர் என்று மேலும் கூறப்பட்டது. (ம-13)

# தென்பகுதிக் கழிவு நீர் ஆலையை பார்வையிட ஏற்பாடு செய்யுங்கள்

### நவாலி பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.4

கல்லுண்டாயில் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு முன்னர் ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டதுபோன்று தென்பகுதியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையின் தொழிற்பாட்டை நவாலியில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பார்வையிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக செ.மகேந்திரன் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

மூவாயிரம் மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட செலவில் கல்லுண்டாயில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு நவாலி மக்களும், மற்றும் உள்ளூராட்சி சபையும், பிரதேச செயலகமும் பூரண ஒத்துழைப்பை ஏற்கனவே வழங்கியுள்ளன.

தென்பகுதியில் கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலை இயங்கி வருவது போன்று கல்லுண்டாயில் கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலை அமையவுள்ளது.

தென்பகுதியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையின் தொழிற்பாட்டை நவாலி பொது அமைப்பின் பிரதிநிதிகள் பார்வையிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். - கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டப் பணிப்பாளர் கூறியிருந்தார்.

அவர் இவ்வாறு தெரிவித்து நான்கு மாதங்கள் கடந்து விட்ட நிலையில் இதற்கான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை.

எனவே கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையைக் கல்லுண்டாயில் அமைப்பதற்கு முன்னர் உறுதியளிக்கப்பட்டது போன்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.- என்று கூறினார். (ம-50)

# மகாதேவா சைவச்சிறார் இல்ல மாணவர்கள் எதிர்காலத்தில் மேலும் சாதனைகளை படைப்பர்

### நம்பிக்கை வெளியிட்டார் இல்லத் தலைவர்

கிளிநொச்சி, பெப்.4

மகாதேவா சைவச்சிறார் இல்ல மாணவர்கள் எதிர்காலத்தில் பிரமிக்கத்தக்க வகையில் மேலும் பல சாதனைகளை நிலை நாட்டுவார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டார் கிளிநொச்சி முன்னாள் அரச அதிபரும் மகாதேவா இல்லத் தலைவருமான தி.இராசநாயகம்.

முதன் முதலாக மகாதேவா சிறுவர் இல்லத்தின் ஊடாக ஜி.சீ.ஈ. உயர்தர வர்த்தக பிரிவில் தோற்றிய மாணவன் யுவேந்திரராஜா கஜீவன் 'மூன்று -ஏ' சித்தி பெற்றுபெருமைதேடிதந்துள்ளார்.

இவர் கிளிநொச்சி மாவட்ட நிலையில் இரண்டாவது இடத்தைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

இது தொடர்பாக இராசநாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

மகாதேவா சைவ சிறார் இல்லம் மாணவர்களின் எதிர்கால நலன்களையும் சமூகத்துக்கு பயனுள்ள திட்டங்களையும் முன்வைத்தே மாணவர்களை வழிநடத்தி வருகின்றது.

அந்த இலக்கு நிறைவுறத்தக்க வகையிலேயே மாணவர்களுக்கான கல்வி, விளையாட்டு மற்றும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதன் பயனாக யுவேந்திரராஜா கஜீவன் வர்த்தகப் பிரிவில் 'மூன்று -ஏ' பெற்று விசேடசித்தியடைந்து மாவட்டத்தில் இரண்டாவது நிலையையும் அடைந்துள்ளார். இந்த மாணவனுக்கு நாம் பென்னாடை போர்த்தி விருது மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவித்துள்ளோம்.

இதுபோன்று எமது ஏனைய மகாதேவா சைவச்சிறார் இல்ல மாணவர்களும் எதிர்காலத்தில் பிரமிக்கதக்க வகையில் தமது சாதனைகளை வெளிக்காட்டுவார்கள் என்றும் அவர் மேலும் நம்பிக்கையுடன் தெரிவித்தார். (க-41)

# ஜெயபுரத்தில் மருத்துவமனை விரைவில் நிர்மாணப் பணிகள்

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் மருத்துவமனை அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஜெயபுரம் பகுதியில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களும் ஜெயபுரத்தை அண்டியுள்ள பல்லவராயன்கட்டு, கரியாலை நாகபடுவான், சோலை, வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

**ஜெயபுரம் பகுதியில் சுற்றயல்கூறு வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.**

இந்த நிலையில் ஜெயபுரம் பகுதியில் சுற்றயல் கூறு வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதன் நிர்மாணப் பணிகள் மிகவிரைவாக முன்னெடுக்கப்படும் என்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ப.கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# வங்கிகளில் பெற்ற கடன்களை மீளச் செலுத்தாத விவசாயிகள்

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயச் செய்கைகளுக்கென வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை பெரும்பாலான விவசாயிகள் மீளச் செலுத்தவில்லை எனத் தெரிய வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இலங்கை வங்கி 49 மில்லியன் ரூபாவையும் மக்கள் வங்கி 47 மில்லியன் ரூபாவையும் விவசாயக் கடனாக வழங்கியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு கிளிநொச்சியில் உள்ள அரச மற்றும் தனியார் வங்கிகள் ஆறுமாத காலத்தில் மீளச் செலுத்தும் வகையிலான கடன்களை வழங்கியிருந்தன.

இந்த நிலையில் கடந்த இரு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட காலபோக மற்றும் சிறுபோக செய்கைகளின் போது வழங்கப்பட்ட கடன்களை அதிகளவான விவசாயிகள் இதுவரை மீளச் செலுத்த வில்லை. இந்த நிலையில் இலங்கை வங்கியினூடாக இந்த மாவட்டத்தைச் சேர்ந்த 449 விவசாயிகளுக்கு 49 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கி 49 மில்லியன் ரூபாவையும் மக்கள் வங்கி 47 மில்லியன் ரூபாவையும் விவசாயக் கடனாக வழங்கியுள்ளன.**

இதேவேளை மக்கள் வங்கியின் மூலமாக 237 பேருக்கு 47 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. இதனை விட வர்த்தக வங்கியால் 530 மில்லியன் ரூபா கடனாக வழங்கப்பட்ட நிலையில் 85 மில்லியன் ரூபா அறவிட முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. (க-6)

### தடுப்பு முகாமாகப் பயன்படுத்தப்பட்ட

# ஓமந்தை பாடசாலைக்கான மின்சாரத்தை துண்டிப்பதற்கு மின்சார சபை நடவடிக்கை

### மின் நிலுவை 23 லட்சத்தை தாண்டியதால் இந்த அவலம்

புதுக்குடியிருப்பு, பெப்.4

தடுப்பு முகாமாகப் பயன்படுத்தப்பட்ட பாடசாலையின் மின்சாரக் கட்டண நிலுவை 23 லட்சத்தைத் தாண்டியுள்ளதால் மின் துண்டிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இறுதிக்கட்ட போர் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த முன்னாள் போராளிகளை புனர்வாழ்வு அளிக்கும் நிலையமாக ஓமந்தை மத்திய கல்லூரியை பாதுகாப்பு படையினர் பயன்படுத்தி வந்தனர்.

சுமார் ஒரு வருட காலமாகப் பாடசாலையை தமது தேவைகளுக்காகப் பயன்படுத்திய படையினர் தாம் பயன்படுத்திய மின்சாரத்துக்கான கட்டணத்தைச் செலுத்த தவறியுள்ளனர்.

இதனையடுத்து இலங்கை மின்சார சபையால் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு மின் நிலுவையாக வுள்ள சுமார் 23 லட்சம் ரூபாவைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அத்தொகை இதுவரை செலுத்தப்படவில்லை.

இதனையடுத்து இந்தக் கல்லூரியின் கணினி அறை மற்றும் ஆண் மாணவர்கள் விடுதி என்பவற்றுக்கான மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மலசலகூடங்களுக்கான நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளதுடன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறிப்பிட்ட நிலுவைத் தொகையை செலுத்தத் தவறும் பட்சத்தில் பாடசாலைக்கான மின் இணைப்பு முற்றாகத் துண்டிக்கப்படும் என மின்சார சபையால் பாடசாலை நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டு கேட்ட போது;

படையினரால் பாவிக்கப்பட்ட மின்சார கட்டண நிலுவை இதுவரை செலுத்தப்படவில்லை. இது தொடர்பாக வவுனியா தெற்கு கல்விப் பணிப்பாளரிடமும், வவுனியா மாவட்ட அரச அதிபரிடமும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. குறிப்பிட்ட சில தினங்களுக்குள் நிலுவைகள் செலுத்தப்படாத விடத்து பாடசாலைக்கான மின் இணைப்பு முற்றாகத் துண்டிக்கப்படும் என மின்சார சபையால் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-400)

### கனகாம்பிகைக்குளம், பிரமந்தனாறுகுளம் ஆகியவற்றின்

# சிறுபோக செய்கைக் கூட்டங்கள் 7 இல்

கிளிநொச்சி, பெப்.4

கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம், பிரமந்தனாறுக்குளம் ஆகியவற்றின் சிறுபோக செய்கை தொடர்பான கூட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான சிறுபோக செய்கை தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

சிறுபோக செய்கை தொடர்பான விசேட கலந்துரையாடல்கள் அந்தந்த இடங்களிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் அன்றைய தினம் காலை 9 மணிக்கு பிரமந்தனாறுக்குளம் தொடர்பாகவும், பிற்பகல் 2 மணிக்கு கனகாம்பிகைக் குளத்தின் சிறுபோக செய்கை தொடர்பாகவும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# கலைஞர்களுக்குக் கௌரவம்

புதுக்குடியிருப்பு,பெப்.4

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கலைஞர்களைக் கௌரவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அமரர் கந்தையா சரவணபவன் ஞாபகார்த்த நற்பணி மன்றம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

காத்தவராயன் கூத்து,கோவலன் கண்ணகி கூத்து, கிறிஸ்தவ நாட்டுக் கூத்து என்பவற்றின் அண்ணாவிமார்கள் அமரர் கந்தையா சரவணபவனின் இரண்டாவது ஆண்டு நினைவு நாளில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட கூத்துக்களின் அண்ணாவிமார்கள் தமது பெயர், முகவரி, கூத்து வகை மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் எதிர் வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர்,நற்பணி மன்றம்,புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு செயற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (க-400)

# மெய்வன்மைப் போட்டிகள்

புதுக்குடியிருப்பு,பெப்.4

முல்லைத்தீவு தேராவில் தமிழ் வித்தியாலயம், கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அந்தந்தப் பாடசாலை மைதானங்களில் இடம் பெறவுள்ளன.

தேராவில் தமிழ் வித்தியாலய போட்டிகள் பாடசாலை அதிபர் ரி.யோகராஜா தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ராஜ்குமார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஐ.பிரதாபன் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக விசுவமடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வி.பத்மநாதன், இளங்கோபுரம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி அகலவத்த ஆகியோர் கலந்து கொள்வர்.

கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் போட்டிகளிற்கு பாடசாலை அதிபர் ஆர்.சந்திரகுமார் தலைமைவகிப்பார்.

பிரதம விருந்தினராக முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.கமலராஜன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ஜனாதிபதியின் முல்லை மாவட்ட இணைப்பாளர் எஸ்.கனகரத்தினம்,முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி.பேரின்பநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (க-400)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளின்போது அழகுறக் காட்சியளிக்கும் இல்லங்கள் இரண்டு படத்தில் காணப்படுகின்றன. (க-6)

### யாழ். மாநகர சபை எல்லையில்

# 117 உணவு கையாளும் நிலையங்களில் பல்வேறுவித சுகாதாரக் குறைபாடுகள்

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள 117 உணவு கையாளும் நிலையங்களில் குறைபாடுகள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர் நடவடிக்கைகளின் போது இது இனங்காணப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர உணவுப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட 9 பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் அமைந்துள்ள 250 உணவு கையாளும் நிலையங்களில் 117 நிலையங்களில் குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அறிவித்தலும் வழங்கப்பட்டுள்ளது. இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மதிப்பீடு செய்யப்பட்டமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் அறிவித்தல்கள் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறிவித்தல் வழங்கப்பட்டு இது வரை குறைபாடுகளை நிவர்த்தி செய்யாத உணவக உரிமையாளருக்கு 14 நாள்கள் கால இடைவெளியில் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 11 உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றால் 56 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாகக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கால அவகாசம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவை நிவர்த்தி செய்யப்படாது விடின் இந்த நிலையங்களைப் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மிகவும் பின்தங்கிய குறைபாடுகளுடன் இருந்த ஒரு நிலையத்தைக் கடந்த மாதம் 21 ஆம் திகதியுடன் மூடும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருத்தங்களை மேற்கொண்ட பின்னர் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு வந்ததன் பின்னரே மீண்டும் திறக்க அனுமதிக்கப்படும் எனவும் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

ஏற்கனவே பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவித்தலுக்கு அமைவாக 9 உணவு கையாளும் நிலையத்தினர் தாமாகவே தமது நிலையங்களைப் மூடியுள்ளனர். இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் தொடர்ந்து பரிசோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். - என்றார். (ம-14)

## வலி.மேற்குப் பிரதேச வீதிகளுக்கு வீதிக் கடவை அமைக்கக் கோரிக்கை

**விபத்துக்கள் அதிகரிப்புக்கு முக்கிய காரணம் வீதிக்கடவைகள், விபத்துத் தவிர்ப்புக் குறியீடுகள் இன்மையே.**

யாழ்ப்பாணம், பெப்.4

வலி. மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் வீதிக்கடவைகள் மற்றும் பாதசாரி அவதான குறியீடுகள் அமைக்க வீதி அபிவிருத்தி திணைக்களமும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் முன்வரவேண்டும்.

இதன்மூலம் பாடசாலை சிறுவர்கள் மற்றும் பயணிகள் வீதி விபத்துக்களில் சிக்குவது குறைக்கப்படும்.

வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வலி.மேற்கில் கடந்த மாதங்களாகப் பல விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதிலும் சிறுவர்கள், முதியவர்கள் என்போர் விபத்துக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர்.

இதற்கு முக்கிய காரணம் வீதிகளில் பாதசாரிகள் வீதியைக் கடக்கும்போது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய மஞ்சள் நிற குறியீட்டிலான பாதசாரி கடவைகள் மற்றும் விபத்துத் தவிர்ப்பு குறியீடுகள் இன்மையே.

எனவே வீதி அபிவிருத்தி திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன கூடிய கவனம் எடுத்து வீதிக் குறியீடுகளை அமைத்து விபத்துக்களைக் குறைக்க முன்வரவேண்டும்- என்று கூறினார். (ம-50)

## மின்சாரம் பெற மாநகர சபையிடம் அனுமதி பெறும் பிரேரணை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்.மாநகரப் பகுதியில் மின்சாரத்துக்கு விண்ணப்பிக்கும் மக்கள் அதற்கு முன்பாக மாநகர சபையிடம் முன் அனுமதியை பெற வேண்டும் என்ற தீர்மானம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் எ.பரஞ்சோதி தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 31 ஆம் திகதி மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத் தொடரில் இது தொடர்பான பிரேரணை ஒன்றை மாநகர ஆணையாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

மாநகரப் பகுதியில் மின்சாரம் பெறுவதற்கு மின்சார சபைக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பாக மாநகர சபையின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என்றவாறான பிரேரணையே இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டது.

இது மக்களைப் பெரும் துன்பத்துக்குக் கொண்டு செல்லும் நிலை என்றும் இதனால் மக்கள் மின்சாரத்தைப் பெறுவதற்கு மாநகர சபைக்கும் அலைய வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து உறுப்பினர்கள் ஒருமித்து இந்தப் பிரேரணையை நிராகரித்தனர்- என்று கூறினார். (ம-17)



பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலய கல்வாரி ஒன்றிய அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு, பங்குத்தந்தை அருட்திரு ஜே.நீக்லஸ் அடிகள் தலைமையில் நேற்று ஆலய முன்பள்ளி மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் நடமாடும் குருதி சேகரிப்பு பகுதியினர் இரத்தம் சேகரித்தனர். (ம-135)

## மதுப்பிரியர்களின் நடமாட்டம் குறைந்தது

தென்மராட்சி பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் படையினரின் நடவடிக்கையால் வீதிகளில் மதுபோதையில் தள்ளாடுபவர்களின் நடமாட்டம் பெரிதும் குறைந்துள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

வீதியோரங்களில் வைத்து மது அருந்திவிட்டு வீதியில் செல்வோருக்கு இடையூறுகள் கொடுத்த மதுப் பிரியர்கள் பலர் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதனையடுத்து வீதிகளில் போதையில் அட்டகாசம் புரிபவர்களை அண்மைக் காலமாகக் காணமுடிவதில்லை என்று மக்கள் தெரிவித்தனர். (ம-9)

# பூநாறி ஒழுங்கையிலுள்ள தனியாரின் கிணற்று நீரில் எண்ணெய்த் தன்மை

## தண்ணீரும் துர்நாற்றம் வீசுகிறது

**தண்ணீர் மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இதில் மலத்தொற்றுகளோ, வேறு எந்தவிதமான பிரச்சினைகளோ இல்லை என்று கூறப்பட்டது.**

யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்ப்பாணம், கே.கே.எஸ்.வீதி , பூநாறி ஒழுங்கையில் உள்ள ஒருவரது வீட்டுக் கிணற்று நீரில் எண்ணெய்த் தன்மையான திரவம் மிதப்பதுடன் தண்ணீரும் துர்நாற்றம் வீசுகிறது.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்ட போதும் இதற்கான தீர்வு இன்னும் காணப்படவில்லை என்று வீட்டு உரிமையாளர் கவலை தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் கிணற்று நீரின் மேல் எண்ணெய்த் தன்மை போன்று ஒரு வகைத்திரவம் மிதக்கிறது. தண்ணீர் பாவிக்க முடியாதளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது. புழுக்கள், குடம்பிகள் நிறைந்துள்ளன.

டிசெம்பர் 05 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரை நான்கு தடவைகள் கிணறு இறைக்கப்பட்ட போதும் பயன் எதுவும் இல்லை என்றும், கடந்த மாதமும் கிணறு இறைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

தண்ணீர் மாதிரி எடுக்கப்பட்டு டிசெம்பர் மாதம் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அனுப்பப்பட்டது. எதுவித பிரச்சினையும் இல்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நீர்வளச் சபைக்கு தண்ணீர் மாதிரி அனுப்பப்பட்டு மலத் தொற்று ஏதும் உள்ளதா என்பது பற்றி பரிசோதிக்கப்பட்டது. அதன் போதும் பிரச்சினையில்லை என்று பதில் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தண்ணீரில் எந்தவிதமான முன்னேற்ற நிலையும் ஏற்படவில்லை.

கடந்த டிசெம்பரில் யாழ். சுகாதார வைத்திய அதிகாரிக்கு கடிதம் மூலமாக இரண்டு தடவைகள் அறிவிக்கப்பட்டது. நேரடியாகவும் சென்றும் அறிவிக்கப்பட்டது. பொது சுகாதார பரிசோதகர் பார்வையிட்டுத் திரும்பிவிட்டார். நடவடிக்கைஎதுவும்எடுக்கப்படவில்லை.

பின்னர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை பொது சுகாதாரப் பரிசோதகர் பார்வையிட்டு கிணற்று நீரை இறைப்பதற்கு முயன்றுள்ளார். எனினும் தண்ணீர் மோசமான நிலையை அடைந்துள்ளதால் வெளியேற்றும் போது பிரச்சினை ஏற்படுமா என்பது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி சென்று பார்வையிடுவதாகக் கூறப்பட்டது. ஆனால் பார்வையிடப்படவில்லை.

இதனால் குறித்த வீட்டிலுள்ளவர்கள் பிற இடங்களிலிருந்தே தண்ணீரைப் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சுகாதாரப் பகுதியினர் விரைந்து செயற்படவில்லை என்று குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று வீட்டு உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார். (ம-4)

## போத்தலில் கள் அடைக்கும் நிலையம் வரணி நாவற்காட்டில்

வரணி,பெப்.4

வரணி பிரதேசத்தில் நாவற்காடு தனிவளைப் பகுதியில் போத்தலில் கள் அடைக்கும் நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரதேசத்தில் சங்கத்துக்கு சொந்தமானதும் முன்னர் பனம் வெல்லம் தயாரிக்கும் நிலையமாகவும் இயங்கிய கட்டடத்தைப் புனரமைத்து போத்தலில் கள் அடைக்கும் நிலையமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் போத்தலில் கள் அடைக்கும் பகுதி மற்றும் வெற்றுப் போத்தல்களைச் சுத்தமாக்கும் பகுதி என்று இரு பிரிவுகளாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்பு கருப்பட்டி தயாரிக்கும் தொழிற்சாலையாக இயங்கிய இந்தக் கட்டடம் போரால் அழிவடைந்து பல காலமாக இயங்காத நிலையில் உள்ளது.

இந்தப் பகுதியிலேயே கள் அடைக்கும் தொழிற்சாலை செயற்படவுள்ளது என்றும் ஆரம்ப கட்ட வேலைகள் விரைவில் இடம்பெறவுள்ளன என்றும் சங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. இதனால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் சந்தர்ப்பம் உண்டு எனக் கூறப்பட்டது. (ம-122)

## திருவடிநிலையில் அணை அமைப்பு

சுழிபுரம், பெப்.4

கடல் அலைகளின் தாக்கத்தில் இருந்து சுழிபுரம் திருவடிநிலை வாகை வைரவர் ஆலயத்தைப் பாதுகாக்கக் கற்சுவர் கட்டப்பட்டு வருகின்றது.

கடல் அலைகள் கடற்கரையோரத்தை அரித்து வருகின்றன. இந்த நிலையில் ஆலயத்தைக் காக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-28)

## இந்திய அமெரிக்கருக்கு உயரிய விருது அமெ.ஜனாதிபதி ஒபாமா வழங்கினார்



இந்திய அமெரிக்கரான ரங்கசுவாமி ஸ்ரீநிவாசனுக்கு தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புக்கான தேசிய விருதை ஜனாதிபதி பராக் ஒபாமா வழங்கினார்.

1985 ஆம் ஆண்டு முதல் குறித்த விருது வழங்கப்பட்டு வருகிறது. அறிவியல் விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்துபவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

லேசர் துறையில் சிறந்த பணியாற்றியமைக்காக அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. சாமுவேல் பிளம் மற்றும் ஜேம்ஸ் வெய்ன் ஆகிய விஞ்ஞானிகளுடன் இணைந்து இவ் விருதைப் பெற்றார் ஸ்ரீநிவாசன்.

தொழில்நுட்ப மற்றும் கண்டுபிடிப்புக்கான தேசிய விருது, அறிவியல் அறிஞர்களுக்கு வழங்கப்படும் அமெரிக்காவின் உயரிய விருதாகும். சென்னை பல்கலைக் கழகத்தில் 1950 ஆம் ஆண்டு அறிவியல் பட்ட மேற்படிப்பை நிறைவுசெய்த ஸ்ரீநிவாசன், 1956இல் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் டாக்டர் படிப்பை நிறைவு செய்தார். 2002 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கண்டுபிடிப்புக்கான ''ஹால் ஒஃப் ஃபேம்'' விருதைப் பெற்றார். அவர், தனது 21 கண்டுபிடிப்புகளுக்கு அமெரிக்க காப்புரிமையைப் பெற்றுள்ளார்.




மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்தின் கீழ் சிறப்பாகப் பணியாற்றிய மாவட்ட ஆட்சியாளருக்கான விருதை, பிரதமர் மன்மோகன் சிங்கிடம் இருந்து பெறும் திருச்சி மாவட்ட ஆட்சியாளர் ஜெயஸ்ரீ முரளிதரன்.

## மனித உரிமைகள் பட்டியலில் பின்தள்ளப்பட்டது இந்தியா

மனித உரிமைகளைப் பேணும் பட்டியலில் இந்தியா பின்தள்ளப் பட்டது. மாவோயிஸ்ட் விவகாரங்கள், கூடங்குளம் அணுமின் நிலைய விவகாரம் ஆகியவற்றை மத்திய அரசு எதிர்கொள்ளும் விதம், டில்லியில் அண்மையில் மருத்துவ மாணவி பாலியல் பலாத்காரம் சம்பவம், இந்தியாவில் அதிகரித்து வரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உள்ளிட்ட காரணங்களால் மனித உரிமைகள் பட்டியலில் இந்தியா பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டின் சட்டதிட்டங்களில் திருத்தம் கொண்டு வந்து இத்தகைய பாதிப்புக் களை சீரமைப்பதே இந்தியாவின் எதிர்காலத்துக்கு நல்லது என்று அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் நிரூபமா ராவ் தெரிவித்துள்ளார். (வ)

### இலங்கை மீது பன்னாட்டு விசாரணை கோரி

# தமிழகம் முழுவதும் மார்ச் 4 ஆர்ப்பாட்டம்

சென்னை, பெப்.4

இலங்கை மீது பன்னாட்டு **விசாரணை** நடத்தக் கோரி, **தமிழகம் முழுவதும்** எதிர்வரும் **மார்ச்** 4 ஆம் திகதி **ஆர்ப்பாட்டம்** நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக மக்கள் நல்வாழ்வு **இயக்க** ஒருங்கிணைப்பாளர் **கண.** குறிஞ்சி, ம.தி.மு.க. **பொது செயலாளர்** வைகோ, **தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர்** வேல் முருகன், **திரைப் பட** இயக்குநர் **தங்கராஜ், பேராசிரியர்** சரஸ்வதி **ஆகியோர்** நேற்று முன்தினம் **பேட்டியளித்தனர்.**

பேட்டியின் போது அவர்கள் கூறியதாவது:-

**மக்கள் நல்வாழ்வு இயக்கம் சார்பில் நேற்று காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை லயோலா கல்லூரி பி.எட். அரங்கில் ''தமிழீழ இனப்படு கொலையும், தமிழ் சங்கத்தின் கடமையும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.**

மக்கள் நல்வாழ்வு இயக்கம் சார்பில் நேற்று காலை 10 மணி முதல் இரவு 9 மணி வரை லயோலா கல்லூரி பி.எட் அரங்கில் ''தமிழீழ இனப்படு கொலையும், தமிழ் சங்கத்தின் கடமையும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இம்மாத இறுதி வாரத்தில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபைக் கூட்டம் நடைபெற வுள்ளது.

இதில், 47 நாடுகள் கலந்து கொள்கின்றன. இதில், இலங்கை அரசுக்காக இந்தியா சார்பு நிலையை எடுக்கக் கூடாது. எதிர்வரும் 12 ஆம் திகதி மெரினா கடற்கரையில் ஈழத்தமிழர் சுடர் ஒளி ஏற்றப்படும்.

இலங்கை அரசு மீது பன்னாட்டு விசாரணை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் மார்ச் 4 ஆம் திகதி தமிழகம் முழுவதும் கட்சி சார்பற்ற ஆர்ப்பாட்டம் நடைபெறும். சென்னையில் இலங்கை தூதரகம் முன்பாக மேற்படி ஆர்ப்பாட்டம் நடைபெறும்- என்றனர். (வ)

## ஆந்திரா தலைமைச் செயலகத்துக்கு மர்மமனிதனால் வெடிகுண்டு மிரட்டல்

### ஹைதராபாத்தில் பரபரப்பு

சித்தூர், பெப்.4

ஆந்திர மாநில தலைமை செயலகத்துக்கு வெடி குண்டு மிரட்டல் விடுக்கப் பட்டதால் பரபரப்பு ஏற் பட்டது.

ஆந்திர மாநில தலைநகரான ஹைதராபாத்தில் உள்ள சட்டப்பேரவை, தலைமைச் செயலகம் மற்றும் புகழ்பெற்ற பிர்லா மந்திர் ஆகிய இடங்களில் வெடி குண்டுகள் வைக்கப்பட் டுள்ளன. அவை சிறிது நேரத்தில் வெடிக்கும் என்று ஹைதராபாத் பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு தொலை பேசியில் பேசிய மர்ம மனிதன் எச்சரித்தான்.

உடனே, பொலிஸார் வெடி குண்டு நிபுணர்கள், மோப்ப நாய்களுடன் சம்பந்தப்பட்ட இடத்துக்கு விரைந்தனர். அங்கு இருந்தவர்களை உடனடியாக அப்புறப்படுத்தி, தீவிர சோதனை நடத்தினர். நேற்று முன்தினம் சனிக்கிழமை என்பதால், பிர்லா மந்திரில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. அவர்கள் வெளியேற்றப்பட்டு சோதனை செய்யப்பட்டது. ஆனால், வெடி குண்டுகிடைக்கவில்லை. (வ)

## இந்தியாவுக்குள் ஊடுருவிய முஷாரப்புக்கு முன்னாள் இராணுவத் தளபதி சிங் பாராட்டு

டில்லி, பெப்.4

கார்கில் போருக்கு முன்பாக இந்தியாவுக்குள் ஊடுருவி ஒருநாள் இரவு முழுவதும் தங்கியிருந்த பாகிஸ்தானின் இராணுவத் தளபதியாக இருந்த பர்வேஸ் முஷாரப்புக்கு இந்தியாவின் முன்னாள் இராணுவத் தளபதி வி.கே.சிங் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.



இதேவேளை இந்திய இராணுவத்தின் அலட்சியம் குறித்தும் அவர் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.

கார்கில் போருக்கு முன்பாக இந்தியாவுக்குள் பர்வேஸ் முஷாரப் ஊடுருவினார் என்று பாகிஸ்தானின் முன்னாள் இராணுவ அதிகாரி தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த வி.கே.சிங்-

குறித்த விவகாரத்தில் இரண்டு விடயங்களைப் பார்க்க வேண்டியுள்ளது.

அயல்நாட்டு இராணுவத் தளபதியாக இருந்து மற்றொரு நாட்டுக்குள் 11 கிலோ மீற்றர் தொலைவில் ஊடுருவி ஒருநாள் இரவு தங்கியிருந்த முஷாரப்பின் செயல் துணிச்சலானது. பாராட்டுக்குரியது. இப்படி ஊடுருவினால் உயிருக்கே ஆபத்து என்று தெரிந்தும் அவர் தைரியமாக ஊடுரு வியிருக்கிறார்.

இரண்டாவதாக எமது இராணுவம் அப்போது என்ன செய்து கொண்டிருந்தனர் என்ற உண்மையும் வெளிக் கொண்டுவரப்பட வேண்டும். எப்படி அவர் ஊடுருவ அனுமதிக்கப்பட்டார்? அப்படியானால் எமது தரப்பில் இருந்த தவறுகள் என்ன? அவற்றைச் சரிசெய்தாக வேண்டும் - என்றார்.

இந்திய இராணுவத் தளபதியாக 2010-2012 காலத்தில் தலைமை தளபதியாக இருந்தவர் வி.கே.சிங் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## தொழிற்சங்கங்களை மன்மோகன் தீண்டத்தகாதவையாக பார்க்கிறார்

### கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டுகிறது

கொல்கத்தா, பெப்.4

தொழிற்சங்கங்களை தீண்டத்தகாதவர்கள் போல் நடத்துவதாக பிரதமர் மன்மோகன் சிங் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் குருதாஸ் குப்தா குற்றம் சாட்டியுள்ளார்.

கொல்கத்தாவில் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறுகையில்:-

தொழிற்சங்கங்கள் சார்பில் நடைபெறவுள்ள 2 நாள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்துக்குப் பின்னராவது மத்திய அரசு விழித்துக் கொள்ள வேண்டும்.

**வேலைநிறுத்தப் போராட்டத்துக்குப் பின்னராவது மத்திய அரசு விழித்துக் கொள்ள வேண்டும்.**

தனியார் நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகளைச் சந்திக்க நேரம் ஒதுக்கும் பிரதமர், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் சந்தித்துப் பேசாமல் புறக்கணிக்கிறார்.

நாடாளுமன்றத்தில் பதில் சொல்ல வேண்டும் என்ற அச்சம் மத்திய அரசுக்கு முழுமையாகவே இல்லை. ஹசாரே மற்றும் டில்லி பாலியல் வழக்கு தொடர்பான மக்கள் போராட் டங்களைக் கண்டுதான் மத்திய அரசு அச்சப்படுகிறது.

எதிர்வரும் 20, 21 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள, வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு பிஜு ஜனதா தளம், சிவசேனா மற்றும் தி.மு.க. கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்-என்றார். (வ)

## புதுச்சேரி முன்னாள் முதல்வர் காலமானார்



புதுச்சேரி, பெப்.4

மூத்த காங்கிரஸ் தலைவரும், புதுச்சேரி மாநில முன்னாள் முதல்வருமான ப.சண்முகம் நேற்று முன்தினம் காலமானார்.

84 வயதான சண்முகம் வயது மூப்பின் காரணமாக உடல் நலம் குன்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தத நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் இறந்ததாக வைத்தியர்கள் தெரி வித்தனர்.

23 ஆண்டுகளாக அவர் புதுச் சேரி மாநில காங்கிரஸ் தலை வராக இருந்தவர். இரண்டு முறை முதல் வராகவும் நான்கு முறை நாடாளுமன்ற உறுப்பின ராகவும் இருந்துள்ளார். (வ)




## துருக்கி அமெ. தூதரகத்தில் மனிதக் குண்டுத் தாக்குதல்

அங்காரா, பெப்.4

துருக்கி தலைநகர் அங்காராவில் உள்ள அமெரிக்க தூதரகத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர்.

தூதரகத்தின் நுழைவு வாயிலில் உள்ள பாது காப்பு சோதனைப் பகுதியில் இந்தத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இதில் பாதுகாப்புப் பணியில் இருந்த வீரர்களில் ஒருவரும், வெடிகுண்டுடன் வந்த பயங்கரவாதியும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். எத்தனை பேர் காயமடைந்தார்கள் என்பது குறித்து விவரங்கள் தெரியவரவில்லை. (ற)

## மலாலாவின் பெயர் நோபல் பரிசுக்கு பரிந்துரை



ஒஸ்லோ, பெப்.4

2013ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த மலாலாவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் பெண்களின் கல்விக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்த மலாலா, தலிபான்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார். பல மாத காலச் சிகிச்சைக்கு பின்னர் மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ள மலாலா, தற்போது பிரிட்டனில் தஞ்சமடைந்துள்ளார். இந்தநிலையிலேயே அவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என பல தரப்பினரும் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

துணிச்சலான இவரது செயற்பாட்டை அடுத்தும், கல்வி மீது கொண்டுள்ள அக்கறை காரணமாகவும் மலாலா, 2011 ஆம் ஆண்டு பாகிஸ்தான் அரசால் தேசிய சமாதான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## நிலநடுக்கம்

### 6.9 ஜப்பானில்

டோக்கியோ, பெப்.4

ஜப்பானில் நேற்றுக் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவுகோலில் 6.9 ஆகப் பதிவாகியுள்ள இந்த நிலநடுக்கத்தால் அங்குள்ள கட்டடங்கள் குலுக்கின என்று தெரிவிக்கப்படுகிறது. அச்சமடைந்த மக்கள் கட்டடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தின் மையம் ஜப்பானின் ஒபிஹிரோ நகருக்கு அண்மையில் காணப்பட்டது என்று கூறப்படுகின்றது.

நிலநடுக்கம் காரணமாக சுனாமி எச்சரிக்கை ஏதும் விடப்படவில்லை என்று தெரிய வருகிறது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (ற)

### 6.6 சொலமன் தீவுகளில்

சிட்னி, பெப்.4

பசிபிக் பெருங்கடலில் பாபுவா நியூகினிக்கு கிழக்கே அமைந்துள்ள சொலமன் தீவுகளில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.6 புள்ளிகள் என்று பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தின் மையம் சான்டா குரூஸ் தீவுகளுக்கு அருகே 19 கி.மீ. ஆழத்தில் காணப்பட்டது என்று ஆஸ்திரேலிய புவி அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் இல்லை என்று தெரிவித்துள்ள ஹவாயைச் சேர்ந்த பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம், அந்தப் பகுதியில் கடந்த சில நாள்களாகவே இலேசான நிலநடுக்கங்கள் உணரப்பட்டன என்று தெரிவித்துள்ளது. (ற)

# மாலியில் இன ஒடுக்குமுறை

## குற்றஞ்சாட்டுகிறது ஐக்கிய நாடுகள் சபை

ஜெனிவா, பெப்.4

மாலியில் இன ஒடுக்குமுறை இடம்பெற்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை குற்றஞ்சாட்டியுள்ளது. தீவிரவாதிகளுடன் அப்பாவி பொதுமக்கள் மீதும் துருப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றும் இவை குறித்து ஐ.நா.ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்றும் ஐ.நா.வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாலியில் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிராக அந்த நாட்டு இராணுவத்தினர் போர் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை பிரான்ஸ் படையினரின் உதவியுடன் மாலி இராணுவத்தினர் கைப்பற்றி வருகின்றனர்.

எனினும், அந்த நடவடிக்கைகளின் போது மாலி இராணுவத்தினர் சட்ட விரோதமான முறையில் செயற்பட்டுள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளை ஒடுக்குவதற்காக மாலி இராணுவத்தினர் பயன்படுத்தும் தந்திரோபாயங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை. அவை மனித உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளன என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய நாடுகள் சபையின் இன ஒடுக்குமுறைக்கு எதிரான பிரதிநிதி அடமா டெயிங்.



மாலி இராணுவத்தினர் திட்டமிட்ட வகையில் அரேபியர்கள் மற்றும் சிறுபான்மை டுவார்கெஸ்களை அழித்து வருகின்றனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (ற)

## துப்பாக்கி சுடும் ஒபாமா; கிளம்பியது புதிய சர்ச்சை



வோஷிங்டன், பெப்.4

அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா துப்பாக்கிச்சூடு நடத்தும் புகைப்படங்கள் இணையத்தளங்களில் வெளியாகியுள்ளன. அந்தப் புகைப்படங்களை வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ளது. தற்போது அந்தப் புகைப்படங்களால் புதிய சர்ச்சை ஒன்றும் கிளம்பியுள்ளது.

அமெரிக்காவில் துப்பாக்கி கலாசாரத்தை கட்டுப்படுத்த அண்மையில் புதிய சட்டத்திருத்தம் கொண்டு வர ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவே துப்பாக்கியுடன் நன்கு பரீட்சயமாக இருப்பது போல் இந்தப் புகைப்படங்கள் உள்ளன. அவருக்கு இத்தகைய பொழுதுபோக்கு இருப்பது பற்றி இதுவரை ஏன் ஊடகங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஒபாமா எதிர்வரும் திங்கட்கிழமை துப்பாக்கி கட்டுப்பாடு தொடர்பிலான சீர்திருத்த விவாதத்தில் கலந்து கொள்ளவுள்ள நிலையில் இந்த விவகாரம் அமெரிக்காவில் சூடுபிடித்துள்ளது. (ற)

# இரட்டை நிலைப்பாடு கொண்டுள்ள அமெரிக்காவுக்கு விரைவில் பதிலடி

## எச்சரிக்கிறது வடகொரியா

பியோங்யாங், பெப்.4

அமெரிக்கா கொண்டுள்ள இரட்டை நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி தருவோம்- என்று வட கொரியா எச்சரித்துள்ளது.

கொரியப் பிராந்தியத்தின் ஏவுகணைத் திட்டங்கள் குறித்து அமெரிக்கா கொண்டுள்ள இரட்டை நிலைப்பாட்டைக் குறிப்பிட்டே வட கொரியா இவ்வாறு தெரிவித்துள்ளது.


வடகொரியா கடந்த மாதம் ஏவுகணைச் சோதனையை மேற்கொண்டிருந்தது. அந்த ஏவுகணைச் சோதனைக்கு உலகநாடுகள் பல குறிப்பாக அமெரிக்கா கடும் கண்டனம் வெளியிட்டிருந்தன. அதையடுத்து ஐ.நாவும் வட கொரியா மீது பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது.

இந்தநிலையில் தென் கொரியா கடந்த புதன்கிழமை தனது முதலாவது ஏவுகணை வெற்றிகரமாக விண்ணுக்குச் செலுத்தியது. அதுகுறித்துக் கருத்து வெளியிட்ட அமெரிக்கா, தென் கொரியாவின் ஏவுகணைத் திட்டம் இராணுவம் தொடர்பானது அல்ல என்று தெரிவித்தது.

அதைத் தொடர்ந்தே, அமெரிக்காவின் இத்தகைய இரட்டை நிலைப்பாட்டுக்கு தக்க பதிலடி தருவோம் என்று வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக வட கொரிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளரிடம் கேட்டபோது கருத்து கூற மறுத்து விட்டார். (ற)

## பதவி விலகினார் தைவான் பிரதமர்



தைபே, பெப்.4

தைவான் பிரதமரும் பொருளாதார நிபுணருமான சீன் சென் கடந்த வெள்ளிக்கிழமை பதவி விலகினார். தனது உடல்நிலையைக் கருத்தில் கொண்டே பதவியில் இருந்து ஓய்வுபெறுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்-

எனது உடல்நிலையைக் கருத்தில்கொண்டுஇந்தமுடிவை எடுத்தேன். இனி வரும் காலங்களில் தைவானின் பொருளாதாரம் நன்கு முன்னேற்றம் காணும் என்று நம்புகிறேன்- என்று தெரிவித்தார்.

சென்னின் பதவி விலகலை ஏற்றுக் கொண்டுள்ளதாக தைவான் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது. அதனையடுத்து துணைப் பிரதமராக இருந்த ஜியாங் யி-ஹுவாஹ் பிரதமராகப் பொறுப்பேற்பார்-என்று அறிவித்தார் சென்.

பொருளாதாரம் நலிவடைந்திருந்த நிலையில் தைவானின் பிரதமர் பொறுப்பை ஏற்ற சென்னின் பல்வேறு நடவடிக்கைகளால் கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் 1.2 சதவீதமாக உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## நைஜீரிய இராணுவம் தாக்கு தீவிரவாதிகள் 17 பேர் சாவு

அபுஜா, பெப்.4

நைஜீரிய இராணுவத்தினர் நடத்திய ஹெலிகொப்டர் தாக்குதலில் 17 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் உள்ள மைதுகுரி என்னுமிடத்தை தலைமை இடமாகக் கொண்டு போகோஹராம் என்ற முஸ்லிம் தீவிரவாத அமைப்பு இயங்கி வருகிறது. இந்த அமைப்பு நைஜீரியாவில் இஸ்லாமிய சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி வருகிறது.

போர்னோ மாகாண காட்டுப்பகுதியில் இருந்த இரண்டு தீவிரவாதிகளின் பயிற்சி முகாமைக் குறிவைத்து இராணுவ ஹெலிகொப்டர் குண்டுகள் வீசி தாக்கின. இந்தத் தாக்குதலில் 17 தீவிர வாதிகள் உயிரிழந்தனர் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மாலியின் திம்புக்டு நகருக்கு பிரான்ஸ் ஜனாதிபதி பயணம்

பரிஸ், பெப்.4

மாலியில் இஸ்லாமியத் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்கப்பட்ட திம்புக்டு நகருக்கு பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்ஸுவா ஒல்லோந்து பயணம் மேற்கொண்டார். அவருக்கு அங்கு பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரான்ஸ் தலைமையிலான மாலி படைகளால் கடந்த வாரம் திம்புக்டு நகர் கைப்பற்றப்பட்டது.

அதனையடுத்து பிரான்ஸ் ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். ஒரு நாள் பயணமாக மாலி சென்றுள்ள ஒல்லோந்துடன் பிரான்ஸின் மூத்த அமைச்சர்கள் பலரும் இணைந்து கொண்டனர்.

மாலிக்கு புறப்படும் முன்னதாக கருத்துத் தெரிவித்த பிரான்ஸுவா ஒல்லோந்த்-

மாலிக்குள் ஆபிரிக்க நாடுகளின் படைகளை அனுப்பும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும். அங்கு இடைக்கால அரசின் மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும். அவற்றுக்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கோரவுள்ளேன் - என்று தெரிவித்தார்.

கடந்த ஆண்டு வடக்கு மாலியின் முக்கிய பகுதிகளைக் கைப்பற்றியிருந்த இஸ்லாமியத் தீவிரவாதிகளை அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் கடந்த மூன்று வாரங்களாக பிரான்ஸ் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை உற்சாகப்படுத்தும் விதமாகவே பிரான்ஸ் ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொண்டார் என்று கூறப்படுகிறது. (ற)

## தீவுகள் விடயத்தில் விட்டுக் கொடுக்கோம்

### சீனாவுக்கு ஜப்பான் பதிலடி

டோக்கியோ, பெப்.4

அச்சுறுத்தல்களில் இருந்து சென்காகு தீவுகளைக் காப்போம் என்று ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

சென்காகு தீவுகள் தொடர்பாக சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே முறுகல் நிலை நீடித்து வருகிறது. தீவுகள் தமக்கே சொந்தமானவை என்று கூறும் சீனா, தீவுகளின் கடல் பகுதியைக் கண்காணிப்பதற்காக ரோந்துக் கப்பல்களை அவ்வப்போது அனுப்பி வருகிறது. ஜப்பானின் கண்காணிப்பு விமானங்களும் அந்தப் பகுதியைக் கண்காணித்து வருகின்றன. அதனால் பிராந்தியத்தில் பதற்ற நிலை காணப்படுகிறது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் டோக்கியோவில் கருத்துத் தெரிவித்த ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே -

நம் நாட்டைச் சுற்றிலும் பாதுகாப்புச் சூழ்நிலையானது மிகவும் மோசமாகி வருகிறது. நமது பிரதேச உரிமைகள் விடயத்தில் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை நாம் சந்தித்து வருகிறோம். எனினும், இப்போதைய அச்சுறுத்தலை எதிர்த்து நிற்பதிலும், மக்களின் உயிர், உடைமைகள் மற்றும் நமது நிலம், தீவுகள், கடல், வான்பகுதி ஆகியவற்றைக் காப்பதிலும் நான் பின்னிற்கப் போவதில்லை'' என்று தெரிவித்தார்.

இதேவேளை, சர்ச்சைக்குரிய தீவுகளைக் கண் காணிக்கும் பணியைத் தீவிரப்படுத்துவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் பெருந் தொகையை பிரதமர்ஷின்சோ அபே தலைமையிலான அரசு ஒதுக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## சோதனைச் சாவடியின் மீது மனிதக் குண்டுத் தாக்குதல்

### 23 பேர் சாவு; பாகிஸ்தானில் சம்பவம்



இஸ்லாமாபாத், பெப்.4

பாகிஸ்தானில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் 23 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தானின் வடமேற்கில் அமைந்துள்ள இராணுவ முகாம் ஒன்றை இலக்கு வைத்தே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களில் 12 இராணுவத்தினரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இந்த தாக்குதலுக்கு தலிபான் அமைப்பு உரிமை கோரியுள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் இராணுவம் அமெரிக்காவுடன் இணைந்து ஆளில்லா விமானத்தின் மூலம் தாக்குதல் நடத்தியது என்றும் அந்த தாக்குதலுக்கு பதிலடியாகவே இந்த தாக்குதலை மேற்கொண்டதாகவும் தலிபான் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ற)

## சிரிய எதிர்க்கட்சித் தலைவர் ஈரான் பிரதிநிதிகளுடன் பேச்சு

முனிச், பெப்.4

சிரியாவின் பிரச்சினையை விரைவில் முடிவுக்கு கொண்டு வரும் வகையில் ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சரை சந்தித்து பேச உள்ளார் சிரியா எதிர்க்கட்சி தலைவர் மோவாஸ் அல்காதிப்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில்:-

தற்போது ஜேர்மனியில் நடைபெற்று வரும் பாதுகாப்பு கருத்தரங்கில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோய் பிடன் மற்றும் ரஷ்யாவின் வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவைச் சந்தித்து பேசவுள்ளேன்.

விரைவில் அந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் ஈரான் வெளியுறவ்த்துறை அமைச்சர் அலி அக்பர் சலேவையும் சந்தித்து இது குறித்துக் கலந்துரையாடுவேன்- என்று தெரிவித்தார். (ற)

## கடலில் வீழ்ந்தது ரஷ்ய ரொக்கெட்

மொஸ்கோ, பெப்.4

அமெரிக்காவின் தொலைத்தொடர்பு செயற்கைக் கோளை தாங்கிச் சென்ற ரஷ்ய ரொக்கெட் பசிபிக் கடலில் விழுந்து நொறுங்கியது.

நகர்வு ஏவுதளத்திலிருந்து செலுத்தப்பட்ட இந்த ரொக்கெட் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது.

'ஜெனித்-3எஸ்எல்' எனப் பெயரிடப்பட்ட அந்த ரொக்கெட் விண்ணுக்குச் செலுத்தப்பட்ட சில வினாடிகளில் பசிபிக் கடலில் விழுந்தது என்றும், விபத்துக்கான காரணம் குறித்து அறிய குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் ரொக்கெட்டை தயார் செய்த எனர்ஜியா நிறுவனம் தெரிவித்துள்ளது. (ற)

## முக்கிய நகரை கைப்பற்றினர் புரட்சியாளர்கள்

### சிரிய அரச படைகள் நெருக்கடியில்

டமஸ்கஸ், பெப்.4


சிரியாவின் அலெப்போ மாவட்டத்தின் முக்கிய நகரை புரட்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

அரச படைகளுடன் 48 மணி நேரம் நீடித்த சண்டையில், அலெப்போ மாவட்டத்தில் உள்ள ஷேக் செட் நகரை, புரட்சியாளர்கள் தங்கள் முழுக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அங்கு இடம்பெற்ற கடும் மோதல்களால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்த நகர் வழியாகத்தான் நய்ரப் சர்வதேச விமான நிலையத்துக்குச் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. ஷேக் செட் நகரைக் கைப்பற்றியது புரட்சியாளர்களுக்கு கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது.

இதேவேளை, அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 22 மாதங்களாக நடைபெற்று வரும் சண்டையில் 60 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததாக ஐ.நா.சபை குறிப்பிடுகின்றது. (ற)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சத்தியநாதன்

(26 ஸ்ரீ 5846 லொறி உரிமையாளர்)

நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தாளையடி லேன், திருநெல் வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சத்தியநாதன் கடந்த (02.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் பாசமிகு கணவரும், தங்கராணி, ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியரூபன் (ரூபன் போன் சொப், திருநெல்வேலி), சத்தியராஜன், சத்தியரூபி, சத்தியேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சதீஸின் (பிரான்ஸ்) அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2013) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.11, தாளையடி லேன்,
திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(20137) (45.6)

## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம்
17.08.1942



மறைவு
27.01.2011

### அமரர் இராமு சுப்பிரமணியம் (சின்னத்தம்பி)

அகத்தில் தூய்மை கொண்டு இறைவனை வசமாக்கி,
அறத்தில் தூய்மை கொண்டு அனைவரையும் அரவணைத்து
முன்னேற்றப் பாதையில் முயற்சியுடன் வாழ்ந்து வந்தாய்
உன் புன்னகையின் செல்வந்தம் உனை செல்வந்தமாக்கியது
இலட்சியப் பாதையில் வெற்றி கொண்டு வாழ்ந்த உனை
மரணம் எனும் தடைக்கல் தள்ளியது பாறையினுள்
பேனாவின் உதவியுடன் எம் கவலைகளைப் பகிர்கின்றோம்.
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

596/5, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(29130) (6.11)

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(11)

'பிறர் மீது குற்றம் சாட்டினால் தன் குற்றத்தை மக்கள் பார்க்க மாட்டார்கள்' என்ற நினைப்புத்தான் மந்திரிகளை வீட்டுக் கனுப்புவதற்கு ஒரு காரணம். இதை ஆங்கிலத்தில் Scapegoats என்பார்கள். வாழ்விலோ, நாட்டிலோ, மாற்றங்கள் நிகழ வேண்டுமானால் தலைவனுக்கு துணிந்து இறங்கும் தைரியம் வேண்டும். எமது தலைவர்கள் பலர் யோசித்துக் கொண்டே இருக்கிறார்கள். யோசித்துக்கொண்டிருந்தால் யோசனைதான் மிஞ்சும். காரியமாற்றினால்தான் பயன் மிஞ்சும்.

எமது கொள்கைகளில் பிடிப்பும், எமது வாழ்க்கை நெறிகள் பற்றிய பெருமையும் எமக்கு இருக்கும்போது தான், துணிவு ஏற்படுகிறது. இவை இல்லாதவர்கள், காத்திருப்பார்கள்; அல்லது பிறர் முடிவு செய்யும்படி விஷயங்களை விட்டுவிடுவார்கள். அரசியல் முடிவுகளை ஆராயும் போது ஒரு தலைவர் தனக்குத்தானே முடிவு எடுக்கிறாரா அல்லது எதிர்க்கட்சித் தலைவரை எண்ணி அவரைக் கவிழ்க்க, அல்லது முந்திக்கொள்ள, அல்லது தர்மசங்கடத்தில் ஆழ்த்த முடிவெடுக்கிறாரா என்பதைப் பரிசீலியுங்கள். அப்போதுதான் ஒரு தலைவரின் வாழ்க்கை நெறியும் கொள்கைப் பிடிப்பும் விளங்கும்!

மாற்றங்களை வரவேற்பவர்கள் தன்னைப் பற்றிய தெளிந்த அறிவுடையவர்களாக இருக்கிறார்கள். இவர்களிடம் பயம் இல்லாமல் இல்லை; பயம் இருந்தும் காரியங்களைச் செய்வார்கள். தடை இருந்தும் தொடர்ந்து நடப்பார்கள். அவர்களிடம் பயன்களைப் பற்றிய கணிப்பு தெளிவாக இருக்கும். தங்களுக்கிருக்கும் உரிமைகளைப் பற்றிப் பெருமைப்படுவார்கள். அந்த உரிமைகளை உபயோகித்து சாதனைகளை நிகழ்த்துவார்கள். இவர்கள் தங்கள் உள் உணர்வை மதிப்பவர்கள். தங்கள் ஆழ்மனம் கணிப்பதை நம்பிச் செயற்படுகிறவர்கள். எமக்கு இருக்கும் உரிமைகளையே சரிவரப்பயன்படுத்தாத போது, மேலும் மாநில உரிமைகள் வேண்டும் என்று கூப்பாடு போடுவதில் என்ன பலன்?

மாற்றங்களை வாழ்வு நலம் வேண்டி, நாட்டு நலம் வேண்டி புகுத்தும் புதிய தலைவர்களே புதிய பொறுப்புக்களைச் சவால்களாக எடுத்துக்கொள்பவர்களே எமது நாட்டுக்குத் தேவைப் படுகிறார்கள். வாழ்கை என்பது கடைசியாகப்போய் அடைய வேண்டிய ஊரல்ல; செல்ல வேண்டிய திசை அது.

**புதிய எல்லைகளை வகுப்போம்**

அவனைப் பரசூட்டிலிருந்து குதிக்கச் சொன்னார்கள். அவனுக்கோ தயக்கம், பயம் குதிப்பது எப்படி என்று பலரையும் கேட்டான். அது பற்றி விவரமாகப் படித்துக்கொண்டிருந்தான். அங்கு வந்த ஆசிரியர் சொன்னார்: ''தம்பி! படிப்பதன்மூலம் விமானத்திலிருந்து குதிப்பதைப் பற்றி ஓரளவுதான் தெரிந்து கொள்ளமுடியும்''

'தரையில் இருந்துகொண்டு நீந்தக் கற்றுக்கொள்ள முடியாது' என்பதுதான் பொருள். தொழிலில் இறங்காமல் அதன் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்துகொள்ளாமல் தொழிலில் வெற்றியடைய முடியாது.

ஆபத்து என்று தெரிந்தும் விபத்துக்கள் இருக்கும் என்று பிறர் விளக்கியும், நஷ்டம் ஏற்படலாம் என்று அறிந்தும், ஒரு மனிதன் துணிந்து இறக்குகிறானே அந்தத் தைரியத்தைதான் ஆங்கிலத்தில் 'ரிஸ்க்' (Risk) எடுத்தல் என்று கூறுகிறார்கள். ''துணிந்தவனுக்கு துக்கமில்லை!'' என்பது பழமொழி.

துணிந்து இறங்கும்போது நாம் எமது எல்லைகளை மீறுகிறோம். எமது திறமைகளைச் சோதிக்கிறோம். புது எல்லைகளை வகுக்கிறோம். தெரியாத உலகில் காலடி எடுத்து வைக்கிறோம். இருக்கும் நிலையில் எமக்கு ஏற்படும் அதிருப்தியின் விளைவாக இன்றுள்ள நிலையினைவிட உயரவேண்டும் என்ற உந்துதலின் விளைவாக எழும் செயல் அது. நிறைவை நோக்கிய பயணத்தில் புதிய ஓர் இலக்கை நிர்ணயித்துக்கொண்டு முன்னேறுவதில், ஆபத்துக்களை எதிர்கொள்வதில் ஒரு 'திரில்' இருக்கிறது. வீர உள்ளம் படைத்தவர்கள் அந்த 'திரில்'லை அனுபவிக்கவே விரும்புவார்கள்.

துணிந்து இறங்குவது என்பது குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு கொஞ்சம்கொஞ்சமாக இறங்கி கரைக் கருகே குளித்துவிட்டு வருவதைப் போன்றது அல்ல. மரக்கிளையிலே இருந்து நடுக்குளத்தில் துணிந்து குதிப்பதைப் போன்றது. பொங்கும் அலைகளைச் சமாளித்து, கடலில் இறங்கிக் குளித்துவிட்டு வருவதைப் போன்றது.

திட்டமிடாமல் எதிர்காலத்துக்குள் புகுவது அசட்டுத்தனம். எந்தப் புதிய முயற்சியிலும் யோசித்தல், திட்டமிடல், வெற்றிக்கான வழிகளை ஆராய்தல், படிப்படியான முன்னேற்றத்தை நிர்ணயித்தல் முதலிய பல படிகள் உண்டு. ஆயினும் துணிந்து இறங்குவதில், இலாபமா, நஷ்டமா, பயன் விளையுமா விளையாதா என்பதைத் தெளிவாகக் கடைசிவரை காரண காரியங்காட்டி விளக்கிவிட முடியாது. அறுதியிட்டு கூறிவிடவும் முடியாது. நாம் எடுக்கும் விடயத்தின் முடிவு இப்படித் தான் இருக்கும் என்று முன் கூட்டியே நாம் நூறு சதவிகிதம் தெரிந்துகொள்ள முடிவதில்லை.

துணிந்து காரியத்தில் இறங்குபவர்கள், நஷ்டம் ஏற்படலாம் என்று தெரிந்தும் இறங்குகிறார்கள். ஆபத்து - ரிஸ்க் - உண்டு என்று அறிந்தும் செய்கிறார்கள். ஓய்வு நேரத்தை இழப்பது, குடும்பத்தைச் சில காலம் மறப்பது போன்ற சில தியாகங்களைச் செய்ய முன்வருகிறார்கள். தாங்கள் இன்று இருக்கிற நிலையையே பணயம் வைக்கிறார்கள். சுய கௌரவத்தையே அந்தப் போட்டியில் பணயம் வைக்கிறார்கள். கிடைக்கும் பயன் இதை எல்லாம் ஈடுகட்டும் என்ற நம்பிக்கைதான் காரணம்.

எனது நண்பர் ஓர் இளைஞர், இருபத்தி எட்டு வயது இருக்கும். பி.ஏ.படித்தவர். உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் ஏழு வருடங்களாக எழுதுவினைஞர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். முன்னேற்றத்துக்கு அதிகம் வாய்ப்பில்லாத இடம் அது. தெரிந்தும் இருந்தார்.

*எம்.எஸ்.உதயமூர்த்தி* (தொடரும்)

# தலைமைத்துவப் பண்புடைய பிரஜையாக மாற்றும் சக்தி கொண்டது உடற்பயிற்சி

## விளையாட்டு முற்றம் திறப்பு விழாவில் உரை

தென்மராட்சி,பெப்.4

இளவயதில் விளையாட்டுக்களில் ஈடுபடுத்துவதைத் தவிர்த்து விட்டு, கல்வி நிலையங்களுக்கு அனுப்புவதில் பெற்றோர் குறிக்கோளாகக் கொண்டுள்ளனர். இது தவறான செயல் என்பதை நாம் உணர்வதில்லை. சிறு வயதில் பெறும் உடற்பயிற்சிகள் சிறந்த விளையாட்டு வீரராக மட்டுமன்றி சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட நற்பிரஜையாகவும் மாற்றும் சக்தி உடையது.

சிறு வயதில் முன்பள்ளிகள் மற்றும் பாடசாலைகளில் விளையாட்டு முற்றம் உருவாக்கப்படுவதன் நோக்கம் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சிகளை பெறுவதற்காகவே. ஒவ்வொரு விளையாட்டு முற்றத்திலும் உள்ள உபகரணங்கள் சறுக்குதல், ஏறுதல் இறங்குதல், அசைதல், நுழைதல் போன்ற உடற்பயிற்சிகளை வழங்குகிறது. இவ்வாறு சாவகச்சேரி நகரசபை உபதலைவர் கு.சதாசிவமூர்த்தி தெரிவித்தார்.

சாவகச்சேரி சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்ட விளையாட்டு முற்றம் மற்றும் கலை அரங்கம் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சதாசிவமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்னைய காலத்தில் சிறு குழந்தைளை மண்ணில் விளையாட வேண்டுமென்ற வழக்கம் பெரியோர்களின் கருத்தாக இருந்தது. அத்துடன் விளையாட்டுக்களில் ஈடுபடும் சிறார்களின் உடல்மன வலிமைகளை, தன்னம்பிக்கையை, விடா முயற்சியை வளர்க்கும் என்ற எண்ணம் பெற்றோர் மத்தியில் பெருமளவில் இருந்தன. விளையாட்டுப்பயிற்சிகள் வெறும் உடல் உள வளர்ச்சியை மட்டுமல்ல பலருடன் பழகும் வாய்ப்பு, தலைமைத்துவம் போன்வற்றுடன் சிறந்த கல்வியாளனாகவும் மாற்ற உதவும்.

இன்றைய காலகட்டத்தில் முன்பள்ளிக்குச் செல்லும் காலம் தொடக்கம் உயர்தரக் கல்வி வரையான காலப்பகுதியில் விளையாட்டுப் பயிற்சிக்குச் செல்ல விடாமல் பாடசாலை, கல்வி நிலையங்கள் ஆகியவற்றுக்கு மட்டும் அனுப்புவதில் பெற்றோர் குறியாக உள்ளனர். இது மாணவர்களுக்கு மன அழுத்தத்தைக் கொடுப்பதுடன் எதிர்காலத்தில் பிறருடன் பழகும் தன்மை இல்லாமல் போவதுடன் தனித்து வாழும் நிலை ஏற்படுகிறது.

உடல் தேக ஆரோக்கியத்துடன் இருந்தால்தான் மனதை ஒரு நிலைப்படுத்தி கல்வியில் சிறப்பைக் காணமுடியும். பிள்ளைகளுக்கு விளையாட்டின் மூலம் உடற்பயிற்சி இல்லையெனின் அவர்கள் சுகதேகியாக வாழ்வது கஷ்டம்.

சிறு பிள்ளைகளுக்கு படிப்பு எவ்வளவு முக்கியமோ அந்த அளவுக்கு விளையாட்டிலும் ஈடுபடுத்துவது அவர்களின் எதிர்கால விருத்திக்கு வெற்றி தரும் செயலாக இருக்கும் - என்றார். (எ-9)



அகில இலங்கையில் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பாடசாலைகளில் சிறந்த பாடசாலையாக கைதடி நவீல்ட் பாடசாலை சமூக சேவைகள் அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான விருதை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்குவதையும், நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன் பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம். நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ-4)

# நவாலி களையோடை கண்ணகை அம்மன் நூற்றாண்டு பழைமை வாய்ந்த ஆலயம்

## திருப்பணிச்சபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம்,பெப்.4

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயம் நூற்றாண்டு பழைமை வாய்ந்ததுடன், பல வரலாற்றுப் பெருமைகளையும் தன்னகத்தே கொண்டது. இவ்வாறு களையோடை கண்ணகை அம்மன் ஆலய பிரதம குரு சிவாஜி கந்தையா நாகேந்திரம் தெரிவித்தார்.

நவாலி களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்துக்கான புனருத்தாரண திருப்பணிச்சபை அங்குரார்ப்பண கூட்டம் ஆலய குரு நா.குமணன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது ஆலய பிரதம குரு இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இன்னும் சில ஆண்டுகளில் வரலாற்று பெருமை கொண்ட இந்த ஆலயம் நூற்றாண்டு விழாவை கொண்டாடவுள்ளது. இதற்கு முன்னர் இந்த ஆலயத்தை மீள் புனரமைப்பு செய்ய ஏற்பாடாகியுள்ளது.

குறுங்காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேற அனைத்து அடியார்களினதும் உதவி தேவைப்படுகிறது- என்றார். மேலும் புனருத்தாரண திருப்பணிச்சபை தலைவர் நா.குமணன் உரையாற்றும் போது; 1919 ஆம் ஆண்டில் இந்த புனிதபூமியில் கண்ணகித் தாய் உருவாகினாள்.

இன்னும் சில ஆண்டுகளில் நூற்றாண்டு பெருமையை இந்த மண் பெறவுள்ளது.

எனவே வரலாற்று சிறப்புக் கொண்ட இந்த ஆலயத்தின் பணி சிறக்க அனைவரது பங்களிப்பும் அவசியம்-என்றார். (எ-41)

# தென்மராட்சி வலய அலுவலகத்துக்கு இடமாற்றம்

தென்மராட்சி,பெப்.4

துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் கணக்காளராக கடமையாற்றிய க.பார்த்தீபன் மாகாண பிரதம செயலாளரினால் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் தொடர்ந்தும் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் பதில் கணக்காளராகக் கடமையாற்றுமாறும் பணிக்கப்பட்டுள்ளார்.

தற்போது யாழ்.கல்வி வலயத்தின் கணக்காளராக கடமையாற்றும் கிரிதரன் தென்மராட்சி கல்வி வலயத்தின் பதில் கணக்காளராகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-9)

# வினாவிடைப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.4

ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தின் சமூக இசைவான கல்வித் திட்டத்தின் கீழ் வட மாகாண ரீதியில் பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட இடர் பாதுகாப்புக் கல்வி வினா விடைப் போட்டியில் மாகாண நிலை முடிவுகளின் விவரம் அறிவிக்கப் பட்டுள்ளது. விவரம் வருமாறு:-

அலகு-I

1ஆம் இடம்-எஸ்.கோகுலன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, 2ஆம் இடம்-எம்.லலிதாம்பிகை, வட.மத்தி மகளிர் கல்லூரி. எஸ்.ரதிப்பிரியா-முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி, 4ஆம் இடம்-சி.சுகன்யா, கிளி.நாகேந்திரா வித்தி., கே.தர்சிகா-முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி.

அலகு-II

1ஆம் இடம்-கே.ரஜீகா, கச்சாய் அ.த.க.பாடசாலை, 2ஆம் இடம்-எஸ்.சர்மிளன், மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., 3ஆம் இடம்-எஸ்.கஜானன், மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., 4ஆம் இடம்-கே.கவிப்பிரியா, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, ஈ.ரியோடின் குறூஸ்-மன்னார் புனித அன்னம்மா மகளிர் ம.வி.

அலகு-III

1ஆம் இடம்-எஸ்.தயாகரன், மட்டுவில் சந்திரமௌலீச வித்தி., 2ஆம் இடம்-பீ.அனுஷா,மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி, 3ஆம் இடம்-எஸ்.கிருஷாந்தி, பூநகரி முட்கொம்பன் அ.த.க.பாடசாலை, மு.விதுஷன்-கிளி.ஜெயபுரம் ம.வி., எஸ்.பிரணவன்-கிளிஇந்துக் கல்லூரி.

இந்த மாணவர்களுக்கான பரிசில்கள் பெப்ரவரி மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நிகழ்வில் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## அமைச்சர் பதவிக்கு ஆள்கள் தேவை

மஹிந்த அரசின் காலத்தில் வாழ்ந்தோம் என்று பின்னைய காலங்களில் நாம் நெஞ்சை நிமிர்த்திச் சொல்லுமளவுக்கு சாதனை மேல் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுக்கொண்டே வருகின்றன. ஒரு ஜனநாயக நாட்டில், எப்படி வெற்றிகரமாக சர்வாதிகார ஆட்சியை நடத்த முடியும்? என்று உலகுக்கே பாடம் சொல்லுமளவுக்கு இலங்கையின் ஆட்சி கொடிகட்டிப்பறக்கிறது. மாதம் மும்மாரி பொழிகிறதோ இல்லையோ மாதத்துக்கு மூன்று முறையென்ன முந்நூறு முறைகள் அத்தியாவசியப் பொருள்களின் விலையை உயர்த்த அரசு மறப்பதில்லை.நாட்டில் நாளொரு கொலையும் பொழுதொரு கொள்ளையுமாக 'நீதி' வளர்ச்சி கண்டுவரும் வேளை இது என்றும் கூறலாம். குப்பைக்கும் வரி விதிக்கப்பட்டு,அதிகாரக் குடும்பத்தின் பணப்பெட்டி நிரம்பி வழிகிறது.மக்கள் கால் வயிறும் , கஞ்சியுமாக 'ஆனந்தப் பெருவாழ்வு' அனுபவிக்கும் பேறு வாய்த்திருக்கிறது.

இத்தகைய நிலையில் இன்னொரு சாதனையை நிகழ்த்தி உலகின் கண்களை வியப்பில் விரிய வைத்திருக்கிறது இலங்கை. 'உலக அரசியல் வரலாற்றிலேயே முதன் முறையாக' சீனிக்கு தனியான ஒரு அமைச்சரை நியமித்து, பட்டினியால் வாடிக்கிடக்கும் மக்களுக்கு 'இனிப்பான'[?] செய்தியை மஹிந்த அரசு வழங்கியிருக்கிறது. உலகப்பொருளாதாரத்தைப் பொறுத்தவரை சீனி உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு பிரேசில்தான். உலகின் 70 வீதமான நாடுகள் பிரேசிலின் சீனியை நம்பியே இருக்கின்றன. தனது அந்நியச்செலாவணியின் பெரும் பகுதியை பிரேசில் சீனி ஏற்றுமதி மூலமே ஈட்டிக்கொள்கிறது. அப்படி சீனி உற்பத்தியில் கொடி கட்டிப்பறக்கும் பிரேசிலில் கூட சீனிக்கென தனியான அமைச்சர் எவரும் இல்லை. ஆனாலும் அங்கு இல்லாவிட்டால் என்ன, இங்கு அதற்கென ஒருவரை நியமிப்போமென இலங்கை அரசு சீனி தொழில்துறை அபிவிருத்திக்கென தனியான அமைச்சரை நியமித்து , தன்னுடைய மதிப்பை உலக அரங்கில் உயர்த்தியிருக்கிறது!! சீனி அமைச்சர் நியமனம் பற்றி சொல்கையில் ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

ஒருவனை சிங்கம் ஒன்று காட்டுக்குள் துரத்திக் கொண்டு வந்தது. அவன் உயிரைக் கையில் பிடித்துகொண்டு ஓடினான். ஓடும் வழியில் ஒரு பாழுங்கிணற்றில் விழுந்துவிட்டான். நல்லவேளையாக கிணற்றின் சுவர்க்கட்டோரமாக வளர்ந்திருந்த செடி ஒன்றைப் பற்றிப்பிடித்ததனால், கிணற்றினுள் விழவில்லை. கீழே தண்ணீர் வற்றிவிட்ட பாழுங்கிணற்றில் நாலைந்து நாகபாம்புகள் படமெடுத்துக் கொண்டிருந்தன. அப்போது அவன் பற்றிப்பிடித்திருந்த செடியும் மெல்ல மெல்ல சுவரிலிருந்து அறுபடத்தொடங்கியது. அவன் மேலே ஏறினால் சிங்கத்துக்கு இரையாக வேண்டும்.செடி அறுந்துவிழுந்தால் பாம்பு தீண்டிவிடும். இரண்டில் ஏதாவது ஒரு அழிவு நிச்சயம். அந்த வேளை பார்த்து மேலே உள்ள மரக்கிளையில் இருந்து சில தேன் துளிகள் விழத்தொடங்கின. அவன் சிங்கத்தையும், பாம்புகளையும், அறுந்து கொண்டிருக்கும் செடியையும் மறந்துவிட்டு அவன் தேன் துளிகளை ருசிக்கத் தொடங்கிவிட்டான்.

கிட்டத்தட்ட மஹிந்த அரசும் இந்தக்கதையில் வருபவனின் நிலையிலேயே இருக்கிறது. வரலாற்றில் என்றுமேயில்லாத அளவுக்கு பெரும் பொருளாதார நெருக்கடி ஒருபுறமும், ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை மறுபுறமுமாக அரசின் கழுத்தை நெருக்கத் தொடங்கியுள்ளன. இந்த அதகளத்துக்குள் அமைச்சரவை மாற்றத்தைக் கொண்டு வந்து, சீனி அபிவிருத்திக்கு ஒரு அமைச்சரை நியமித்து, எங்களுக்கு எந்த நெருக்கடியும் இல்லை. நாங்கள் எப்போதும் போல கும்மாளமிட்டபடியே இருக்கிறோம் என்று காட்ட மஹிந்தவாதிகள் முயல்கின்றனர்.

சினிமாப்படங்களில் மிகச் சோகமான ஒரு காட்சி வரும் முன்னரும் , வந்த பின்னரும் ஒரு நகைச்சுவைக்காட்சி இடம்பெறுவதுண்டு. மனதளவில் இறுக்கமடைந்துள்ள பார்வையாளர்களை மீண்டும் சகஜநிலைக்கு கொண்டுவர இந்த உத்தி பயன்படுவதுண்டு. அதைப்போன்று பொருளாதாரச்சுமை, நிர்வாகச் சீர்கேடு, அடக்குமுறை என்பவற்றால் துவண்டு கிடக்கும் மக்களை கொஞ்சமேனும் சிரிக்க வைக்கத்தான் சீனி அமைச்சர் என்ற 'பபூன்' பாத்திரத்தை அரசு களமிறக்கியுள்ளதோ என்னவோ தெரியவில்லை.

ஏன், எதற்கு என்ற கேள்விகள் எதுவுமின்றி இதே போக்கில் சகட்டுமேனிக்கு இனிவரும் காலங்களில் மரக்கறி அமைச்சர்,அரிசி அமைச்சர்,கருவாட்டு அமைச்சர்,இனிப்பு அமைச்சர், பனடோல் அமைச்சர், புண்ணாக்கு அமைச்சர் என்று எல்லாவற்றுக்கும் அமைச்சர்கள் நியமிக்கப்படக்கூடும். தென்னிலங்கை வீதிகளில் மக்கள் எதிர்கொள்கின்ற அநேகர் அமைச்சர்களாக இருக்கும் நிலையும் தோன்றும். அவ்வளவு ஏன்?வீட்டுக்கு வீடு வாசல்படி இருக்கிறதோ இல்லையோ ஓர் அமைச்சராவது இருக்கும் நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அதையும் தாண்டி அமைச்சர் பதவிக்கு ஆள்கள் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் கூட வெளியாகலாம். எல்லாவற்றையும் ஆச்சரியப்படாமல் எதிர்கொண்டு, மஹிந்த ஆட்சியின் மாண்பினை நினைந்து வியக்கத் தயாராவோம்!

# அமைச்சரவை மாற்றத்தால் மட்டும் இலக்கை எட்டிவிட இயலாதே...!

லங்காதீப - (சீ.ஜே.அமரதுங்க)
தமிழில்- வீ.எஸ்.ரீ.

கடந்த பல மாதங்களாக எதிர்பார்க்கப்பட்டு வந்த அமைச்சரவை மாற்றம் கடந்த வாரம் நடந்தேறியுள்ளது. அமைச்சர்கள் மட்டத்தில் இடம் பெறத்தக்க இலாகா மாற்றங்கள் தொடர்பாக பலவித எதிர்வு கூறல்களும் முன்னர் வெளியிடப்பட்டு வந்துள்ளன. ஆனால் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தில் பதவிப் பொறுப்புக்களில் குறிப்பிடத்தக்க மாற்றமெதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### உலகிலேயே பெரிய அமைச்சரவை என்ற சாதனை

புதிதாக உருவாக்கப்பட்ட ஏழு அமைச்சுக்களுடன், தற்போது அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை 65 ஆக உயர்ந்துள்ளது. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரும் அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பதால் அந்த தொகை 67 ஆக அதிகரிக்கிறது. பிரதி அமைச்சர்கள் 28 பேர் மற்றும் திட்ட அமைச்சர்கள் இருவர் என அமைச்சர்களது முழு எண்ணிக்கை 97 என்பதுடன், கண்காணிப்பு அமைச்சர்கள் மூன்று பேருடன் இந்தத் தொகை நூறு என்றாகிறது.

பாதுகாப்பு, நிதி, துறைமுக அபிவிருத்தி, விமானசேவை மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு ஆகிய முக்கிய அமைச்சுக்கள் ஜனாதிபதியின் வசமுள்ளன. இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசின் செலவினங்களுக்கென ஒதுக்கப்பட்ட முழுத்தொகையில் மூன்றிலொரு பங்கு தொகை, ஜனாதிபதியின் பொறுப்பின் கீழ் வரும் அமைச்சுக்களுக்கே ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. செலுத்தப்பட வேண்டிய கடனுக்கான தவணைக் கட்டணங்களைத் தவிர்த்து , அமைச்சுக்களுக்கான செலவினத்துக்கு ஒதுக்கப்பட்ட முழுத் தொகையில் இது 52 சதவீதமாகும். அதேவேளை சுதந்திர இலங்கையில் ஆட்சி அதிகாரம் வகித்த அரசுகளில், இன்றைய அரசே மிகப்பெரும் எண்ணிக்கையிலான அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவையைக் கொண்டுள்ளதாக ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

வழக்கமாக வினைத்திறனை உயர வைக்கும் நோக்கிலோ அல்லது அரசின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படும் பொழுதோ இல்லையேல் சில திணைக்களங்களில் சவால்கள் உருவாகும் பொழுதோதான் அமைச்சரவை மாற்றியமைக்கப்படுதல் வழக்கம். அவற்றுக்குப் புறம்பாக , சில அமைச்சுக்களில் ஏற்படும் பிரச்சினைகளைக் கையாள சம்பந்தப்பட்ட அமைச்சரால் இயலாது போகும் வேளையிலும், அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்படுவதுண்டு. அமைச்சரவையில் மேற்கொள்ளும் மாற்றத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் வினைத்திறனை வெற்றிகரமாக ஈட்டிக்கொள்ள இயலுமா என்பது குறித்தும் கவனத்தில் கொண்டே அத்தகைய மாற்றத்தை மேற்கொள்வது பயன் தர வல்லதாகும்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் மூலம் அமைச்சர்கள் பலரின் பொறுப்புக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலமாக விமர்சனங்களுக்கு உள்ளாகி வந்த மின்சக்தி அமைச்சின் பொறுப்புக்கள் சம்பிக்க ரணவக்கவிடமிருந்து பறிக்கப்பட்டு பவித்ரா வன்னியாராய்ச்சியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது சிலவேளை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் நடவடிக்கைகளால் ஜனாதிபதி அதிருப்தியுற்றதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட முடிவாகவும் இருக்கக்கூடும். மின்சக்தி அமைச்சின் கீழ்வரும் மீளுருவாக்க மின் சக்திப் பிரிவு அவ் அமைச்சின் கீழிருந்து அகற்றப்பட்டு சுற்றுச்சூழல் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டமை, மின்துறை அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட மாற்றத்துக்கு வேறு ஏதோவொரு பலமான காரணம் இருக்கக்கூடுமென எண்ண வைக்கிறது.

பெற்றோலிய வளத்துறை அமைச்சில் நிலவிய தரமற்ற எரிபொருள் விநியோகம் தொடர்பான பிரச்சினை காரணமாக அந்த அமைச்சுக்குப் பொறுப்பாகவிருந்த அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடமிருந்து பொறுப்புக்கள் மீளப்பெறப்பட்டு அவை அமைச்சர் அனுர பிரிய தர்சன யாபா வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவ் அமைச்சில் நிலவி வந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண இயலுமென ஜனாதிபதி நம்பியிருக்கக்கூடும். ஆயினும் அரச நிறுவனங்களில் நிலவும் சிக்கல்களை அவற்றுக்குப் பொறுப்பான அமைச்சர்களை மாற்றிக் கொள்வதன் மூலம் தீர்த்து விட முடியுமா ? என்பது சந்தேகத்துக்குரியதொன்றே.

சுற்றாடல்துறை மற்றும் மின்சக்தி மீளுருவாக்க அமைச்சு, மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சு ஆகியவை முறையே அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த மற்றும் சம்பிக ரணவக்க ஆகியோருக்குக் கையளிக்கப்பட்டுள்ளமை, புதிய அமைச்சுக்களின் செயற்பாடுகளில் அவ்விருவரும் தத்தமது திறமையை வெளிப்படுத்துவதை எதிர்பார்த்தேயாகும்.

### அமைச்சரவை மாற்றம் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது

எது எவ்வாறான போதிலும் , அண்மைய அமைச்சரவை மாற்றம், அரச நிறுவனங்கள் பலவற்றில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கிலானதா? அல்லது வேறு அரசியல் பின்னணி கொண்டதா என்ற கேள்வி பல தரப்புக்களாலும் எழுப்பப்பட்டு வருகின்றது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயகாவுக்கு எதிரான அரசின் நடவடிக்கைகளுக்கு முன்நின்று ஆதரவளித்தோரைக் கௌரவித்து உற்சாகப்படுத்தும் நோக்கத்திலேயே இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதென்பது மற்றொரு தரப்பினரின் வாதமாகும்.

புதிதாக நிறுவப்பட்ட அமைச்சுக்கள் குறித்து பல தரப்பினர் விமர்சனங்களை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, சீனிக் கைத்தொழில் அமைச்சு கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து தனக்குத் தேவைப்படும் சீனியை இறக்குமதி செய்து வரும் இலங்கைக்கு , சீனிக் கைத்தொழிலுக்கு மட்டுமென ஒரு அமைச்சு உருவாக்குவது பொருத்தமானதுதானா என்ற கேள்வியும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இத்தனைக்கும் இலங்கையில் பெரிய அளவில் சீனி உற்பத்தி மேற்கொள்ளப்படுவதில்லை என்ற உண்மையைம்சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

நட்டத்தில் இயங்கி வந்த சீனி உற்பத்தித் தொழிற்சாலையை அரசு கையகப்படுத்திக் கொண்ட போதிலும், இதுவரை சீனி உற்பத்தி முயற்சியில் சாதகமான பயனை ஈட்ட முடியவில்லை. தற்போது அந்த துறைக்கென தனியான அமைச்சொன்றை உருவாக்கியுள்ளமையால் நிர்வாக தரப்புக்களை உருவாக்க அரசு பெருந்தொகைப் பணத்தை செலவிட்டாக வேண்டும். இத்தகைய பயனற்ற முயற்சிகளால் நாட்டின் பொதுமக்கள் மீது மேன்மேலும் வாழ்க்கைச் சுமையைச் சுமத்துவதாகவே அமையும்.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு, தாவரவியல் மற்றும் பொது விநோதங்கள் அமைச்சு மற்றும் கல்விச் சேவைகள் அமைச்சு போன்ற அமைச்சுக்கள் தொடர்பிலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்த துறைகளுக்கென தனித்தனியான அமைச்சுக்கள் அவசியமானவைதானா? அல்லது இவற்றை வேறொரு அமைச்சின் அலகொன்றாக இணைத்துக் கொள்ள இயலாதா? என்ற கேள்விகளும் எழாமலில்லை. இந்த துறைகள் முன்னர் இணைக்கப்பட்டிருந்த அமைச்சுக்களிலிருந்து பிரித்து எடுக்குமளவுக்கு இந்த துறைகளின் செயற்பாடுகளில் சிக்கல்கள் எதுவும் நிலவியதில்லை. அந்த வகையில் புதிதாகச் சில அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவி வழங்க வேண்டிய தேவை அரசுக்கு ஏற்பட்டிருந்தமையே, அண்மைய அமைச்சரவை மாற்ற நடவடிக்கைக்கான முக்கிய காரணம் என்பது தெளிவாகப் புலப்படுமொரு உண்மையாகும்.

இன்றைய நிலைமையில் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்வதென்பது, உரிய எதிர்பார்ப்பை நிறைவேற்றும் விதத்தில் பயனளிக்குமானால் அது பெறுமதி மிக்கதே. அதற்காக ஒரு அமைச்சின் கீழ் இயங்கும் அலகுகளைப் பிரித்து வெவ்வேறு அமைச்சுக்கள் ஆக்குவதாலோ, புதிதாக அமைச்சர் பதவிகளை ஏற்படுத்துவதாலோ அத்தகைய எதிர்பார்ப்பை வெற்றிகரமானதொன்றாக ஆக்கிக் கொள்ள இயலாது. தேவைப்படும் ஆளணிக்கு மேலதிகமாக ஊழியர்களை நியமித்து அவர்களுக்கு நாட்டு மக்களது பணத்தில் சம்பளம் வழங்குவதால் , வினைத்திறன் மிக்க திருப்திகரமான சேவையை எட்டிவிட இயலாது. அதற்காக, நோக்கத்தில் மாற்றங்களை மேற்கொள்வதே அவசியமானதொன்றாகும். ஒரு அரச நிறுவனத்தின் சேவையைப் பூரணப்படுத்த வேண்டுமானால், ஆளணியை மென்மேலும் அதிகரித்துக் கொள்வதை விடுத்து, சேவையிலுள்ள ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்க வைக்க வழிவகை மேற்கொள்ளுதல் அவசியம். அதேவேளை நாட்டில் மேலதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்வதன் மூலம் அரசு வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்குத் தீர்வு காண இயலும்.

### புதிய முதலீடுகள் ஊக்குவிக்கப்படுதல் அவசியம்

புதிய முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் புதிய தொழில் முயற்சிகளை ஏற்படுத்த அரசு முயற்சிக்க வேண்டியது இன்றைய காலத்தின் தேவையொன்றாகும்.

முதலீட்டு முயற்சிளுக்கான கட்டுப்பாடுகள் காரணமாக ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தமது தொழிற்சாலைகளை மூடி வருவது

(21 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பொருளாதாரம் அபிவிருத்தியை நோக்கிச் செல்கிறதா...?

இந்த ஆய்வு இலங்கையில் மொத்தம் உள்ள 25 மாவட்டங்களில் 19 மாவட்டங்களில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டது. வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களும் கிழக்கின் திருகோணமலை மாவட்டமும் இந்த ஆய்வில் உள்ளடக்கப் படவில்லை.



ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை அல்லது வருமானத்தைக் குறித்த காலப்பகுதியில் நாட்டில் வாழும் மொத்த சனத்தொகையால் பிரிக்கும் போது வரும் தொகையே தனிநபர் வருமானமாகும். தனிநபர் வருமானம் என்பது பொதுவாக நடைமுறை மற்றும் ஆய்வு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. எதுஎவ்வாறிருப்பினும், ஒரு நாட்டின் தனிநபர் வருமானம் என்பது அந்த நாட்டின் அபிவிருத்தி மட்டத்தைச் சுட்டிக்காட்டாது என்பதை விளங்கிக் கொள்வது மிக முக்கியமானதாகும்.

எடுத்துக்காட்டாக, 2010இல் கியூபாவின் தனிநபர் வருமானம் 5520 டொலராகவும், இந்தியாவின் தனிநபர் வருமானம் 1270 டொலராகவும், கிழக்குத் தீமோரின் தனிநபர் வருமானம் 2220 டொலராகவும் இலங்கையின் தனிநபர் வருமானம் 2240 டொலராகவும் காணப்பட்டதாக உலக வங்கியின் உலக அபிவிருத்திச் சுட்டியில் 2012இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில்இலங்கையை அல்லது இந்தியாவை விட கியூபா பொருளாதார ரீதியில் அபிவிருத்தியடைந்துள்ள நாடு என்பதை இங்கு குறிப்பிடப்பட்ட தனிநபர்வருமானத்தைவைத்து கருதிவிட முடியாது. இதேபோன்று இலங்கையின் பொருளாதாரம் இந்தியாவை விடவும் சிறந்தது என்றோ அல்லது கிழக்குத் தீமோர் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் பொருளாதார அபிவிருத்தியை எட்டியுள்ளன என்றோ கருதிவிட முடியாது.

உலக வங்கியின் உலக அபிவிருத்திச் சுட்டிகள் 2012இல் பின்வரும் முறைகள் பயன்படுத்தப்பட்டு ஒவ்வொரு நாடுகளின் அபிவிருத்தி மட்டங்கள் வரையறுக்கப்பட்டன.

குறைந்த தனிநபர் வருமானப் பொருளாதாரம் - 1005 டொலர்கள் அல்லது அதற்கு குறைந்தவை.

குறைந்த மத்திய வருமானப் பொருளாதாரம் - 1006 - 3975 டொலர்கள்.

உயர் மத்திய வருமானப் பொருளாதாரம் -3976 - 12,275 டொலர்கள்.

உயர் வருமானப் பொருளாதாரம் - 12,2%76 அல்லது அதற்கு மேற்பட்ட தனிநபர் வருமானம்.

மேற்கூறப்பட்ட சுட்டியின் படி, இலங்கையின் 2010 மற்றும் 2011 தனிநபர் வருமான மதிப்பீடானது ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அதாவது 2010 மற்றும் 2011இல் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியானது முறையே 8 சதவீதமாகவும் 8.3 சதவீதமாகவும் காணப்படுகின்றது.

இந்த நிலையில் உலக வங்கியின் சுட்டியில் குறிப்பிடப்பட்ட தனிநபர் வருமானமானது தவறானதாகும். இச்சுட்டியானது நடப்புச் சந்தை விலைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாகும். உதாரணமாக, 2010இல் இலங்கையின் மொத்த தேசிய வருமானமானது 5,534,327 மில்லியன் ரூபாக்களாகும். இது தற்போதைய சந்தை விலையைக் கருத்திற் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. இதனை 2010இல் காணப்பட்ட மொத்த மக்கள் தொகையான 20.1 மில்லியனால் வகுக்கும் போது 2435 டொலர்கள் தனிநபர் வருமானமானகும்.

ஆனால் 2002இல் நடைமுறையிலிருந்த விலைச் சுட்டியைக் கருத்திற் கொண்டு 2010க்கான தனிநபர் வருமானத்தைக் கணக்கிடும் போது இலங்கையின் தனிநபர் வருமானமானது 1149 டொலர்களாக காணப்படுகிறது. ஆகவே இவ்விரு சுட்டிகளுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகிறது.

இதற்கப்பால், 2009 யூலை தொடக்கம் யூன் 2010வரை இலங்கையின் சனத்தொகை மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வீட்டு வருமானம் மற்றும் செலவீன ஆய்வின் பிரகாரம், ஆண்டுக்கான சராசரி தனிநபர் வருமானமானது 966 டொலராகும்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வீட்டு வருமானம் மற்றும் செலவீன ஆய்வானது நாட்டின் பெரும்பாலான இடங்களில் மேற்கொள்ளப்பட்டாலும் கூட இலங்கை முழுவதிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. அதாவது இந்த ஆய்வானது இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களில் 19 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களும் கிழக்கின் திருகோணமலை மாவட்டமும் இந்த ஆய்வில் உள்ளடக்கப்படவில்லை.

தேசிய வருமானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வீட்டு வருமானம் மற்றும் செலவீன ஆய்வில் நன்மைகளும் தீமைகளும் உள்ளன. அதாவது முழு நாட்டையும் உள்ளடக்கி இந்த ஆய்வு மேற்கொள்ளப்படாதமை முதலாவது தீமையாகும். ஆனால் இந்த ஆய்வில் முறைசாரா மற்றும் முறைசார் பொருளாதாரம் உள்ளடக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டமை இதற்குக் கிடைத்த நல்வாய்ப்பாகும்.

இந்த நிலையில் இலங்கையின் சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட வீட்டு வருமானம் மற்றும் செலவீன ஆய்வானது தேசிய வருமான மதிப்பீட்டை விடச் சிறந்ததாகும். இருப்பினும், இலங்கை அரசியல்வாதிகள் தமது நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாடு தொடர்பில் போலியான வாக்குறுதிகளையும் உறுதிப்பாடுகளையும் வழங்கி அவர்களை ஏமாற்றுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். ★

*(நன்றி: புதினப்பலகை)*




# வலி.கிழக்குப் பிரதேச சபை உள்ளூர் வீதிகளைப் புனரமைக்குமா..?

■ எஸ். புண்ணியமூர்த்தி,
அச்சுவேலி.

வலி.கிழக்குப் பகுதியில் உள்ள உள்ளூர் வீதிகள் பலவும் மோசமான முறையில் சேதமடைந்து காணப்படுவதால் அந்த வீதிகள் ஊடாக பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் வலி. கிழக்குப் பிரதேசம் பின் தங்கிய நிலையில் காணப்படு கிறது எனலாம். எந்தவித அபிவிருத்தி வேலைகளும் முன்னெடுக்கப் படவில்லை. இதனால் அப் பகுதியில் வசிக்கும் மக்கள் வாழ்வாதாரத் தில் பெரும் இடர்களை சந்தித்து வரு கின்றனர்.

விவசாய பூமியாகக் காணப்படும் வலி. கிழக்குப் பிரதேசம், விவசாயத் தொழிலை மேற்கொள்ள முடியாமல் தவிக்கிறது. விவசாயத் தொழிலை மேற்கொள்பவர்கள் உற்பத்திப் பொருள்களை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண் டுள்ளனர். இந்தப் பிரதேச மக்கள் பிரதேச சபைக்கு பல முறை உள்ளூர் வீதிகளை திருத்தித் தருமாறு கடிதங்கள் கொடுத்தும் எந்தவித பயனும் இதுவரை கிடைக்க வில்லை.

இந்தப் பிரதேச சபையின் அலட்சியப் போக்கும் அவர்களின் உள் வீட்டுப் பிரச்சினைகளும் வலி கிழக்குப் பிரதேசம் மேலும் பின் தங்கிய நிலைக்கு செல்ல காரணமாக அமைகின்றதோ எனக் கொள்ள இடமுண்டு.

டெங்கு ஒழிப்பும், கட்டாக் காலி கால்நடைகளைப் பிடித்தலும் தான் இந்தப் பிரதேச சபையின் வேலையாக உள்ளது. பிரதேச அபிவிருத்தி வேலைகளில் துளியளவைக் கூட மேற்கொள்ளாமல் தங்களது வேலை நாள்களை வீணாகக் கழிக்கின்றனர்.

மேல் அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து அந்தப் பிரதேச அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துச் செல்ல ஆவன செய்வார்களா?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சொல்லி இருக்கிறார் அபிவிருத்திக்கு நிதி இருக்கிறது. அதனை எடுத்து பயன் படுத்த வேண்டிய திறமை உங்களின் கைகளில் உள்ளது என்று.

“ விவசாய பூமியாகக் காணப்படும் வலி. கிழக்குப் பிரதேசம், விவசாயத் தொழிலை மேற்கொள்ள முடியாமல் தவிக்கிறது. விவசாயத் தொழிலை மேற்கொள்பவர்கள் உற்பத்திப் பொருள்களை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண் டுள்ளனர்.

# பாடல்கள் பலவிதம்

அவிநாசிப்புலவர் என்று ஒருவர் இருந்தார். திருநெல்வேலி மாவட்டத்திலே உள்ள வாசுதேவ நல்லூர்தான் இவர் பிறந்த இடம்!

ஆனாலும் இவர் கூடுதலாக இருந்தது கோயம்புத்தூர் மாவட்டத்திலே வசிப்பது அவிநாசி எனும் ஊரிலேதான். அதனாலேதான் அவிநாசிப் புலவர் என இவருக்குப் பெயர் வந்தது.

'அவிநாசி கருணைபுரி மாலை' இவர் எழுதிய நூல்.

இவருக்கு இசை பாடுவதை விட, வசை பாடுவதிலேயே விருப்பம் அதிகம்.

இவர் பாட்டைப் படித்துப் பார்த்தால் அப்படித்தான் நினைக்கத் தோன்றும்.

அப்பொழுது ஒரு பணக்காரர் இருந்திருக்கிறார்.

அவரிடம் சென்று இந்தப் புலவர் பாடியுள்ளார்.

அவர் கொஞ்சம் வித்தியாசமான ஆள் போல இருந்திருக்கும்!

' போயிட்டுவா' என்றுவிட்டார்.!

ஒன்றுமே கொடுத்தனுப்பவில்லை.

இசைப் பாடலைக் கேட்டும் பரிசு ஒன்றும் கொடுக்கவில்லையே என்பதால் இவருக்கு கடுங்கோபம். உடனே இருக்கவே இருக்கு வசைப்பாடல் அதைப் பாடத் தொடங்கினார். வசைப் பாடல் எனக் கூறுவதை விட , அதை வதைப் பாடல் என்றே சொல்லலாம்.

அந்தளவுக்கு கற்பனை

பரிசு கொடுக்காத அந்த ஆளை- அவர் உயிர் இருக்கிற வரைக்கும் நட்டுவாக்காலியும், தேளும் கொட்ட வேண்டுமாம்.

அதுவும் சும்மா கொட்டக்கூடாதாம்.

கோபத்தோட கொட்டணுமாம்.

திரு திரு என முழிக்கிற அந்த முழியிலே

ஒரு குளவி வந்து கொட்டணுமாம்.

அதிலே இருந்து இரத்தம் ஆறாக கொட்டணுமாம்.

இப்படியே கற்பனை போகின்றது.

எந்த அளவுக்கு பயங்கரமான கற்பனை

பரிசு கொடுத்தால் ஒரு பேச்சு!

கொடுக்கவில்லையென்றால் ஒரு பேச்சு.

இந்த நிலமை அப்பொழுதே இருந்திருக்கும் போல.

இருந்தாலும் புலவர் இந்தப் பாட்டைப் பாடிய கொஞ்ச நாளிலேயே அந்த பணக்காரர் போய் சேர்ந்துவிட்டார் என்கிறார்கள். அது எந்தளவுக்கு உண்மையென எமக்குத் தெரியாது. இருந்தாலும் ஒரு விடயம் மட்டும் எமக்குப் புரிகிறது. அதாவது-

இந்த மாதிரி புலவர்களுக்குப் பயந்து தான் அந்தக் காலத்திலே கூடுதலானோர் பெரிய வள்ளலாக இருந்திருப்பார்கள் போல தோன்றுகிறது.

'' எமக்கு என்னத்துக்கு வீண் வம்பு! பாட்டுப் பாடினால் ஏதாவது இருப்பதை கொடுத்தனுப்பிடுவோமே!'' என நினைப்பீர்கள்.

ஒருவருக்கு கொடுக்கவில்லையென்றால் இவர் மாதிரி கோபப் படுபவர்களும் உண்டு. சில பேர் கோபப்படுவதற்குப் பதிலாக தன்னையே நொந்துகொள்வதும் உண்டு. பொன்னம்பலக் கவிராயர் இந்த ரகம்.

இவர் ஊர் ராமநாதபுரம்.

இவர் யாரிடம் என்ன பாட்டுப் பாடினாரோ ... என்ன நடந்துதோ தெரியவில்லை... இருந்தாலும் அதையெல்லாம் நினைத்து நொந்து போய் ஒரு பாட்டு பாடியிருக்கின்றார்.

ஏட்டைக் கட்டினேன்..


எழுத்துடன் எழுத்தை வைத்துக் கட்டினேன்..

அதனோடு இசையைக் கட்டினேன்..

கொடுக்கத் தெரியாத பலபேர் மேலே பாட்டைக் காட்டினேன்.

கடைசியிலே தொண்டை கட்டினதுதான் மிச்சம் எனக் கூறுகிறார். அதுமட்டுமல்ல இந்தப் பாவம் என்றைக்குத் தான் தீருமோ என இவரின் கவலை. அதுதான் தெய்வத்தை வேண்டியிருக்கிறார்...


**'' ஏட்டைக் கட்டி எழுத்தோடு எழுத்தை வைத்து**
**இணைத்துக்கட்டி இசைகட்டி உலோபர்மேல்**
**பாட்டைக்கட்டி என் தொண்டையும் கட்டிய**
**பாவம்தான் இனி என்றைக்குத் தீருமோ**
**தோட்டைக் கட்டும் குழலே நினது அடித்**
**துணையைக் கட்டிய போர்க்கு பரகதி**
**வீட்டைகட்டிய தாயே சவுந்தர**
**மீனவன்பங்கின்மீனாட்சியம்மையே!''**



அந்தக் காலத்திலே பாட்டு எழுதுகிறவர்கள் எப்படியெல்லாம் கஷ்ரப்பட்ருக்கிறார்கள் பார்த்தீர்களா? இந்தக் காலத்திலே அப்படியில்லை...

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# கைப்பணிப் பயிற்சிகளை நடத்தும் முருகன் சனசமூக நிலையம்



**லக்ஸ்மன்**

(கடந்தவாரத் தொடர்ச்சி......)

வாசிப்புப் பழக்கத்திற்கு மேலதிகமாக நூலக சேவையையும் நல்லூர் முருகன் சனசமூக நிலையம் மேற்கொண்டுள்ளது. மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கக் கிளையின் மூலம் வாழை நாரினால் உருவாக்கக்கூடிய கைப்பணி பயிற்சி நெறிகள் கிராம அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இலவச சமையல் அறைப் பயிற்சிகள் மாணவர்களுக்கான இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புக்களையும் நடத்தி வருகின்றது.

நல்லூர் உற்சவ காலங்களில் மக்களுக்குக் குடிதண்ணீர் வசதிகள் பந்தல்களை முருகனைத் தரிசிக்கவரும் அடியார்கள் தங்கி இளைப்பாறிச் செல்லக்கூடியதாக அமைத்து உதவுகின்றது. தவிர ஆடிவிழா, வாணி விழா போன்ற முக்கியத்துவம் மிக்க விழாக்களையும் தவறாது நடத்தி வருகின்றது.

நல்லூர் உற்சவகாலத்தில் சமய அறிவுப் போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங்கப்படுகின்றன. கடந்த காலத்தில் இந்தப் போட்டிக்களுக்கான வினாக்களைத் தயாரித்து உதவியவர் மறைந்த அதிபர் பண்டிதர் சொக்கன் ஆவார்.

1989 - 2005 ஆம்ஆண்டு வரை தொடர்ச்சியாகப் பிரதி சனிக்கிழமைகள் தோறும் கீதா வகுப்புக்களை நிலையத்தின் முன்னாள் பொருளாளரான க.மயில்வாகனம் நடத்தி வந்தார். அது தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**நல்லூர் உற்சவகாலத்தில் சமய அறிவுப் போட்டிகளை நடத்தி பரிசில்கள் வழங் கப்படுகின்றன. கடந்த காலத்தில் இந்தப் போட்டிக் களுக்கான வினாக் களைத் தயாரித்து உதவியவர் மறைந்த எழுத்தாளர், பண்டிதர் சொக்கன் ஆவார்.**

பல ஆண்டுகளாக தொடர்ச்சியாக நிலையத் தின் தலைவராக உள்ள வரும் தற்போது தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதன் மூலம் நிலைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருபவருமான க.குமாரசுவாமியின் சேவையைக் கௌரவித்து அவர் களுக்கு அபயகரம் பட்டம் வழங்கியமை அந்தப் பகுதி மக்களுக்கு உற்சாகமாக இருந்தது எனவும் குறிப்பிடப்படுகின்றது. நிலையத்தில் யோகர் சுவாமி, சுவாமி விவேகானந்தர் அன்னை சாரதா தேவி ஆகிய பெரியார்களை சிறார்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு அந்தப் பெரியார்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. ஓவியக்கலைக்கு நிறைவான காத்திரமான பங்களிப்பை வழங்கிய மறைந்த பெ.சுப்பிரமணியம் (ஆட்டிஸ்ட் மணியம்) படமும் அங்கு உள்ளது.

கடும் வெயிலில் தவித்து தண்ணீருக்காக செட்டித்தெருவில் அலையும் பசுக்களை தாகத்தைத் தீர்க்கக் கூடியதாக கோமாதா குடிதண்ணீர்த் திட்டத்தை நடைமுறைப் படுத்த நிலையத்தின் சார்பில் தண்ணீர்த் தொட்டி அமைத்து அதனை பராமரித்து வருகின்றது. இந்த செயற்பாட்டுக்குப் பொறுப்பாகவுள்ள சமாதான நீதிவான் க.ஜெகசோதி அண்மையில் காலமான போதும் அவரின் பணியைப் பொறுப்பேற்று அவரது குடும்பத்தினர் நிறைவேற்றி வருகின்றனர்.

நிலையத்தின் வளர்ச்சிக்கு யாழ்.மாநகர சபை அக்கறை காட்டுவதுடன் தேவைக்கேற்ப உதவிகளையும் வழங்குகின்றது. நகரப்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளின் போது சிரமதானப் பணிகளிலும் உறுப்பினர்களின் ஈடுபாடு உகந்த முறையில் இடம் பெற்றது. நிலையத்தின் காப்பாளராக நல்லைக் குருமுதல்வர் உள்ளார். தற்போதைய தலைவர் ந.சோமசுந்தரம். செயலாளராக யோ.நிரோஷானந் பொருளாளராக ப.பாலசுப்பிரமணியம் ஆகியோர்களுடன் அவர்களுக்குப் பக்கபலமாக எஸ்.லோகசிவம், க.குமாரசுவாமி ஜே.பி, க.லோகானந்தம் சங்கரப்பிள்ளை ஜே.பி, கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கம் ஆகியோரும் தமது அர்ப்பணிப்பான சேவைகளை வழங்கி வருகின்றனர். மாதர்களுக்கான செயற்பாடுகளில் திருமதி இராகினி இராமலிங்கமும் நிலையத்தின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த வழிகாட்டலில் எஸ்.லோகசிவம் முழுமையான பங்களிப்பை வழங்குவதாகவும் உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டனர்.

செஞ்சிலுவைச் சங்க யாழ்.பிரதேச தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் ஆசிரியை திருமதி தனக்குமார், பத்ம குமார் உட்பட கலாநிதி செ.திருநாவுக்கரசு, செல்வி புஸ்பா செல்வநாயகம் ஆகியோரின் ஆலோசனைகளும் அறிவுரைகளும் நிலையத்தின் வளர்ச்சிக்கான உந்து சக்தியாக உள்ளது என்கிறார்.

நல்லூர் முருகனின் அருளாசி நிலையத்திற்கு உண்டு என்பதால் அதன் எதிர்கால நடவடிக்கைகள் அந்தப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பலம்மிக்கதாக விளங்கும் என்பது அப்பகுதியில் உறுதியான நம்பிக்கை. நிலையத்தின் பதிவு இல.ஜே.எச்.சி./ சி.சி.சி. 801 ஆகும். விரிவடைந்துவரும் அதன் செயற்பாடுகளுக்கு உகந்ததாக நிலையக் கட்டடமும் விஸ்தரிக்கப்பட வேண்டும் போல் உள்ளது.

(முற்றும்)

## கிருமிநாசனிகளின் பயன்பாடே சிறுநீரக நோய் ஏற்படக் காரணம்

### சுகாதார அமைச்சர் சொல்கிறார்



கொழும்பு,பெப்.4

கிருமிநாசனிகளை கையாளும் முறையில் விவசாயிகளுக்குப் போதிய தெளிவின்மையாலேயே நாட்டில் சிறுநீரக நோய் அதிகரித்து வருகிறது.

இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற விவசாயிகளுக்கான நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுநீரக நோய் பாதிப்பைக் குறைக்க புதிய சட்டங்களை நடைமுறைப் படுத்தி, விசேட திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எனவே கிருமிநாசனி விற்பனை, உபயோகம், கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு முறையான திட்டம் வகுக்கப்பட்டு விரைவில் நடைமுறைப்படுத்தப் படும்.

கிருமிநாசனியை உபயோகித்துவிட்டு அந்தப் போத்தலை வயலில் எறியும் போது அது நன்னீரோடு கலத்தல், உபயோகத்தின் பின் கையைக் கழுவாமல் உணவு உட்கொள்ளல், புகைப் பிடித்தல் போன்ற அறியாமையான நடவடிக்கைகளே பாதிப்புக்குக் காரணமாகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாய அமைப்புகளுக்கு அது தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும்.

எனவே புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.-என்றார். (ச)



சுதந்திர தினத்தை முன்னிட்டு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக நடைபாதை வியாபாரிகள் தேசியக்கொடி விற்பனையில் ஈடுபட்டபோது....

## லஞ்சம் வாங்கிய கான்ஸ்டபிள் கைது

வீதியில் குப்பையை போட்டவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமல் அவரிடம் 1500 ரூபாவை லஞ்சமாகப் பெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை லஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பண்டாரவளையில் இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த அதிகாரி ஒருவரே இவ்வாறு இலஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதியில் குப்பை போட்டவரின் வீட்டுக்குச் சென்று லஞ்சமாக 1,500 ரூபாவை பெற்றபோதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

# சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் விடுதலை

### அபராதம் செலுத்த முடியாது தண்டனை அனுபவிக்கும் கைதிகளே இவ்வாறு விடுதலை என்கிறார் கொடிப்பிலி



கொழும்பு,பெப்.4

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை உள்ளிட்ட 33 சிறைகளில் தண்டனை அனுபவித்துவரும் கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப் பட உள்ளனர்

இவ்வாறு சிறைச்சாலை ஆணையாளர் டபிள்யு. கொடிப்பிலி கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஆயிரம் கைதிகளுக்கு பொது மன்னிப்பு அளிக்கப் படவுள்ளது.

வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம், சுங்க மோசடி, பயங்கரவாத தடைச் சட்டத்தை மீறியமை உட்பட 27 குற்றச்செயல்களுடன்தொடர்பு படாத ஏனைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட உள்ளனர்.

இரண்டாண்டு கால சிறைத்தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக் காலம் இரண்டு வாரங்களினாலும், மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனை அனுபவிக்கும் கைதிகளின் தண்டனைக் காலம் மூன்று வாரங்களினாலும் குறைக்கப்படவுள்ளன.

அபராதப் பணத்தைச் செலுத்த முடியாது தண்டனை அனுபவித்து வரும் கைதிகளே அதிகளவில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.-என்றார். (ச)

### திருமண பதிவுக் கட்டணம்:

## திறைசேரி அறிவிக்கும் வரை பழைய கட்டணமே அறவீடு

கொழும்பு,பெப்.4

திருமணப் பதிவுக்கான கட்டணத்தைக் குறைக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அறிவுறுத்தல்களை திறைசேரி நடைமுறைப்படுத்தும் வரை பழைய கட்டணமே அறவிடப்படும்.

இவ்வாறு ஆள்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் ஈ.எம். குணசேகர தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2013 ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் படி திருமணப் பதிவுக்கான கட்டணம் 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணிப் பதிவு மற்றும் விவாகப் பதிவுக்கான கட்டணங்களைக் குறைக்குமாறு சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதியை கேட்டுக் கொண்டுள்ளது. அதற்கமைய கட்டணங்கள் குறைக்கப்படுவது குறித்து ஆலோசிக்கப்படும்.

ஜனாதிபதியின் உத்தரவு மூலம் திறைசேரி திருமணப் பதிவு கட்டணங்களில் திருத்தம் கொண்டு வந்தால் மாத்திரமே கட்டணம் குறைப்பதை நடைமுறைப்படுத்த முடியும்.-என்றார்.

திருமணப் பதிவுக்கான கட்டணம் 5 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறித்து பலரும் விசனம் தெரிவித்து வந்துள்ளனர்.

கடந்த காலங்களில் திருமணப் பதிவுக்காக ஆள் பதிவுத் திணைக்களம் ஆயிரம் ரூபாவே அறவிட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு வரவு- செலவுத் திட்டத்தின் படி ஆள்பதிவுத் திணைக்களத்துக்கு 3500 ரூபாவும், திருமணப் பதிவாளருக்கு 1500 ரூபாவுமாக மொத்தமாக 5 ஆயிரம் ரூபா அறவிடப் படுகிறது.

எனினும் நாட்டின் ஆதிவாசிகளின் திருமணப் பதிவு இலவசமாகவே முன்னெடுக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. (ச)

## மான் இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டவர் வசமாக மாட்டினார்

கொழும்பு,பெப்.4

மான் இறைச்சி வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் ஹம்பேகமுவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்கொட்டுவந்த பொலிஸ் விசேட அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 890 கிராம் மான் இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கொட்டுவத்த வன ஜீவராசிகள் அலுவலகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## வங்கியை சூறையாடச் சென்ற குழுவினரை விரட்டிய பொலிஸார்

பண்டாரவளை,பெப்.4

பண்டாரவளை நகரத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளையைச் சூறையாட முற்பட்ட குழு, பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் தப்பிச் சென்றுள்ளது.

இந்தக் குழுவினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 11 மணிக்கு வங்கிக்குச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடி தகவல் அறிந்த பொலிஸார் விரைந்து சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளனர்.

தம்மைக் கண்டதும் சூறையாடச் சென்றவர்கள் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

## வர்ண மழை பூமிக்கு வெளியில் உயிரினம் வாழ்வதற்கான ஆதாரம்

### நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

கொழும்பு,பெப்.4

பொலநறுவை ,அரலகங்கவில பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற விண்கல்லின் பகுதிகள் மற்றும் நாட்டின் பல பகுதிகளில் பெய்த சிவப்பு மழை மூலமும் பூமிக்கு வெளியில் உயிரினங்கள் வாழ்வதற்கான உறுதிப்பாடுகள் தென்படுகின்றன.

இந்தத் தகவலை சிவப்பு மழை மற்றும் விண்கல் பகுதிகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக இலங்கை வந்துள்ள நாசா நிறுவனத்தின் நிபுணர் பேராசிரியர் சந்ரா விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதுவரை இடம்பெற்ற பரிசோதனைகள் தொடர்பான முன்னேற்றம் குறித்த கலந்துரையாடல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சிவப்பு மழை உட்பட ஏனைய பகுதிகளில் பல வர்ணங்களில் பெய்த மழை தொடர்பில் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. சிவப்பு மழையின் நீர் மாதிரிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் அவற்றில் நுண்ணுயிர்கள் இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மருத்துவ ஆய்வுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரலகங்கவில பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்ட விண்கல் மாதிரிகளிலும், சிவப்பு மழையிலும் உள்ள ஒற்றுமை குறித்து நாசா நிபுணர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

நவீன தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்தி சோபோன் மற்றும் காடிஸ் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளுக்கு அமைய, குறித்த விண்கல் மாதிரிகளில் உள்ள நுண்ணுயிர்கள் பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் அழிந்து போன உயிரினங்கள் என்று தெரியவந்துள்ளது. (ச)

## கைதிகளின் உளநலத்தை மேம்படுத்துவதற்கு திட்டம்

கொழும்பு,பெப்.4

சிறைக்கைதிகளின் உளநல சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கு விசேட திட்டமொன்று செயற்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் சிறைக் கைதிகளுக்கு திரைப் படங்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

சிறந்த வழிகாட்டல்களை வழங்கும் திரைப் படங்களை காட்சிப்படுத்துவதன் மூலம் கைதிகளின் உளநல சுகாதாரத்தை விருத்தி செய்ய முடியும் என்று திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை திரைப்படக் கூட்டுத் தாபனத்தின் ஒத்துழைப்புடன் இன்று திங்கட்கிழமை பிற்பகல் வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள கைதிகளுக்கு திரைப் படங்களை காட்சிப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.(ச)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். புதியவர்கள் அறிமுகமாவார்கள்-. வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**இடபம்:** தொட்ட காரியம் துலங்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**மிதுனம்:** நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**கடகம்:** எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்சினை தீரும். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**சிங்கம்:** உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். சொத்துப் பிரச்சினைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**நாளை**

தை -23 செவ்வாய்க்கிழமை 05.02.2013
திதி: தசமி மு.இ. 11.53 வரை
நட்சத்திரம்: அனுசம் சித்தம் பி.ப. 01.10 வரை
சுபநேரம்: 11.05- 12.35 வரை
ராகுகாலம்: 03.35- 05.05 வரை

**துலாம்:** பல வேலைகளையும் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். நயமாகப் பேசுபவர்களை நம்ப வேண்டாம். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாறாதீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமையால் சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் உங்களின் புதிய முயற்சிகளை அதிகாரி பாராட்டுவார்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பழைய சொந்தங்கள் தேடி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மகரம்:** சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நீண்டநாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். அரச விடயம் விரைந்து முடியும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**கும்பம்:** உறவினர்கள் ஒத்துழைப் பார்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | | 2 | | 5 | | 4 | 8 |
| | | 5 | 6 | | 9 | 7 | 1 | |
| 4 | | 6 | | 1 | | | | |
| | | | | | 3 | 5 | | |
| 3 | 5 | | | | | | 6 | 1 |
| | | 7 | 8 | | | | | |
| | | | | 2 | | 1 | | 4 |
| | 6 | 4 | 9 | | 1 | 3 | | |
| 7 | 8 | | 5 | | 4 | | 2 | 6 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 4 | 3 | 8 | 2 | 6 | 9 | 1 |
| 1 | 9 | 2 | 6 | 7 | 4 | 3 | 5 | 8 |
| 8 | 3 | 6 | 9 | 1 | 5 | 7 | 2 | 4 |
| 2 | 5 | 3 | 4 | 6 | 7 | 1 | 8 | 9 |
| 6 | 8 | 9 | 1 | 5 | 3 | 2 | 4 | 7 |
| 4 | 1 | 7 | 8 | 2 | 9 | 5 | 6 | 3 |
| 7 | 4 | 8 | 2 | 3 | 6 | 9 | 1 | 5 |
| 3 | 6 | 1 | 5 | 9 | 8 | 4 | 7 | 2 |
| 9 | 2 | 5 | 7 | 4 | 1 | 8 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
10.08.1935

மறைவு
05.01.2013

## அமரர் கிறிஸ்ரியன் மரியதாசன் (மகாராசா)

புன்முறுவல் பூத்த முகமும், கனிவு நிறைந்த கண்களும்,
காண்போரின் மனதைக் கவர்ந்திழுக்கும் அன்பான பேச்சும்
நீதியையும், நேர்மையையுமே, இலட்சியமாகக் கொண்ட
உங்கள் வாழ்க்கையும், எங்கே அப்பா?
குடும்பமே பெரிதென்று அல்லும், பகலும்
அயராது உழைத்துப் பிள்ளைகளின் நல் வாழ்விற்காக,
அரும்பாடுபட்டு முன்னேற்றிவைத்த எங்கள் அருமை அப்பாவே!
காலன் செய்த சதியால் கதறியழுகின்றோம்.
மாதமொன்று மறைந்து விட்டதப்பா
கனவா? நிஜமா? என்று தெரியவில்லை
உங்கள் பிரிவால் துடிதுடித்து நிற்கிறோம்
ஆண்டுகள் பல மறைந்தாலும், உங்களை மறக்கமுடியுமா?
அப்பா! அப்பா! அப்பா!

432/8, மடம் வீதி,
யாழ்ப்பாணம். (28829)(2-6)

உங்கள் பிரிவால் துயருறும்:
சகோதரன், மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
06.06.1929

உதிர்வு
05.01.2013



## அமரர் வைத்தி கணபதிப்பிள்ளை (கணபதி மேசன்)

05.01.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (02.02.2013) சனிக்கிழமை வில்லூன்றி தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று (04.02.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.16, மடத்தடி, யாழ்ப்பாணம். (29132) (6.11) குடும்பத்தினர்.

# ஜனாதிபதியின் இன்றைய செய்தி சம்பூர் மக்களின் பிரச்சினையைத் தொடுமா?

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கேட்கிறார்

திருகோணமலை,பெப்.4
ஏழு வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த இடமான சம்பூரில் இருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்தனர். ஜனாதிபதியின் இன்றைய சுதந்திரதின உரையில் அவர்களின் மீள்குடியேற்றம் குறித்து பிரஸ்தாபிக்கப்படுமா? அவர்களை பகட்டுக்கு வெறுமனே சுதந்திர தின விழாவுக்கு அழைத்ததில் என்ன பயன்? சுதந்திர தினக் கொண்டாட்டம் குறித்த தமது அறிக்கையில் மேற்கண்ட கட்டமான கேள்வியை எழுப்பி உள்ளார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சுமாரசுவாமி நாகேஸ்வரன்

அந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுதந்திர தின உரையில் சம்பூர் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பான செய்தி இடம்பெற வேண்டும். சுதந்திரதின உரையில் சொந்த மண்ணில் குடியேற்றும் செய்தி இடம்பெற்றால் மட்டுமே திருகோணமலையில் சுதந்திர தின நிகழ்வு நடந்ததற்கான மகிழ்வு தமிழ் மக்களுக்கு ஏற்படும்.

65 ஆவது சுதந்திர தினத்தை திருகோணமலை நகரில் வெகு விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு விதமான அரசியல் மற்றும் சமூக பொருளாதார நோக்கங்களைப் பின்னணியாகக் கொண்டு இந்த முறை திருகோணமலை நகரம் சுதந்திரதின கொண்டாட்டங்களுக்காக அரசால் தெரிவு செய்யப்பட்டது. திருமலை- கண்டி பிரதான வீதி உட்பட பல்வேறு விதமான திட்டங்கள் அதனூடாக முன்னெடுக்கப்பட்டன.

நாட்டின் மிகமுக்கிய நிகழ்வான சுதந்திர தின வைபவம் கொண்டாடப்படும் நிலையில், அதற்கு முன்பு தமது சொந்த இடங்களில் குடியேற்றப்படலாம் என்று சம்பூர் பிரதேச மக்கள் எதிர்பார்த்திருந்தனர்.

சம்பூர் மக்களுக்கு ஏழு வருடங்களாக உலர் உணவு வழங்கப்படவில்லை.அதனால் அவர்கள் பட்டினியால் வாடியுள்ளனர்.

அவர்கள் அண்மையில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டும் அரசால் எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இவ்வாறு அவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாத நிலையிலும், சுதந்திர தினத்துக்கு முன்னர் தமது மீள்குடியேற்றம் நடைபெறலாம் என நம்பிக்கை வைத்து அமைதியாக இருந்தனர்.

ஆனால் மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. மாறாக அவர்கள் சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

சொந்த மண்ணில் வாழும் சுதந்திரம், சொந்த நிலங்களில் விவசாயம் செய்யும் சுதந்திரம், தமது ஆலயங்களில் வழிபடும் சுதந்திரம் எதுவும் இன்றி ஏழு வருடங்களாகத் தவிக்கின்றோம். அதனால் எமக்கென்ன சுதந்திர தினக்கொண்டாட்டம் என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் இடம்பெயர்ந்து வாழும் நான்கு கிராம சேவகர் பிரிவுகளில் நவரத்தின புரத்தைச் சேர்ந்த 116 குடும்பங்களை மட்டும் மீள்குடியேற்றம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

சம்பூர் பிரதேசத்தின் ஓர் மூலையில் 116 குடும்பம் மட்டும் சென்று தனியாக வாழ்வதும், அதற்கான போக்குவரத்து உட்பட உட்கட்டமைப்பு வசதிகளைத் தேடுவதும் சிரமமான விடயமாகும். எனினும் எத்தகைய கஷ்டம் ஏற்பட்டாலும் அவர்கள் சொந்த மண்ணுக்குச் செல்ல பின்நிற்க வில்லை. இந்த நிலைமைகளை அரசு கவனத்தில் எடுக்க வேண்டும்.

மக்களின் ஏழு வருட அகதிமுகாம் வாழ்விலிருந்து விடுதலை வழங்க வேண்டும்.

சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மக்களையும் குடியேற்ற வேண்டும். ஜனாதிபதியின் சுதந்திர தின உரையிலாவது சம்பூர் மக்கள் அனைவரையும் சொந்த மண்ணில் குடியேற்றும் செய்தி இடம்பெற வேண்டும். அவ்வாறு இடம்பெற்றால் மட்டுமே திருகோணமலையில் சுதந்திர தின நிகழ்வு நடந்ததற்கான மகிழ்வு திருமலை தமிழ் மக்களுக்கு ஏற்படும்.



போரால் அனைத்துச் சொத்துக்களையும் இழந்து, சொந்த இடத்தில் வீடு இன்றி பல வருடங்களாக தற்காலிகக் கொட்டில்களில் வாழும் தமிழ் மக்கள் திருமலை மாவட்டமெங்கும் இருக்கின்றனர். அவர்கள் அன்றாடம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம். ஆனாலும் சொந்த இடத்தில் வாழும் உரிமையைப் பெற்றதால் துன்பத்திலும் நிம்மதியைப் பெறுகின்றனர். ஆனால் சம்பூர் மக்கள் அந்த நிம்மதி கூட இன்றித் தவிக்கின்றனர்.-என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-40)

## குழந்தையின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

**வீடொன்றிலுள்ள கிணற்றிலிருந்தே குழந்தையின் சடலம் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டது.**

ஏறாவூர்,பெப்.4
மூன்றரைவயதுக் குழந்தை ஒன்றின் சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஐயன்கேணி பகுதியிலுள்ள வீடொன்றிலுள்ள கிணற்றிலிருந்தே குழந்தையின் சடலம் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை மீட்கப் பட்டது.

வீட்டு வாசலில் விளையாடிக்கொண்டிருந்த குழந்தை தவறுதலாக கிணற்றுக்குள் விழுந்துள்ளது என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கிணற்றிலிருந்து நீரை அள்ளி எடுப்பதற்காக வாளியைக் கிணற்றினுள் போட்டபோது, குழந்தையின் சடலம் வாளியில் சிக்கியதாக உறவினர்கள் குறிப்பிட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## மரண அறிவித்தல்

### சதாசிவம் இளையதம்பி



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இளையதம்பி (02.02.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், பத்தமேனியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சிங்கராசா, செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வைரவப்பிள்ளை, முத்துப்பிள்ளை, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரையப்பா, காலஞ்சென்றவர்களான நாகம்மா, தங்கம்மா மற்றும் சற்குணம், மகேஸ்வரி(கனடா) செல்வராசா(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், குணரத்தினம்(கனடா), இராசரத்தினம்(கனடா), பரமேஸ்வரி, சிவனேஸ்வரி, லோகேஸ்வரி (கனடா), ஜெயரத்தினம்(கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் லிங்கேஸ்வரி(கனடா), சி.கந்தசாமி, வ.கந்தசாமி, கிருஸ்ணலிங்கம்(கனடா) தவமணி(கனடா), லீலாவதி(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், சாரங்கன்(கனடா), அருள்நங்கை(சுவிஸ்), நவசீலன், சத்தியசீலன்(பிரான்ஸ்), ஜீவானந்தி(கனடா), பிரதீப், ஜெயதீப், நிவாதீப், தர்சிகா(கனடா), நிமாலினி, மிரோஜன், நிசாந்தி, நிரூஜன், நிரூபா, தனுஷா(கனடா), சுரம்மிஜா, ஜெவின், பிரவீன்(கனடா) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(05.02.2013) செவ்வாய்கிழமை மு.ப. 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக ஆவரங்கால் கருதடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வங்கி வீதி,
ஆவரங்கல் மேற்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மட்டு. மாவடியோடை பாலத்தை பார்வையிட்டார் யோகேஸ்வரன்

மட்டக்களப்பு,பெப்.4
மாவடியோடை பாலத்தின் பாதிப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கி.துரைராசசிங்கம் ஆகியோர் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டனர்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தாலும், குளங்கள் திறக்கப்பட்டமையாலும் மாவடியோடை பாலம் இரு பக்கமும் முற்றாக உடைந்துள்ளது. அதனால் எந்த வாகனமும் இதனூடாக செல்ல முடியாதுள்ளது.

இந்தப் பாலம் ஊடாக சென்று விவசாயம் செய்யும் விவசாயிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாலம் குறித்து மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலருக்கும் அறிவித்துள்ளனர்.

இந்தப் பாலத்தை விரைவில் புனரமைத் துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## கள்ளநோட்டு கொடுத்தவருக்கு வலைவீச்சு

அம்பாறை,பெப்.4
கையடக்கத் தொலைபேசிக்கான கட்டணக் கணக்கை மீள் நிரப்புவதற்கான அட்டையைப் பெற்றுக்கொண்டு 1,000 ரூபா கள்ளநோட்டைக் கொடுத்தவரை தேடி, பொலிஸார் வலை வீசியுள்ளனர்.

இந்தச் சம்பவம் அம்பாறை, இங்கினியா பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கையடக்கத் தொலைபேசிக் கட்டணங்களை மீள்நிரப்பும் தொலைபேசி நிலையத்தின் உரிமையாளர் செய்த முறைப்பாட்டுக்கு அமையவே விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தச் சந்தேகநபர் அம்பாறையிலுள்ள விகாரையில் இருந்தவர் என்று தற்போது கிடைத்துள்ள தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

**ஜனா கொம்பியூட்டேர்ஸ்**
"கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு"
கொம்பியூட்டர் - 10,000/= தொடக்கம்
C.R.T. மொனிற்றர் - 1500/=, L.C.D மொனிற்றர் - 4000/=
T.V. - 6000/= மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். கணினி திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு: 0777508908.
(26317) (6.7.2)

**வீடு வாடகைக்கு**
சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையாக யாழ். நகரத்தில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 2866429
பார்வையிடும் நாள் இன்று (04.02.2013) திங்கட் கிழமை மட்டும். (29087) (6.7.4)

# மரண அறிவித்தல்

## திருமதி இராயகோபால் பரமேஸ்வரி (கிச்சிஅக்கா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அல்வாய் மேற்கு, திக்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராயகோபால் பரமேஸ்வரி நேற்று ஞாயிற்றுக்கிழமை (03.02. 2013) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும் ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற கதிரித்தம்பி இராயகோபால் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராஜமோகன் மற்றும் இராஜசீலன் (ஆசிரிய ஆலோசகர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி), ரஜனி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிராந்திய சுகாதார நிலையம், வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயும், உலகேஸ்வரி, Dr.பெரியதம்பி, காலஞ்சென்றவர்களான ஜெயசோதி மற்றும் கமலரேகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவஞானம் (பிரதி சுங்க அத்தியட்சகர்), ஜமுனா (பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி) ஆகியோரின் அன்பு மாமியும், அம்சவியின் அன்பு அம்மம்மாவும், அக்சானின் ஆசை அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2013) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெறுணாவளை,
அல்வாய் மேற்கு, திக்கம்.
தொ.பே.0776010674.

தகவல்:
இ.இராஜசீலன்
(மகன்)

(27723)(6.7-+)

## இந்தியமீனவர் அத்துமீறல் முழங்காவிலில் ஆர்ப்பாட்டம்

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து முழங்காவில் பகுதியில் இருந்து நாச்சிக்குடா வரையான பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் மீனவர்கள் ஈடுபட்டனர் என்று போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் தலைவரான வி.சகாதேவன் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து கடந்த 27 ஆம் திகதி முள்ளிக்குளம் கடற்கரையில் இருந்து பேரணி ஒன்றை ஆரம்பித்திருந்தார்.

அவருடைய பேரணி கடற்கரை வீதியூடாக சென்று மன்னார் தீவை அடைந்தது. பின்னர் மன்னாரில் இருந்து மீண்டும் மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட மீனவக் கிராமங்களுக்குச் சென்றுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முழங்காவில் இரணைமாதா நகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமாகி நாச்சிக்குடா சந்தியில் முடிவடைந்தது. மேலும் அவர்கள் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை தம்மிடம் கையளித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)



## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரியம்மன்கோயில் பரிபாலன சபை

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த பொதுச்சபைக் கூட்டமும்,புதிய நிர்வாகத் தெரிவும் (17.02.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் உபயகாரர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்

# மரண அறிவித்தல்

## நடராசா அருணாசலம்

(ஆசையப்பா)



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும்,கொக்குவில் நாமகள் ஒழுங்கையை வசிப்பிடமாகவும், தற் போது கனடாவில் வசித்தவருமான நடராசா அருணாசலம் (ஆசையப்பா) நேற்றுமுன்தினம் (02.02.2013) கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நடராசா- இரத்தினம் தம்பதியரின் அன்புப்புதல்வரும், நாகரத்தினத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற இரத்தினகுமார் மற்றும் அருணகுமார் (லண்டன்), ராஜ்குமார் (கனடா), நந்தகுமார் (லண்டன்), நிமலகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தகப்பனும், தபோநிதி (லண்டன்), மேகலா (கனடா), குமுதினி, தர்சிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனனி, கயாதரன் (லண்டன்), விதுஷா, விதுஷன் (கனடா), மகிஷா, கரிஷா, சிரித்திக் (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.02.2013 அன்று கனடாவில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

197,LA ROCCA AVE
WOOD BRZ DCE (ONT)
L4H 2M3
CANADA
T.P: 011 9056537501.

தகவல்:
பெறாமகள்:துரைஞ்சினி பாக்கிய நாதன்,
நாமகள் வீதி,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்.

(29139)(6.7-+)


# யாழ்.மண்ணில் பிரமாண்டமான ஆரம்பம்

# திறப்பு விழா அழைப்பு







அன்புடையீர், நிகழும் மங்களகரமான நந்தன வருஷம் தைத்திங்கள் 22 ஆம் நாள் இன்று (04.02.2013) திங்கட்கிழமை மு.ப. 10.30 மணியளவில் வரும் சுப வேளையில்

## ஆச்சி பூட் சென்ரர்

## Aache Food Centre

என்னும் நிறுவனம் சமூக திலகமும், பிரபல தொழிலதிபருமாகிய சோமசுந்தரம் பிரகதீஸ்வரன் அவர்களால் திறந்து வைக்கப்படுகின்றது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.117,பிறவுண் வீதி,யாழ்ப்பாணம். T.P:021-222 2092.

(C/6301)(3.6)

## ஆறு இந்தியர்களுக்கு 15 வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு,பெப்.4

இந்தியாவிலிருந்து சுற்றுலா விசாவில் வந்து தொழிலில் ஈடுபட்ட 6 இந்தியர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மற்றும் களுவாஞ்சிக்குடி நீதிவான்கள் உத்தரவிட்டுள்ள னர்.

மட்டக்களப்பு மற்றும் களுவாஞ்சிக்குடி நீதிவான்களின் முன்னிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சந்தேக நபர்களை பொலிஸார் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்ததாகக் கூறப்படும் இந்த 6 இந்தியர்களும் நெல் அறுவடை வேலையில் ஈடுபட்டிருந்தபோதே கைதுசெய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி, களுவாஞ்சிக்குடி, கரடியனாறு, கொக்கட்டிச்சோலை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கில் நெல் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் அவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அனுமதிப்பத்திரம் ஏதுமின்றி அறுவடைப் பணிகளில் ஈடுபட்டிருந்தமையால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)



முற்றாகச் சேதமடைந்துள்ள அம்பாறை,வெளிச்ச வீட்டு வீதியை கிழக்கு மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.எம்.நசீர், அட்டாளைச்சேனை பிரதேச செயலர் ஐ.எம்.ஹனீபா உட்படப் பலர் பார்வையிட்டபோது....

## நெல் அறுவடை இயந்திரம் தீக்கிரை

மட்டக்களப்பு,பெப்.4

நெல் அறுவடை இயந்திரம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று பட்டிப்பளை, கொக்கட்டிச் சோலை பொலிஸ் நிலையத் தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவம் மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பிரதேசத்திலேயே இடம் பெற்றுள்ளது.

அம்பாறை , பொத்துவில் பிரதேசத்திலிருந்து வாடகை அடிப்படையில் நெல் அறுவடைக்காக கொண்டுவரப்பட்ட இயந்திரமே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை கொக்கட்டிச் சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## ஒலுவில் கடலில் தத்தளித்த 138 வெளிநாட்டவர்கள் மீட்பு

### உணவின்றி ஒருவர் உயிரிழப்பு



அம்பாறை,பெப்.4

அம்பாறை, ஒலுவில் கடல் பிரதேசத்தில் தத்தளித்துக்கொண்டிருந்த 138 வெளிநாட்டவர்களை கடற்படையினர் மீட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பங்களாதேஷில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுகொண்டிருந்த பங்களாதேஷ், மியான்மார் நாடுகளைச்சேர்ந்த 138 பேர் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோதே, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கடற்படையினரால் மீட்கப்பட்டனர் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, ஒலுவில் கடலில் 70 மைல்களுக்கப்பால் இவர்களைக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக ஆஸ்ரேலியாவுக்கு போறா படகில் பயணித்தபோது அலையின் வேகத்தால் படகு செல்லமுடியாமல் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தபோதே கடற்படையினர் அவர்களை மீட்டுள்ளனர்.

உணவு கிடைக்காமையால் ஒருவர் இறந்துள்ள நிலையில் மீட்கப்பட்டுள்ளார். மயக்கமுற்ற நிலையில் காணப்பட்ட 8 பேர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இவர்கள் கடந்த நான்கு நாள்களாக உணவுகள் இன்றி நடுக்கடலில் தத்தளித்துள்ளனர் என்று கடற்படையினரின் ஆரம்ப விசாரணையில் தெரிய வந்துள்ளது.

மீட்கப்பட்ட அனைவரும் ஒலுவில் கடற்படை முகாமில் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# 65 ஆவது தேசிய சுதந்திரதினம் திருமலை நகரம் விழாக்கோலம்

### தேசியக் கொடிகளால் நகரம் அலங்கரிப்பு; பாதுகாப்பு கடமையில் 4,000 பொலிஸ், முப்படை

திருகோணமலை,பெப்.4

இலங்கையின் 65 ஆவது தேசிய சுதந்திர தின கொண்டாட்டங்கள் இன்று திங்கட்கிழமை திருகோணமலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ளது.

சுமார் 60 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை நகரில் சுதந்திர நிகழ்வு நடைபெறுவதால் நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது. நகர் முழுவதும் தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் நடைபெறும் சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கென 4000 பொலிஸாரும் முப்படையினரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று சுதந்திர தின ஒத்திகைகள் நடைபெற்றன. அதற்கென பொலிஸார் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

திருகோணமலை, பிரட்ரிக் கோட்டை வாசலுக்கும், கடற்கரை வீதிக்கும் இடைப்பட்ட வீதியில் அமைக்கப்பட்ட அலங்கார மேடைகள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், வெளிநாட்டு தூதர்கள், மாகாண முதலமைச்சர்கள், அமர்ந்திருக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.



இன்று காலை 6.30 மணிக்கு சுதந்திர தினத்தை முன்னிட்டு மதவழிபாடு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலை நகரிலுள்ள எட்டு பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவிகள் தேசிய கீதம் இசைக்க ஜனாதிபதி தேசியக் கொடியை ஏற்றுவார். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியை வாழ்த்தி ஜய மங்கள கீதம் இசைக்கப்படும்.

சுதந்திர தின கொண்டாட்டத்தில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் உட்பட 2,500 இற்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொள்வர்.

சுமார் 60 வருடங்களுக்குப் பின்னர் திருகோணமலையில் நடைபெறும் தேசிய சுதந்திர தினம் என்பதால் திருகோணமலை நகர் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுதந்திர தின வைபவத்தின் பாதுகாப்பு கடமைகளுக்கான ஒத்திகைகள் காரணமாக நேற்று முதல் திருகோணமலை நகரில் விசேட வாகனப் போக்குவரத்துத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ச)



## டெங்கு நோயைக் கட்டுப்படுத்த மக்களின் ஒத்துழைப்பு தேவை

### மட்டு. பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கோருகிறார்

மட்டக்களப்பு,பெப்.4

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் சதுர்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சில பிரதேசங்களில் அதிகாரிகளுடன் பொது மக்கள் முரண்படுவதனால் டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகள் பின்னடைவை எதிர்கொள்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக பெய்த மழை காரணமாக சில பகுதிகளில் நீர் தேங்கி நிற்கின்றது.

அந்தப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தக் கூடிய இரசாயனம் விசிறப்படுகின்றது. அது மூன்று மாதங்களே தாக்குப்பிடிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே நீர் தேங்கியுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் அந்த நீரை வெளியேற்றத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மாதம் டெங்கு நோயால் சுமார் 17 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2011 ஆம் ஆண்டை விட டெங்கு தாக்கம் குறைந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதற்கு சுகாதார சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் காரணங்களாக அமைகின்றன.

நாங்கள் என்ன நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தாலும் அதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமானது.

சில பகுதிகளில் அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது சிலர் இடையூறுகளை ஏற்படுத்துகின்றனர்.

அதனால் அந்த அதிகாரிகளுக்கு தொடர்ந்து செயற்பட முடியாத நிலைமை ஏற்படுகின்றது.

குறிப்பாக அண்மையில் நொச்சிமுனைப் பகுதியில் நுளம்புக் குடம்பி பெருக்கத்தை ஏற்படுத்தும் ஆறு இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது, அந்தப் பகுதியைச் சேர்ந்த சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

அதனால் சில முரண்பாடுகள் ஏற்பட்டு நீதிமன்றுக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. எனவே அது தொடர்பில் பொதுமக்கள் சிந்திக்க வேண்டும்.

மட்டக்களப்பில் டெங்குத் தாக்கம் நொச்சிமுனை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய் ஆகிய பகுதிகளில் அதிகம் உள்ளன. அந்தப் பகுதிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிணறுகளில் இருந்தே நுளம்புப் பெருக்கம் அதிகமாக உள்ள காரணத்தால் கிணறுகளில் மீன் குஞ்சுகள் இடப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளை மக்களே தங்களது கிணறுகளில் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் போது நுளம்புப் பெருக்கத்தைக் குறைக்கலாம்.

எனவே பொதுமக்கள் சிந்தித்து அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியும்.-என்றார். (ச)

## வீடு விற்பனைக்கு

தொல்புரம். டச்சுறோட்டில் இருக்கும் 5அறைகள் கொண்ட வீடு, 9பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6178073
077 9440906

## விற்பனைக்கு உண்டு

SUN TACE அறுவடை இயந்திரமும் அதனை ஏற்றிச் செல்லும் உழவு இயந்திர இழுவை பெட்டியும் (NP.RV.xxxx) மற்றும் உழவு இயந்திரம் (NP.RA.xxxx) தொடர் இலக்கத்தை உடையதும் உடன் விற்பனைக்கு உண்டு.

T.P-0776140955 (26323)(3.6)

## வீடு விற்பனைக்கு

யாழ். ஈச்சமோட்டை என்னுமிடத்தில் 3½ பரப்புக் காணி இரு வீடுகளுடன் விற்பனைக்கு உண்டு.நல்ல சூழலில் ஒரு வளவுக்குள் இரு வீடுகள் காணப்படுகின்றன.

தொடர்பு: 0213008801, 0212221556,
0213008671(கடை இல.) (26323)(3.6)

## Sinhala Classes

Classes for
Govt.officers & others


By.Tennekoon(Interpreter)
Contat No-0776660400
(26136)(3.6)

## கோழிப்பண்ணை வாடகைக்கு

3 ஏக்கர் தென்னங்காணி (வருமானமுள்ள) 10,000 கோழி, 200 ஆடு, 50 மாடு, 10 நாய் போன்றவை வளர்க்கக்கூடிய அதி வசதிகள் கொண்ட பண்ணையும் சகல வசதிகளும் கொண்ட 42 அடி வீடு என்பன அடங்கிய பண்ணை வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு:
077 6110012, 077 230 4097 (27651)(6.7.2)


## உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவசம்பு மதியழகன்**
(B.com.Hons,Dip.in.Edu (merit),SLEASIII)

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் சித்தியடைந்து பண்டாரவளை கல்வி வலயத்தில் உதவிக்கல்விப்பணிப்பாளராக நியமனம் பெற்றமையையிட்டு உளமார வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல பட்டங்களும் உயர் பதவிகளும் பெற வாழ்த்துகின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி.
(சி/6201) (45.6)

ஆசிரியர்கள்
யூப்பிட்டர் கல்விநிலையம்.

## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்




**குமாரசாமி சதாசிவமூர்த்தி**
B.A, M.Ed,PGDE, Dip.in.Ag Sp.Trt, SL.E.A.S
(முன்னாள் அதிபர் பலாலி ஆசிரியர் கலாசாலை)

யா/ பலாலி ஆசிரிய கலாசாலை வரலாற்றில்
மாணவனாய், விரிவுரையாளராய்
பீடத்தலைவராய், உப அதிபராய், அதிபராய்!
ஒவ்வொரு படிகளிலும் உள்ள
தடைக்கற்களை படிக்கற்களாக்கி
தனக்கென தனி முத்திரை பதித்து
சாதனைத் தலைவனாய் சரித்திரம் படைத்து-இன்று
சாவகச்சேரி நகரசபை உபதவிசாளராய்
அகில இலங்கை சமாதான நீதிவானாய்
மிளிர்கின்ற எம் அதிபருக்கு
இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்

பலாலி ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்.

## துயர் பகிர்கின்றோம்



எமது நண்பன்
**இ.இராஜசீலன்**
அவர்களின் அன்புத் தாயார்
**இராயகோபால் பரமேஸ்வரி**
அவர்களின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், தாயாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**திக்கம், நண்பர்கள்**
(27724)(6.7.1.1)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
16.02.1978

மறைவு
04.02.2003

**யேசுதாசன் றொசானி**


பத்தாண்டுகள் பறந்து விட்டதே!
எம் ஒளி விளக்கு அணைந்ததே!
எங்கு பார்த்தாலும் உம் திருமுகமே!
உம் நினைவு என்றுமே மாறாது!
உமது ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்!

துயருடன்
ம.யேசுதாசன் (மடுராணி)
இல.22 ஏ.வீ.றோட், கொழும்புத்துறை.
தந்தை,தாய்,சகோதரர்.

# நீங்கா நினைவில் ஓராண்டு...

## அமரர் கந்தையா சண்முகராசா

(உரிமையார், அம்பாள் ஸ்ரோர்ஸ் வீரமாகாளி, அம்மன் கோயிலடி)



மலர்வு
23.10.1952

உதிர்வு
15.02.2012

கண்கள் கலங்குதப்பா உங்கள்
பிரிவை நினைத்துவிட்டால்
கண்ணிமைக்கும் நேரத்தில் நீங்கள்
எம்மை விட்டு நெடுந்தூரம் சென்று விட்டீர்கள்
ஆண்டொன்று சென்றாலும்
எம் துயரம் ஆறவில்லை அப்பா!
தெய்வத்தால் தரப்பட்ட தங்கம்
நீங்கள் என்பதால்
எங்கள் உள்ளங்களில் சாகாவரம்
பெற்று என்றுமே வாழ்ந்திடுவீர்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (04.02.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுவண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

34/1, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(சி/6203) (45.6.7)

**குடும்பத்தினர்.**




பெரும்பாலும் மேகக் கூட்டத் துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இராஜயோக நிலையம் நெல்லியடியில் திறப்பு

யாழ்ப்பாணம்,பெப்.4

வடமராட்சி நெல்லியடியில் பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையம் இன்று திங்கட்கிழமை மகாத்மா வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மும்பையைச் சேர்ந்த தீபா பெஹலஜ் குல்ரஜ்னி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தியான நிலையத்தை திறந்து வைக்கவுள்ளார்.

அவர் பிரம்ம குமாரிகள் உலக ஆன்மிகப் பல்கலைக் கழகத்தின் வர்த்தகத் தொழில் துறை பிரிவில் நிர்வாக அங்கத்தவராவார்.

பல்வேறு இந்தியத் தொழில் ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றில் 'நேர்மை' 'ஆளுமை விருத்தி' பற்றிய விரிவுரைகள், கருத்தரங்குகள், செயலமர்வுகளை நடத்தி வருகின்றார்.

பிரம்ம குமாரிகள் இராஜ யோக தியான நிலையத்தை திறந்து வைத்த பின்னர் ''ஆளுமை விருத்தி எட்டு வழி முறைகள்'' எனும் தொனிப் பொருளில் சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (3-14)

# உயர்தரப் பெறுபேறுகள் விவரம்

யாழ்ப்பாணம், பெப்.4

2012 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அதனடிப்படையில் பாடசாலை அதிபர்கள் அனுப்பி வைத்துள்ள பெறுபேற்று விவரம் வருமாறு:-

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

**கலைப் பிரிவு**- பாலசுப்பிரமணியம் அனித்தா-3ஏ, லோகேஸ்வரசர்மா மயூரதி-2ஏ,பி,

**கணிதப் பிரிவு**- தவராசா அனோஜன்-3ஏ, பரஞ்சோதி சாகித்தியன்- 3ஏ,

**மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**

**கலைப் பிரிவு**- நாகரத்தினம் சுஜீவன்- ஏ,2பி,

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

**கலைப் பிரிவு** - கிருஷ்ண தாசன் தேனுகா-2ஏ,பி,

**சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி**

**வர்த்தகப் பிரிவு** - ர.ரஜிந்தா-3ஏ, ச.லக்சனா-2ஏ,பி, தே.சுதர்சினி-ஏ,2பி, கு.சுமன்-ஏ,பி,சி, இ.விதுஷன்-ஏ,2சி

**கலைப்பிரிவு** - கெ.கிரிசாந்-2ஏ,பி, கெ.ஆன். டொலினா-2ஏ,சி, த.மயூரியா-ஏ,பி,சி, க.ஜெயரூபினி -ஏ,பி,சி, ந.புரந்தகன்-ஏ,பி,சி, பா.ராஜினி-ஏ,2சி

**தெல்லிப்பழை யூனியன் கல்லூரி**

**கலைப்பிரிவு** -சொ.தருமதன் -3ஏ, கீர்த்தனா-2ஏ,பி, க.கஜானா-ஏ,2பி, அன்ரனி பிரதீஸ்-ஏ,பி,சி, ச.தர்ஜினி-3பி, ம.கோகுலன் -ஏ,2பி, சு.நஜீபன்-2ஏ,சி , ச.பார்த்தீபா-ஏ,பி,சி

**வணிகப்பிரிவு** - செ.தர்சினி-3ஏ, இ.கஜனி-3ஏ , தி.லகிதா -2ஏ,பி, அ.சஞ்சீவன் -2ஏ,பி , ம.அபிவர்ஹினி -2ஏ,சி,

**கணிதப்பிரிவு**- சஜீந்தன்-ஏ,2சி, சி.சுயந்திரன்-பி,2சி

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு** - ராஜரட்ணம் அரோஜன் -3ஏ, சிவகுமரன் வசந்த குமரன்-ஏ,2பி, ரவீந்திரன் கௌசிகன்- ஏ,பி,சி

**கலைப்பிரிவு**- புவனேஸ்வரன் ஐங்கரன்-2ஏ,பி, குணரட்ணம் பிரதீப்-2ஏ,சி , ரவீந்திரன் தினேஸ் -ஏ,பி,சி ,பீற்றர் விபாஜன் -ஏ,பி,சி , பூபாலசிங்கம் டினார்த் -ஏ,2சி, தவராசா ஜதீபன் -3பி, நல்லலிங்கம் பிரசன்னா -ஏ,2பி ,கனகலிங்கம் சிவகுமார் -2பி,சி ,பொன்ராசா கோகிலன்-பி,2சி ,செல்வராசா கலாமோகன்- பி,2சி, ரட்ணசிங்கம் சோதீஸ்வரன்-பி,2சி, முரளிதரன் பிரசன்னா-பி,2சி, சிவசுப்ரமணியம் சர்வானந்த்-பி,2சி

**கணித விஞ்ஞான பிரிவு** - ஸ்ரீகுமரன் கவிப்பிரியன்-3பி, உலகேஸ்வரக்குருக்கள் பானுஷசர்மா-பி,2சி , கருணாநிதி சிவாதீபன்-பி,2சி ,புவிராஜ் டிலக்ஷன் -பி,சி,எஸ், ரஞ்சன் டனீந்திரன் -2சி,எஸ், தங்கவேலு கனீஷாந்த் -2சி,எஸ்.

# தென்மராட்சி கல்வி வலயத்தில் இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

தென்மராட்சி, பெப்.4

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழுள்ள 9 கல்வி வலயங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டமைக்கான பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவு, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு, மடு, கிளிநொச்சி, துணுக்காய், யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 17 ஆசிரியர்கள் ஏனைய கல்வி வலயங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி எஸ்.ஸ்ரீகணேசன் (சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), திருமதி ஐ. கஜேந்திரன் (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), திருமதி எஸ்.ஞானதேவன் (நாவற்குழி ம.வி.) கே.குகதாஸன் (உசன் இராமநாதன் ம.வி), திருமதி. எஸ்.விக்னேஸ்வரன் (வரணி. ம.வி), திருமதி.எஸ்.லோகதாஸ் (வரணி.ம.வி), திருமதி.கே.சிவகரன் (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி), திருமதி.ரி.அலெக்ஸாண்டர் (கச்சாய் அ.த.க.பாடசாலை), திருமதி.எஸ்.சிவதாஸன் (மட்டுவில் தெற்கு.அ.மி.த.க.பாடசாலை), ஆர்.அகிலஜெயம்(கைதடி சேதுகாவலர் வித்தி), எம்.சிவகுமார் (போக்கட்டி அ.மி.த.க .பாடசாலை), திருமதி.ஆர்.மகேந்திரன்( சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), செல்வி. எம்.சேனாதிராஜா (நாவற்குழி.ம.வி), திருமதி.எஸ்.சரவணநாதன் (அல்லாரை அ.த.க.பாடசாலை), செல்வி.பி.தர்மலிங்கம் (மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை), திருமதி.ரி.சபேசன் (கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தி), எஸ்.தவராசா(கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை) (3-9)

# மெய்வன்மைப் போட்டி

சுழிபுரம்,பெப்.4

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி செல்வி சாந்தி மரியாம்பிள்ளையும் , சிறப்பு விருந்தினர்களாக த.கணேசு, திருமதி.க.வள்ளியம்மை அகியோர் கலந்து கொள்வர். (3-28)

## உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தில் நூல்கள் கொள்வனவு

யாழ்ப்பாணம், பெப்.4

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட எழுத்தாளர்களிடம் இருந்து நூல்களைக் கொள்வனவு செய்தல் தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் நூல்களைக் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அதற்கமைய பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வதியும் எழுத்தாளர்கள், பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்குமாறு யாழ். பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (3-14)













# வாழ்க்கைத் துணையுடன் சண்டையா ?



**உறவுகளுக்குள் சண்டைகள் வருவது சாதாரண விடயம். அவ்வாறு வரும் சண்டைகள் தான் அந்த உறவை நீண்ட நாட்கள் நிலைக்க வைக்கும்**

உறவுகளுக்குள் சண்டைகள் வருவது சாதாரண விடயம். அவ்வாறு வரும் சண்டைகள் தான் அந்த உறவை நீண்ட நாட்கள் நிலைக்க வைக்கும். சண்டை வராத உறவுகளை விட, சண்டை வந்தால் தான் நல்லது என்று நிறைய பேர் சொல்வார்கள். அது உண்மை தான். ஆனால் அவ்வாறு வரும் சண்டைகள் நீண்ட நாட்கள் நிலைக்கக் கூடாது. அவ்வாறு நிலைத்தால், அவை அந்த உறவுக்கே முறிவை ஏற்படுத்தும். எந்த ஒரு சண்டையும் ஒரு நாளுக்குள் முடிந்துவிட வேண்டும். இவ்வாறு வரும் சண்டையில் ஏற்றத்தாழ்வு இருக்கவே கூடாது. அது அந்த உறவை வாழ்நாள் முழுவதும் ஒன்றுசேர விடாமல் செய்து விடும். எனவே எந்த ஒரு சண்டை வந்தாலும், அவற்றை விரைவில் முடிப்பதற்கு முயல வேண்டும்.

தாமதம் ஆகிவிட்டால், பின்னர் சேர்வது என்பது கடினமாகவிடும்.

★ வாழ்க்கைத் துணையுடன் சண்டை போட்டு, ஒரு நாள் முழுவதும் பேசாமல் இருக்கலாம். ஆனால் இரவு வந்தால், அந்தச் சண்டையைச் சரிசெய்துவிட வேண்டும். ஏனெனில் இந்த நேரம் தான் இருவரும் அமைதியாக மனம் விட்டுப் பேச முடியும்.

★ சில நேரங்களில் துணையின் கோபத்தை போக்க ஆச்சரியமான செயல்கள் கூட உதவும். சொல்லப்போனால், ஆரோக்கியமான வாழ்க்கையில் எதிர்பாராதவாறு ஆச்சரியம் கொடுப்பது ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. எந்த ஒரு பெண்ணாக இருந்தாலும் சரி, ஆணாக இருந்தாலும் சரி, ஒருவர் மற்றவரிடம் நிச்சயம் ஏதாவது ஒன்றை எதிர்பார்ப்பார்கள். அந்த எதிர்பார்ப்புகளை அவர்கள் கோபமாக இருக்கும் போது செய்தால், அதுவும் சண்டையை மறக்கச் செய்து,அன்பை அதிகரிக்கும்.

★ சண்டை ஏற்படும் போது இருவருள் ஒருவர் சண்டை போடுவதை தவிர்க்க, அவர்களது மனதை திசைத்திருப்ப ஏதாவது ஒரு வித்தியாசமான மற்றும் அவர்களது ஆர்வத்தை தூண்டும் ஏதாவது ஒரு தலைப்பைப் பற்றி பேச ஆரம்பித்தால், சில சமயங்களில்கோபத்தை மறந்துவிட்டு பேசி விடுவார்கள். பிறகு என்ன ஒரே சந்தோஷம் தான்.

★ சண்டை வந்து விட்டால், உடனே அந்தச் சண்டையை நிறுத்துவதற்கு, துணையிடம் மன்னிப்பு கேட்கலாம். இப்படி செய்து பாருங்கள் சண்டை சமாதானமாகி விடும்

-இளையவன்



# கணவரின் அன்பைப் பெற வழிகள்



- அ.பிரேமினி

கணவன் எப்போதும் தன்னிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று பொதுவாக எல்லாப் பெண்களுமே எதிர்பார்க்கிறார்கள். ஆனால் ஆண்களின் அன்றாட வேலைகளும், அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளும் அவர்கள் மனைவியிடம் அன்பு செலுத்து வதற்கு எதிரியாக அமைகின்றன.

அன்றாட வேலைகளிலும், பிரச்சினைகளிலும் தங்களிடம் இருக்கும் சக்தியையும், உற்சாகத்தையும் இழந்துவிடும்



ஆண்கள், வீட்டிற்கு வரும்போது தனிமை, ஓய்வு இந்த இரண்டையும் தான் விரும்புகிறார்கள். அப்போது மனைவியிடம் இருந்து விலகுகிறார்கள். மனைவியோ தன்மீது கணவருக்கு இருந்த அன்பு குறைந்து போய்விட்டதாக வருந்துகிறார். அப்படி வருந்தாமல் வாழ, கடைபிடிக்கவேண்டிய சில வழிமுறைகள்:

★ காலையில் கணவர் எழும்போதே சிரித்த முகத்துடன் அவர் எதிரே வந்து நில்லுங்கள். அந்தன முகமும் சிரிப்பும் நாள் முழுவதும் அவர் மனதில் நின்று உங்களை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.

★ காலையில் கணவரை எழுப்ப வேண்டியிருந்தால், அதை ஒரு தொந்தரவாக நினைத்து ஆர்ப்பாட்டம் செய்து அவரை விழிக்க வைக்காதீர்கள். உங்கள் மீது எரிச்சலுடன் விழிக்கும் அவர், அன்று முழுவதும் அதே எரிச்சலோடு அனைத்து வேலைகளையும் செய்துவிட்டு, வீட்டிற்கு வந்ததும் அதற்கெல்லாம் நீங்கள்தான் காரணம் என்பார். அந்த எரிச்சலை உங்களிடமும் காட்டுவார். மிகவும் மென்மையாக தலையை வருடி விழிக்கவையுங்கள்.

★விழிக்கும்போதே அன்றைய வேலைகளை எல்லாம் கூறி, அவரை அவசரப் படுத்தாதீர்கள். எழுப்புவது மட்டும்தான் என் வேலை. எழுந்த பின்பு அவருடைய வேலைகளை அவரே செய்வார் என்று விட்டுவிடுங்கள். அவர் அதிக நேரம் தூங்கிவிட்டால், நீங்களே இப்படி தூங்கினால் உங்கள் பிள்ளைகள் உங்களைவிட அதிகமாகத்தான் தூங்குவார்கள் என்று அவரை குழந்தைகளோடு சேர்த்து மட்டம் தட்டாதீர்கள்.

★ மற்றவர்கள் முன்னால் உங்கள் கணவரை புகழ்ந்து பேசுங்கள். நிறைகளை மட்டும் வெளிப்படுத்துங்கள்.

★மணமான புதிதில் செய்த தவறுகளை அடிக்கடி நினைவுபடுத்தாதீர்கள். மன்னிக்கும் சுபாவம்தான் உண்மையான அன்பை வளர்க்கும்.

★ அலுவலகத்திலிருந்து கணவர் களைத்து வீடு திரும்பும்போது கதவைத் திறக்க வெகு நேரம் எடுத்துக் கொள்ளாதீர்கள். உடனே திறந்தால், அவர் எப்போது வருவார் என்று நீங்கள் காத்திருப்பது போல் தோன்றும். கதவை உடனே திறந்தால் கணவர் - மனைவி இடையே காதல் வளரும்.



**திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .**

# பெண்கள் திறமைசாலிகள்.....

அடுக்களையில் அடிமைகளாக இருந்த பெண்கள் கடந்த காலங்களில் உலகத்தையே அடிமைப்படுத்தும் அளவுக்கு ஆளுமைத்திறன் படைத்தவர்களாக வளர்ந்திருக்கின்றனர்.

★ பெண்கள் இன்று மருத்துவர்களாக, பொறியியல் வல்லுநர்களாக, ஆசிரியர்களாக, விமானம் ஓட்டுபவர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர். மிகப்பெரிய நிறுவனங்களில் உயர் பதவியை கூட பெண்கள்தான் வகிக்கின்றனர். அவர்களின் ஆளுமைத்திறன் அதிகம்.

★ ஆண்களை விடப் பெண்கள்தான் 5 முதல் 10 வயது வரை அதிகம் உயிர் வாழ்கின்றனர். உலக அளவில் 85 சத விகிதப் பெண்கள் 100 வயதுவரை வாழ்வதாக புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கிறது. ஆண்கள்தான் அதிக அளவில் மாரடைப்பினால் இறக்கின்றனர். பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது குறைவுதான் இதற்கு காரணம் அவர்களின் உடலில் சுரக்கு ஈஸ்ரோஜன் என்ற ஹார்மோன்தான். இது ரத்தத்தில் தேவையற்ற கொழுப்பு சேர்வதை தடுக்கிறதாம்.

★இயற்கையாகவே பெண்கள் பன்முகத்திறன் படைத்தவர்கள். பிரச்சினைகளை எளிதில் கையாளுவார்கள் என்று உளவியல் நிபுணர்கள் நிரூபித்துள்ளனர். அன்னையாகவும், மனைவியாகவும் அதே சமயத்தில் அலுவலகத்தில் அதிகாரிகளாகவும்பணிபுரிந்துதங்களில்திறமையைநிரூபித்துள்ளனர்.

★ மிகப்பெரிய நிறுவனங்களில் மேலாளர்களாக பதவி வகிக்கும் பெண்கள் அந்த நிறுவனத்தினை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

- வ.அற்புதன்



★ பெண்கள் இயற்கையிலேயே அழகானவர்கள். அது கடவுள் கொடுத்த வரம். பதின்பருவ பெண் ஒரு வித அழகு என்றால் குழந்தை பேற்றுக்குப் பின்னர் பெண்களுக்கு அழகுடன் கம்பீரமும் அதிக ரிக்கும். எதிர்காலத் தலைமுறையை உல கிற்கு அறிமுகம் செய்துவிட்டோம் என்ற கர்வத்தில் பெண்களுக்கு அழகு கூடுமாம்.

★ பெண்கள் எத்தகைய பிரச்சினைகளையும் சமாளிக்கும் திறன் படைத்தவர்கள் என்று சமீபத்திய ஆய்வு ஒன்றில்நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் தான் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களுக்கு மனஅழுத்தம் ஏற்படுவது குறைவு என்று ஆய்வாளர்கள் நிரூபித்துள்ளனர்.

★ பெண்கள் ஆலோசனை சொல்வதில் சிறந்தவர்கள். அவர்கள் எதையும் தீர்க்கதரிசனத்துடன் அணுகுவார்கள். அதனால்தான் பெண்புத்தி பின்புத்தி என்ற பழமொழியே உருவானது. ஆனால் இந்த பழமொழியை சில தவறாக சொல்லி வருகின்றனர்.

★ஆண்களை விடப் பெண்கள் சுகாதாரமானவர்கள் என்று ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. அமெரிக்காவில் நடைபெற்ற ஆய்வு ஒன்றில் ஆண்கள் பணிபுரியும் இடத்தில் பத்து முதல் இருபது சதவிகித பாக்டீரியா இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் பெண்கள் பணி புரியும் சூழல் சுகாதாரமாக இருந்ததாம்.

உணவு கையாளும் நிலையங்களில்

## சுகாதாரமான முறைகளில் உணவு பரிமாற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.04

உணவு கையாளும் நிலையங்களில் நுகர்வோருக்கு உணவு விநியோகம் செய்யும் போது இடுக்கி அல்லது கையுறைகளைப் பயன்படுத்தி உணவுகளை வழங்கவேண்டும். இதனை சகல உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

யாழ்.மாநகரசபையின் பிரதம உணவுப் பரிசோதகர் க.ஜீவநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உணவு கையாளும் நிலையங்களில் ஆரோக்கியமான சுகாதார முறைமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. அந்தந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களூடாக உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக உணவு கையாளும் நிலையங்களில் மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்தை உணவு கையாளுபவர்கள் பெற்றிருப்பதுடன், அச்சிட்ட தாள்களில் உணவு பொதியாக்கல் ஏனைய உணவுடனான தேவைகளுக்கு பயன்படுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும்.

உணவுப் பொருள் விநியோகத்தை இடுக்கி அல்லது கையுறை அணிந்து மேற்கொள்ள ஆவண செய்தல், தூய்மையான குடிதண்ணீரை வழங்குதல், ஊழியர்களின் தனி நபர் சுகாதாரம், சீருடை அணிந்திருத்தல், உணவுப் பொருள்களில் தொற்று ஏற்படாதவாறு களஞ்சியப் படுத்தல், காலாவதியான பொருள்கள் பாவனையை தடை செய்த உணவு தயாரிப்பதற்கு பாவிக்கின்ற பொருள்கள், மரக்கறிவகை, இறைச்சி, மீன்,முட்டை வகைகள் தரமும் அதன் களஞ்சியப்படுத்தும் முறைமையும் உரிய முறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல், சுற்றாடல் சுகாதாரம் பேணல் என்பன முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை உணவு கையாளும் நிலையங்களில் உரிமையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-14)

மஹிந்தவின் இந்திய வருகையைக் கண்டித்து

# தமிழக ஆளுநர் மாளிகை நாளை முற்றுகையிடப்படும்

## தமிழக வாழ்வுரிமைக் கட்சி அறிவிப்பு



சென்னை, பெப்.4

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகையைக் கண்டித்து தமிழக ஆளுநர் மாளிகை முன்பாக நாளை செவ்வாய்க் கிழமை முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் நிறுவுநர் தி. வேல் முருகன் அறிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக சென்னையில் நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையக் கூட்டத்தில் போர்க்குற்றம் தொடர்பாக இலங்கைக்கு எதிராக கடுமையான தீர்மானங்களை சர்வதேச நாடுகள் கொண்டு வர உள்ளன. இதிலிருந்து தம்மை எப்படியும் இந்தியா காப்பாற்றிவிடும் என்ற இறுமாப்பில் இலங்கை உள்ளது.

இதற்காக அண்மையில் அந்நாட்டு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான குழு இந்தியாவுக்கு வந்து சென்றது. இதை தமிழக வாழ்வுரிமைக் கட்சி அப்போதே சுட்டியும் காட்டியது.

அதைத் தொடர்ந்து இந்தியாவின் ஆதரவு தமக்கு இருக்கிறது என்று காட்டுவதற்காகவே இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு எதிர்வரும் 8 ஆம் திகதி வரவுள்ளார்.

தமிழக மக்களின், தமிழக அரசின் உணர்வுகளை ஒட்டுமொத்தமாக அலட்சியம் செய்து, தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை புறம்தள்ளி ராஜபக்ஷவை காப்பாற்றும் வகையில் இந்தியாவுக்குள் வர அனுமதித்திருக்கிறது மத்திய அரசு.

மத்திய அரசின் இந்த தமிழர் விரோதப் போக்கைக் கண்டித்து இந்திய அரசின் பிரதிநிதியாக தமிழகத்தில் பதவியில் இருக்கும் ஆளுநர் மாளிகையை நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்த தமிழக வாழ்வுரிமைக் கட்சி தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (வ)

## தாக்குதலை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதலை மத்திய அரசு தடுத்து நிறுத்தக் கோரி நேற்றுமுன்தினம் காலை மல்லிபட்டினம் கிழக்கு கடற்கரை வீதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எஸ்.டி.பி.யூ. தொழிற் சங்கங்கள் மற்றும் அனைத்து மீனவர்கள் அமைப்புக்கள் சார்பில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் விசை படகு உரிமையாளர்கள் சங்க மாநில செயலாளர் தாஜுதீன் உட்பட சுமார் 500 இக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அவர்கள் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சம்பவம் மல்லிபட்டினம் மீனவர்களின் மத்தியில் தீவிர நிலையை ஏற்படுத்தியது. (வ)

# அமைச்சரவை.....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும், அவற்றில் பணி புரிந்த தொழிலாளர்கள் தமது தொழிலை இழக்க நேர்வது குறித்தும் செய்திகள் வெளியாகி வருகின்றன.

ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நிறுத்தப்பட்ட போதிலும் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் தற்போதும் அந்தச்சலுகையை முற்று முழுதாக நிறுத்திக் கொள்ளவில்லை. ஆயினும் இலங்கை ஜனநாயக நடைமுறைகளை உரிய வகையில் பேணிச் செயற்படுவதிலேயே ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் அந்தச்சலுகையை நிறுத்தாது தொடர்ந்தும் இலங்கைக்கு வழங்குவது தங்கியுள்ளது. தற்போதைய இலங்கை அரசின் நடை முறைப் போக்கால் அந்த நாடுகள் குறிப்பிட்ட சலுகையை எதிர்காலத்தில் முற்று முழுதாக நிறுத்திக் கொள்ளும் அபாயம் ஏற்பட இடமுண்டு. எமது நாட்டு மக்களது வாழ்வியல் சுபீட்சம் மேற்குலக நாடுகளின் சந்தை வாய்ப்புக்களிலேயே தங்கியுள்ளது என்பதை உணராமல் எமது நாட்டு ஆளும் தரப்பினர் சிலர் மேற்குலக நாடுகளுக்குச் சண்டித்தனம் காட்டும் விதத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்களைத் திருப்திப்படுத்தும் விதத்தில் செயற்பட்டால் மாத்திரமே நாம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகள் மேற்கொள்வதை ஊக்குவிக்க இயலும். இருக்கும் முதலீட்டாளர்களையே வெளியேற வைக்கும் விதத்தில் செயற்பட்டு வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்க இயலாது. அத்தகைய போக்கை மாற்றிக் கொள்ளாமல், அமைச்சுக்களையும், அவற்றுக்கான அமைச்சர்களையும் புதிது புதிதாக உருவாக்கிக் கொள்வதால் பயனேதும் விளைந்து விடப்போவதில்லை.

உல்லாசப் பயணத்துறையை ஊக்குவித்து, அதனை அபிவிருத்தி செய்வது அரசின் மிக முக்கிய குறிக்கோள்களில் ஒன்று. ஆயினும் கடந்த 2011 ஆம் ஆண்டில் வெளிநாட்டு உல்லாசப்பயணத்துறை மூலம் நாடு ஈட்டிக்கொண்ட வெளிநாட்டுச் செலாவணி காலப்போக்கில் வீழ்ச்சி கண்டு வருவதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அந்த வகையில் அரசின் இன்றைய அரசியல் அடிப்படையிலான பொருளாதார நோக்கு மற்றும் செயற்பாடு என்பனவே பிரச்சினைக்கு உரியதொன்றாக இருந்து வருகிறது. அமைச்சரவையை மாற்றி அமைப்பதன் மூலம் மட்டுமே இதற்குத் தீர்வு கண்டுவிட இயலாது. அது மட்டுமன்றி அண்மைய அமைச்சரவை மாற்றத்தில் பெரும் வேறுபாடு எதனையும் குறிப்பிட்டுக் கூற இயலாதுள்ளது. அந்த வகையில் இது அரசியல் தேவை காரணமாக மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றமொன்று என்றே கருதவேண்டியுள்ளது.

'மலையைக் கெல்லி எலியைப் பிடித்தமை போன்று' என்றொரு முதுமொழி வழக்கிலுண்டு. இது அதனையொத்த ஒன்றல்ல. இங்கு பிடிக்கப்பட்டுள்ளது இரத்தத்தை உறிஞ்சும் அட்டையொன்றே. இந்த நாட்டின் பொது மக்களது இரத்தத்தை உறிஞ்சியே அமைச்சரவையை விரிவுபடுத்தி செயற்பட வைக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சர்களதும், அவர்களது உதவியாளர்களதும் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்த இந்த நாட்டு பொது மக்களது பணமே செலவிடப்படவுள்ளது. இது இந்த நாட்டுப் பொதுமக்கள் தலை மீது வாழ்க்கைச் சுமை மேன்மேலும் சுமத்தப்பட வழிவகுக்கிறதே அன்றி இதனால் வேறேதும் பயன் கிட்டப் போவதில்லை.

## அரச அதிபராவதே இலக்கு

யாழ். மாவட்டத்தில் கலைத்துறையில் முதலிடம் பெற்ற மதுசா



விடாமுயற்சியுடன் கடின உழைப்பு இருக்குமாயின் வெற்றி பெறலாம். எதிர்காலத்தில் அரச அதிபர் ஆகவேண்டும் என்பதே எனது இலக்கு. இவ்வாறு கூறுகிறார் கலைத் துறையில் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை பெற்ற மாணவி மதுசா சிவனேசன்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் கலைப்பிரிவில் கற்று, கடந்தமுறை நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும், அகில இலங்கை ரீதியில் 10 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கற்றேன். பின்னர் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். எனது கல்விக்கு எனது அம்மா உதவியாக இருந்தார். இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். பாடசாலையில் கற்பவற்றை உடனுக்குடன் வீட்டில் படித்து வந்தேன். அவ்வாறு கற்றதன் மூலமும், சுய ஈடுபாடு மூலமாகவும் எமது கல்வியிலே பெறுபேற்றை உயர்த்திக் கொள்ள முடியும். தன்னம்பிக்கை விடாமுயற்சியுடன் கடின உழைப்பை மேற்கொண்டால் வெற்றிபெற முடியும். மாணவர் பருவத்தை வீணடிக்காது முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.- என்றார். (ம-4)

## பேராசிரியராக வரவேண்டும் என்பதே எனது இலக்கு

வவுனியா மாவட்டத்தில் கலைப்பிரிவில் முதலிடம் பெற்ற சர்மினா பாருக்



பாடசாலையில் மேலதிக வகுப்புக்களை எனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டேன். கலைத்துறையில் பேராசிரியாக வரவேண்டும் என்பதே எனது இலக்கு என்கிறார் வவுனியா மாவட்டத்தில் கலைப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி சர்மினா பாரூக்.

இவர் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பயின்று ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் இடத்தையும், அகில இலங்கையில் 38 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

''எனது கல்வியைத் தொடர்வதற்கு பெற்றோரும், ஆசிரியரும் உதவியிருந்தனர். பாடசாலையில் மட்டுமே கல்வி கற்றேன். தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லவில்லை. எதிர்காலத்தில் கலைத்துறையில் பேராசிரியராக வரவேண்டும் என்பதே எனது இலக்கு. மாவட்ட மட்டத்தில் கலைப்பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற மாணவரும் எனது பாடசாலையிலேயே கல்வி பயின்றார். இது பெருமை தருகிறது'' என்று அவர் மேலும் கூறினார். (ம-4)

## பரணியில் அபிஷேகம்

சுழிபுரம்,பெப்.4

பண்ணாகம் ஆலடி வைரவப் பெருமான் ஆலயத்தில் மாதம் தோறும் வரும் பரணி தினத்தில் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளுடன் அன்னதான நிகழ்வும் நடைபெற்று வருகின்றது.

பண்ணாகம் கிராம பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு மாதம் தோறும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

நூற்றுக்கணக்கானவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர். (ம-28)

## இலவசப் பண்ணிசை வகுப்புக்கள்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்ப்பாணம் சிவத்தொண்டன் நிலைய ஆதரவுடன் இலவச தேவார பண்ணிசை வகுப்புக்களை நடத்துகின்றது. வட இலங்கை சங்கீத சபையினதும் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினதும் பாடவிதானத்துக்கு அமைவாக இந்த வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

யாழ். சிவத்தொண்டன் நிலைய நாயன்மார் மண்டபத்தில் சனி,ஞாயிறு தினங்களில் மாலை 4.30 மணிக்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

கலாபூஷணம் கே.எஸ்.ஆர் திருஞானசம்பந்தனால் இந்தப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. வகுப்புக்களில் ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம் என அமைப்பாளர் சி. கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார். (3)



கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு பாடசாலையில் கற்கும் செவிப்புலன், விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான மரதன் ஓட்டம் அண்மையில் நடைபெற்றது. இதில் பெண்களுக்கான போட்டியின் போது பாய்ந்தோடும் வீராங்கனைகள். (ஙு-4)

# அரையிறுதிக்கு கே.ஸி.ஸி.ஸி

வலி.வடக்கு, பெப்.4

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் மட்டுப்படுத்திய30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதி ஆட்டமொன்றில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 6 இலக்குகளினால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

கொக்குவில் இந்துக் கல்லூரிமைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற காலிறுதி ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகமும் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் 29.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் லவகாந் 25 ஓட்டங்களையும், கோபி 20 ஓட்டங்களையும், பிரபு 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 22 ஓட்டங்கள் பெறப்பட்டன.

கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பவிதரன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், பங்குஜன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், ராகுலன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், வல்லவக்குமரன் 26 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கினையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 21.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

அந்த அணி சார்பாக சத்தியன் 58 ஓட்டங்களையும், பங்குஜன் 35 ஓட்டங்களையும், ராகுலன் 13 ஓட்டங்களையும், உமாநாத் 12 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 8 ஓட்டங்கள் கிடைத்தன.

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லவன் 1.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும், தர்சிகன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

(ஙு-86)

# மணியிடம் மண் கௌவியது காமாட்சி



யாழ்ப்பாணம்,பெப்.4

யாழ்.மாவட்ட கரம் சங்கம் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்,பெண் இருபாலாருக்குமான கரம் சுற்றுப் போட்டியில் ஆண்களுக்கான கரம் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்தவாரம் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மணி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

மூன்று ஒற்றையர் ஆட்டங்களையும், இரண்டு இரட்டையர் ஆட்டங்களையும் கொண்டதாக இறுதிப்போட்டி அமைந்தது. இதில் முதலாவது ஒற்றையர் ஆட்டத்தில் மணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பிரியதர்சனை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செந்தூரன் மோதிக் கொண்டார். இதில் பிரியதர்சன் 25:17 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டவது ஒற்றையர் ஆட்டத்தில் மணிவிளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தஜெயகாந்தனை எதிர்த்து ஸ்ரீ காமாட்சி விளையாட்டுக் கழக வீரர் ஜெசாந்த் மோதிக் கொண்டர்.

இதில் ஜெயகாந்தன் 29:18 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் ஆட்டத்தில் மணி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சற்குண மூர்த்தியை எதிர்த்து ஸ்ரீகாமாட்சி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த சோபன் மோதிக்கொண்டார்.

இதில் சற்குணமூர்த்தி 25:0 என்றபுள்ளி அடிப்படையில் அபார வெற்றிபெற்றார்.

போட்டியின் முதல் மூன்று ஒற்றையர் சுற்றுக்களும் மணி விளையாட்டுக்கழகத்தின் வசமானதால் அந்த அணி வெற்றிபெற்று சம்பியனானது. (ஙு-23)

## இன்றைய ஆட்டங்கள்



இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**பிற்பகல் 3மணி**

கல்வளை விநாயகர் வி.க. எதிர் புதுமட வைகறை வி.க.

**பிற்பகல் 4 மணி**

மயிலிட்டி கண்ணகி வி.க. எதிர் கைதடி துர்க்கா வி.க.

★ ★ ★

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டி இன்று திங்கட் கிழமை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.

★ ★ ★

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டம், கபடிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

★ ★ ★

வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான கபடிப் போட்டி இன்று திங்கட் கிழமை புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

★ ★ ★

வவுனியாப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டப் போட்டி. இன்று திங்கட் கிழமை வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இதில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்கள் மோதவுள்ளன.

★ ★ ★

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண் ,பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டி இன்று திங்கட் கிழமை நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

★ ★ ★

கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லே போட்டி இன்று திங்கட்கிழமை உருத்திரபுரம் உழவர் ஒன்றிய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டி இன்று திங்கட்கிழமை கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் 100 ஆவது ஆட்டம் இன்று திங்கட்கிழமை ஸ்கந்தா கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் ஓல்கோல்ட்ஸ் விளையாட்டு கழக அணியை எதிர்த்து ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ஙு-7-9-23-100)

# மீண்டும் அசத்தியது ஆஸி.



ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கும் ஆஸ்திரேலியா அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட் டித் தொடரின் இரண்டாவது போட்டி யில் ஆஸ்தி ரேலியா அணி 54 ஓட்டங்க ளால் வெற்றி பெற் றுள்ளது. பேர்த் மைதானத் தில் இடம் பெற்ற இந்தப் போட்டி யில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தி யத் தீவுகள் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித் தது.

இதன் படி முதலில் துடுப் பெடுத்தாடிய ஆஸ்தி ரேலியா அணி 50 பந்துப்பரி மாற்றங் களில் 7 இலக்கு களை இழந்து 266 ஓட்டங்க ளைப் பெற் றது. முதலா வது இலக்கை 16 ஓட்டங்க ளுக்கு இழந்த ஆஸ்தி ரேலிய அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக இலக்கு களை இழந்து தடுமாறியி ருந்தது. துடுப்பாட் டத்தில் ஆஸ்தி ரேலிய அணி சார் பாக களமிறங்கிய ஹவாஜா 14 பந்து களில் 3 ஓட் டங்களைப் பெற்ற வேளை ரோச் சின் பந்தில் ஆட்டமிழந்தார். அணி 25 ஓட்டங்களைப் பெற்ற வேளை பின்ச் 22 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 11 ஓட்டங்களுடன் ஹோல்டரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த கியூஹிஸ்-கிளார்க் ஜோடி நிதானமாக ஆடிய போதும் கியூஹிஸ் 22 பந்துகளில் 2 பவுண்டரிகள் அடங்கலாக 21 ஓட்டங்களைப் பெற்று சமியின் பந்தில் பிராவோவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் கிளார்க்குடன் இணைந்த பெய்லி சிறப்பாக ஆட வே எதிர்பாராத விதமாக கிளார்க் 19 பந்துகளில் 4 பவுண்டரி அடங்கலாக 16 ஓட்டங்களுடன் பிராவோவினால் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டார். பின்னர் தொடர்ந்து இறங்கிய வேட் 28 பந்துகளில் 16 ஓட்டங்களும், மக்ஸ்வெல் ஓட்டமெதனையும் பெறாம லும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மறுமுனையில் ஆடிய பெய்லியுடன் இணைந்தார் பவுல்க்னர், இருவரும் சிறப்பாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர். பவுல்க்னர் 67 பந்துகளில் 3 பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை சமியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். பெய்லி யுடன் களத்தில் இணைந்தார் ஜோன்சன் இருவரும் வேக மாக ஓட்டங்களைக் குவித்தனர். 50 பந்துப் பரிமாற்ற முடிவில் ஆஸ்திரேலியா அணி 7 இலக்கு களை இழந்து 266 ஓட்டங்க ளைப் பெற்றது. இறுதிவரை ஆட்ட மிழக்கா மல் பெய்லி 110 பந்துகளில் 10 பவுண் டரி 4 சிக்ஸர்கள் அடங்கலாக 125 ஓட்டங்களுடனும், ஜோன்சன் 17 பந்துகளில் 16 ஓட்டங் களுடனும் களத்தில் இருந்தனர்.



பந்துவீச்சில் மேற் கிந்தியத்தீவுகள் அணி சார்பாக சமி 10 பந்துப் பரிமாற்றங்களில் 48 ஓட்டங்களுக்கு 3 இலக்கு களையும் ரோச், ஹோல்டர், பிராவோ, நரேன் ஆகி யோர் தலா ஒவ்வொரு இலக்கை யும் கைப்பற்றினர்.

267 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப் பெடுத்தாடிய மேற்கிந் தியத்தீவு கள் அணி 38.1 பந்துப் பரிமாற்றங் களில் சகல இலக்குகளையும் இழந்து தோல்வி அடைந்தது.



முதலாவது இலக்கை 10 ஓட்டங்களுக்கே இழந்தது. அனைவரா லும் எதிர்பார்க் கப்பட்ட அதி ரடி வீரர் கெய்ல் 7 ஓட்டங்களு டன் ஆட்டமிழந்து, அனைவரை யும் ஏமாற்றினார். தொடர்ந்து அதே பந்துப்பரிமாற் றத்தில் 2 ஆவது இலக்கையும் இழந் தது. 2 இலக்குகளை இழந்து 10 ஓட்டங்களை யும் 3 இலக்குக்களை இழந்து 33 ஓட்டங்களையும் பெற்றுத் தடு மாறியபோதிலும், பவலுடன் இணைந்து பிராவோ சிறப்பாக ஆடினார். இருந்தும் பிராவோ 56 பந்துகளில் 4 பவுண்டரிகள் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 45 ஓட்டங் களைப் பெற்று மாக்ஸ் வெல்லின் பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வீரர்கள் எவரும் சிறப்பாகஆடாதகாரணத்தால் மேற் கிந்தியத்தீவுகள் அணி 212 ஓட்டங்க ளுக்கு சகல இலக்குகளை யும் இழந்தது. மேற்கிந்தியத்தீவுகள் அணி சார்பாக பவல் 90 பந்துகளில் 10 பவுண்டரி 2 சிக்ஸர் அடங் கலாக 83 ஓட்டங்களையும், நரேன் 6 பந்து களில் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 24 ஓட்டங் களையும் பெற்றனர்.

ஆஸ்திரேலியா அணி வீரர் ஸ்ராக் முதல் 4 இலக்குகளையும் எல்.பி.டபிள்யூ முறையில் கைப்பற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா அணி சார்பாக ஸ்ராக் 8 பந்துப்பரிமாற்றங்களில் 32 ஓட்டங்களுக்கு 5 இலக்கு களையும் மக்ஸ்வெல் 8.1 பந்துபரிமாற்றங்களில் 63 ஓட் டங்களுக்கு 4 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஆஸ்திரே லியா அணியின் பெய்லி தெரிவானார். (ந)

# சம்பியனை வீழ்த்தி இலங்கை சாதனை

இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்ற பரபரப்பான ஆட்டத்தில் இலங்கை மகளிர் அணி இங்கிலாந்து மகளிர் அணியை இறுதிப் பந்தில் வெற்றிகொண்டது.

மும்பையில் நடை பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சி யில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர் மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கி லாந்து அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்கு களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்பம் முதல் இலங்கையின் சிறப்பான பந்துவீச்சுக்குத் தடுமாறிய இங்கிலாந்து அணி 3 இலக்குகளை இழந்து 29 ஓட்டங்களுடனும், 5 இலக்குகளை இழந்து 114 ஓட்டங்களுடனும் தடுமாறியது. ஆனால் இறுதி 10 பந்துப்பரிமாற்றங்களில் 94 ஓட்டங்களைக் குவித்த இங்கிலாந்து அணி சிறப்பான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து மகளிர் அணி சார்பாக ஜென்னி கண் 51 ஓட்டங்களையும், அமி ஜோன்ஸ் 41 ஓட்டங்களையும், ஹீதர் நைட் 38 ஓட்டங் களையும், அர்ரன் பிரின்டில் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை மகளிர் அணி சார்பாக இஷானி கௌஷல்யா, சாமனி செனவிரத்ன, ஷஷிகலா சிரிவர்தன ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சன்டமல்லி டொலவத்த ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

239 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 9 இலக்குகளை இழந்து இறுதிப் பந்தில் வெற்றி இலக்கை அடைந்தது.



மிகச்சிறப்பான ஆரம்பமாக முதலாவது இலக்குக்கு 103 ஓட்டங்களைக் குவித் தது இலங்கை அணி. ஆயி னும் அதன் பின்னர் 5 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களுடன் தடுமாறியது. எனினும் பின் வரிசை வீராங்கனைகள் சிறப் பாக ஆடி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.



துடுப்பாட் டத்தில் இலங்கை மகளிர் அணிசார்பாக சாமரி அத்தப்பத்து 72 பந்துகளில் 62 ஓட் டங்களை யும், அதிரடி யாக ஆடிய இஷானி கௌஷல்யா 41 பந்துகளில் 56 ஓட்டங் களையும், யசோதா மென்டிஸ் 46 ஓட்டங்களை யும், ஷஷிகலா சிரிவர்தன 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து மகளிர் அணி சார்பாக கத்தரின் பிருன்ட், ஜோர்ஜியா எல்விஸ், அர்ரன்பிரின்டில் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.



ஆட்டநாயகியாக இஷானி கௌஷல்யா தெரிவானார்.

இங்கிலாந்துக்கெதிராக இலங்கை மகளிர் அணி பெற்றுக்கொண்ட முதலாவது வெற்றி இதுவாகும். (ந)

# இலங்கையின் சாதனை மீள் ஒளிபரப்பு

இந்தியாவில் நடைபெற்றுவரும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டி களில் நடப்புச் சம்பியன்கள் இங்கிலாந்துக்கு எதிராக இலங்கை மகளிர் அணி பெற்றுக்கொண்ட சாதனை வெற்றி மீள் ஒளிபரப்புச் செய்யப்படவுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபை யின் வேண்டுகோளுக்கு இணங் கவும் அதிக கோரிக்கைகள் காரணமாகவும் சி.எஸ்.என். தொலைக்காட்சியில் இந்தப் போட்டி மீள் ஒளிபரப்புச் செய் யப்படவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள் ளது.

இதன்படி இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டி இலங்கையின் சுதந்திரதினமான இன்று முற்பகல் 10.30 மணிக்கு மீள் ஒளிபரப்புச் செய்யப் படவுள்ளது.

பலமான அணியான இங்கிலாந்து அணி பெற்றுக்கொண்ட 238 ஓட்டங்களுக்குப் பதில ளித்தாடிய இலங்கை அணி இறுதிப் பந்தில் வெற்றியைப் பெற்றுக் கொண் டிருந்தமை குறிப் பிடத்தக்கது.

(ந)

# போராடுகிறது பாகிஸ்தான்

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் மூன்றாவது நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 183 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து ஆடிவருகின்றது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிவரும் பாகிஸ்தான் அணிக்கும் தென்னாபிரிக்க அணிக்குமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நேற்றுமுன்தினம் நியூ வண்டீரிஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்பிரகாரம் முதல் இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 253 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 49 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுச் சகல இலக்குகளையும் இழந்தது.

இதன் பின்னர் தனது 3 ஆவது இன்னிங்ஸுக்கான ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி நேற்று முன்தினம் இலக்கிழப்பின்றி, 45 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மூன்றாவது நாள் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. 82 ஓட்டங்களுக்கு முதலாவது இலக்கை இழந்தது தென்னாபிரிக்க அணி. பீற்றர்சன் 27 ஓட்டங்களுடன் உமார்குல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் அந்த அணி 87 ஓட்டங்களைப் பெற்றவேளை, சிமித் 52 ஓட்டங்களுடன் உமார்குல்லின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து அம்லாவுடன் இணைந்த கலிஸ் 7 ஓட்டங்களை மாத்திரமே பெற்று அஜ்மலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். பின்னர் இணைந்த அம்லா, டி. வில்லியர்ஸுடன் இணைந்து சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். 275 ஓட்டங்களை பெற்றதும் ஆட்டத்தை இடைநிறுத்தியது தென்னாபிரிக்க அணி. அம்லா 74 ஓட்டங்களுடனும், டி. வில்லியர்ஸ் 103 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

480 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு இரண்டாவது இன்னிங்ஸைத் தொடங்கிய பாகிஸ்தான் அணி, 7 ஓட்டங்களைப் பெற்றபோது, தனது முதலாவது இலக்கை இழந்தது. கபீஸ் 2 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். 64 ஓட்டங்களை அந்த அணி பெற்றவேளை, ஜம்சாட் 46 ஓட்டங்களைப் பெற்று ஸ்ரெயினின் பந்தில் ஆட்டமிழந்தார். அந்த அணி 70 ஓட்டங்களைப் பெற்றதும் அஸார் அலி 18 ஓட்டங்களுடன் கலிஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து 82 ஓட்டங்கள் பெற்ற நிலையில் யூனிஸ்கான் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தற்போது களத்தில் மிஸ்பா 44 ஓட்டங்களுடனும், சஹிப் 53 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

போட்டியின் 4 ஆவது நாள் ஆட்டம் இன்று இடம்பெறும். (நி)


## BEACON
-யாழ் நகர்-
**A/L Day Class**
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
06.02.2013
புதன் காலை 8 மணி

## NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**A/L Day Class**
கலை, வர்த்தகம்
ஆரம்பம்
05.02.2013
செவ்வாய் காலை 7 மணி

advt@uthayan.com
0215671111

## Personal Class (கணினி)
*உங்கள் வீடுகளில்வந்து கற்பிக்கப்படும்
*Ms Office, Internet & E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களிற்கான பயிற்சிநெறிகள்.
* சான்றிதழ்கள் வழங்கப்படும்.
* குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாகக் கற்பிக்கப்படும். ஆசிரியர்:KRC
TP:0779672038
நல்லூர்

## SUBRA A/L DAY CLASS
கலை,வர்த்தக கணித விஞ்ஞானப் பிரிவுகள்
ஆரம்பம் நாளை
(05/02/2013) செவ்வாய்
காலை 07.00 மணிக்கு.
(C/6198)(3.8)


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசக்குருக்கள் கிருபானந்தசர்மா



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், வவுனியா பட்டாணிச்சூரைப் வதிவிடமாகக் கொண்ட கார்த்திகேசக்குருக்கள் கிருபானந்தசர்மா நேற்று (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் வத்சலாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசக்குருக்கள்-தெய்வநாயகி அம்மா தம்பதியரின் மகனும், விஸ்வநாதசர்மா-கமலாதேவி தம்பதியரின் மருமகனும், கௌசிகா, கோபிநாத் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (05.02.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் ககந்தரோடை வ்ற்றாக்கை அம்மன் கோயிலடியில் இடம்பெற்று, பூதவுடல் சங்கம்புலவு மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

385, சுப்பிரமணிய வீதி,
கந்தரோடை, சுன்னாகம்.
271 C, மன்னார் வீதி,
பட்டாணிச்சூர், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. இல.:
021 2240299, 077 3961884


## மணல் மண் வேண்டுமா?
கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச்சிறந்த மண் வேண்டுமா? இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா? உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.
4½ டிராக்டர் 19,500/=
தொடர்பு:(ராம்)
0726378546
(29219)(3.14)

## மாடி வீடு வாடகைக்கு உண்டு
6 Rooms,2Halls,2 Kitchens, 3Bathrooms,1Toilet,1Servent Toilet,1Store room,Car Garage என்பவற்றைக் கொண்ட மேல் மாடிவீடு வாடகைக்கு உண்டு. (மேல்தளம், கீழ்த்தளம் தனியாக பிரித்துக் கொடுக்கப்படும்).
393/17 ,கோயில் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம்.
தொடர்பு-0776578067
(28141)(3.8)

## A/L பரீட்சை முடிவின் பின்னர்...
வெளிநாட்டில் கல்வி பயில விரும்பினால் பகுதிநேரமாக உழைத்துக்கொண்டே கல்வி கற்கலாம். நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, மலேசியா, போலந்து, சைப்பிரஸ் நாடுகளுக்குரிய விசா ஆலோசனை.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0212219016
(29221)
எல்லா நாள்களும் காலை 8.30 - பி.ப 6.30 வரை திறந்திருக்கும்.

## NEFAD Foundation Ltd.
### வேலை வாய்ப்பு
யப்பானிய தொழில் நுட்பத்தில், தரம் வாய்ந்த மீன் வலைகளை உருவாக்கி குறுகிய காலத்தில் மீனவர்களின் நன்மதிப்பைப் பெற்ற "நெவாட்" நிறுவனத்துடன் இணைந்து பணிபுரிய விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

| பதவி | உற்பத்தி மேற்பார்வையாளர் | விற்பனைப்பிரதிநிதி | இயந்திர இயக்குனர் |
|---|---|---|---|
| எண்ணிக்கை | ஒன்று | இரண்டு | நான்கு |
| பால் | ஆண் | ஆண் | ஆண் |
| வயது | 35 இற்கு மேல் | 20 இற்கு மேல் | 18-25இற்கு இடையில் |
| கல்வி | A/L வரை | A/L | O/L / A/L |
| மேலதிக தகமை | இயந்திரம் இயக்குதலில் முன்னனுபவம் | முன்னனுபவம் | - |
| நேர்முகம் | 06.02,13 காலை 10 மணி | 06.02.13 காலை 11 மணி | 07.02.13 காலை 10 மணி |

Deputy General Manager
NEFAD Foundation Ltd. No 647, Beach Road, Gurunagar,Jaffna.
TP : 021-2224781, 021-2228919 / E-mail: nefadfishnets@yahoo.com

## சல்லிக்கற்கள் விற்பனைக்கு
கருங்கல் (6x9), சல்லிகற்கள்,கிரவல்,கட்டுமண்,செங்கல் என்பன வவுனியா,கிளிநொச்சி,யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு தரமான பொருட்கள் குறைந்த விலையில் விநியோகம் செய்துதரப்படும்





தொடர்புகளுக்கு: 077 4169026

## THE SCIENCE POINT
கன்னாதிட்டி வீதி, யாழ். நகர்.
**CHEMISTRY**
BY:- அன்பு
PHYSICAL
புதிய பிரிவு II WED5-6, SUN 3.30 - 4.30
புதிய பிரிவு I SAT, SUN 11.15 -12.30
INORGANIC
புதிய பிரிவு SAT, SUN 12.30 - 1.30
THERMO
புதிய பிரிவு MON, THURS 5-6
BASIC PAPER
WED, THURS 6-7
மீள் பரிட்சார்த்திகளுக்கு சகல அலகுகள் கற்பதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

## After A/L STUDY in UK
▪G.C.E O/L தகைமை போதுமானது.
▪பகுதி நேர வேலைவாய்ப்புடன் கூடிய பட்டப்படிப்பு.
▪மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்
வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும் உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது.
கடந்த சில மாதங்களில் இவ்வாறு எம்நிறுவனத்தினூடாக LONDON சென்ற மாணவர்கள் விபரம்...





City&Guilds நிறுவனத்தில் ஆசிரியப்பயிற்சிபெற்ற பிரபல மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில்,
A1 ⇨ திருமணமாகி LONDON செல்பவர்களிற்கான ஆங்கில வகுப்புக்கள் மற்றும்
B1 ⇨ STUDENT VISA முறையில் LONDON செல்லும் மாணவர்களிற்கான ஆங்கில வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
கல்லூரிக்கட்டணம் மற்றும் Sponsor ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவு செய்கின்றது.
முதல் இணையும் ஐந்து FIRST CLASS மாணவர்களிற்கு மட்டுமே இந்த அரிய சந்தர்ப்பம்.
T.P: 0779 265 447 April intake started
WORLD EDUCATION CONSULTANCY
Sangathanai Chavakachcheri.
W E C

## விக்னா
### கல்வி நிறுவனம்
52,ஸ்ரான்லி வீதி,யாழ்.
**A/L Day Class** கலைப்பிரிவு
ஆரம்பம்-05.02.2013
8 மணி

| | |
|---|---|
| Eco. சுதாகர் | Tam. குழந்தை |
| Log. வாகீசன் | H/c. N.T.தரன் |
| Geo. தினேஸ் | Hist. தாஸ் |
| P/Sci. ஸ்ரீரங்கநாத் | Chri. சுயந்தன் |
| Dram. சுஜீதரன் | H/Sci. மஜீபன் |

## தேவை
கிளிநொச்சியில் அமைந்துள்ள காரியாலயம் ஒன்றுக்கு பணி செய்யக்கூடிய ஆண் ஒருவர் தேவை (கிளிநொச்சியில் வசிப்பவர் விரும்பத்தக்கது).
(27650)(3.8) தொடர்பு-0774169026

## THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA
DAY CLASS BIOLOGY
ஆரம்பம்
இன்று [04.02.2013] திங்கள்
திங்கள் to வெள்ளி 6.45-8 AM
*ஒவ்வொரு சனியும் பரீட்சை நடைபெறும்.
BY சு.பொன்திவாகரன்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.